சத்திரபுத்திரர் கதை

(வசனச் சுருக்கமும், கதைப் பாடலும்)

பதிப்பாசிரியர்
லை பிஎல். முத்தையா

UG4234
R007B06

சித்திரபுத்திரர் கதை

(வசனச் சுருக்கமும், கதைப் பாடலும்)

பதிப்பாசிரியர்

முல்லை பிஎல். முத்தையா

தேன்மழைப் பதிப்பகம்
34, கொத்தவால் தெரு, ஆலந்தூர்
சென்னை - 600 016

முதற் பதிப்பு : ஆகஸ்ட்-1994

தேன்மழை - 107

© பதிப்பகத்தாருக்கு

விலை : ரூ. 18-00

அச்சிட்டோர் :
ஸ்ரீ வெங்கடேஸ்வரா அச்சகம்,
7/40, கிழக்குச் செட்டித் தெரு,
பரங்கிமலை, சென்னை - 16.

சித்திரபுத்திரர் யார்?

- உயிர் இனங்கள் அனைத்துக்கும் ஒரு கால வரையறை உண்டு.

- அவ்வாறே, கட்டிடம், மரம், செடி, கொடி, நீர், நிலம் முதலானவற்றிற்கும் குறிப்பிட்ட காலம் உண்டு.

- மனிதர்களின் வாழ்நாள் முடிந்ததும், எமன் தன் தூதர்களை அனுப்பி அழைத்து வரச் செய்வதாக ஐதீகம். தொன்று தொட்டு வருவதாக புராணங்கள் கூறுகின்றன.

- முனிவர்கள், ஞானிகள், யோகிகள், அருளாளர்கள் முதலானோர் தங்களின் இறுதிக் காலத்தை தாங்களே முன்னதாகவே உணர்ந்து கொள்வார்கள் என்பதையும் காண்கிறோம்.

- என் பாட்டனார் வித்துவான் நாகப்ப செட்டியார், 'நாளை தம்முடைய இறுதி நாள்' என்பதை முதல் நாள் இரவே, என் பாட்டியிடம் கூறினார்.

- எமனுக்கு வேலைப் பளு அதிகரித்து வருவதைக் கருதி, இறைவன் சித்திரபுத்திரரை உருவாக்கினார். (அரசு கூடுதல் செயலாளரை நியமிப்பது போல்) எனவே, சித்திர புத்திரரின் நியமனத்தால் எமனுடைய வேலை எளிதாயிற்று.

- சித்திரபுத்திரர் கதை பிரசித்தமானது; சுவையானது.

- ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில், ஏடும் எழுத்தாணியும் மற்றும் பல பொருளைப் படைத்து வழிபாடு செய்து வருவது வழக்கம்.

- தான தருமங்கள் நிறையச் செய்துவந்த அமராவதி அம்மை, சித்திர புத்திரரை மதிக்காமல் அலட்சியப் படுத்தினார், அதனால் அவள் பல துன்பங்களுக்கு ஆளானார். இக்கதையும் பிற்பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது.

- இந்நூலில் சித்திரபுத்திரரின் தோற்றம், மற்றும் இந்திரன், இந்திராணி, மார்க்கண்டேயன், கௌதமர், அகலிகை முதலான கதைகளும் கூறப்பட்டுள்ளன.

- என் பாட்டனார் வித்துவான் நாகப்ப செட்டியாரின் நூலகக் குவியலிலிருந்து இந்நூல் கிடைத்தது.

- இது *1915*ம்-ஆண்டு அச்சிடப்பட்டிருக்கிறது.

- புகழேந்திப் புலவர் இரண்டாமவரால் பாடப் பெற்றது எனக் காணப்படுகிறது.

- வசனச் சுருக்கமும் பாடலும் இணைந்த நூல் இது.

- இந்நூலை வெளியிடும் தேன்மழைப் பதிப்பக உரிமையாளர் திரு. வெள்ளையப்பன் அவர்களுக்கு என் நன்றி.

முல்லை பிஎல். முத்தையா

323/10, கதிரவன் காலனி
அண்ணாநகர் மேற்கு,
சென்னை-*600 040*.

குறிப்பு

- இக்கதைப் பாடலுக்கு இடையிடையே 'வசனம்' என்ற தலைப்பில், சில வரிகளில் கதையின் சுருக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவற்றை எல்லாம் ஒருங்கே திரட்டி இங்கு தரப்பட்டுள்ளது. படிப்பவர்களுக்கு எளிதாகப் புரியும்.

- தவிர, ஆங்காங்கே 'விருத்தம்' என்ற பெயரில் பல விருத்தங்கள் காணப்படுகின்றன அவற்றை அங்கங்கே படித்து தெரிந்து கொள்வதற்கு அப்படியே கொடுக்கப்பட்டுள்ளன.

- கதைச் சுருக்கம் *1915*ல் பதிப்பிக்கப்பட்டது.

- எனவே, அந்த நடை எப்படி அமைந்திருக்கிறது என்பதை வாசகர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதால், மூலப்பிரதியில் உள்ளபடியே தரப்பட்டுள்ளது.

முல்லை பிஎல். முத்தையா
பதிப்பாசிரியர்

சித்திர புத்திரர் கதை

[கதைச் சுருக்கம்]

○ மூலப் பிரதியில் உள்ளபடி, இங்கே கூறப்படுகிறது.

○ இதை முதலில் படித்து விட்டு பிறகு, கதைப் பாடலைப் படிப்பது சுவையாக இருக்கும்.

○ கைலாசத்தில் சுவாமியும் பரமேசுவரியும் முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் மற்றும் உள்ள தபோதனர்களும் நிறைந்திருக்கும் போது, அண்டபுவனங்கள் எல்லாம் பாவ புண்ணிய பலன் தெரிய வேண்டி நம்முடைய குமாரர்கள் இருவராலும் ஆக வேண்டிய காரியங்கள் அநேகம் இருக்கின்றபடியால், மற்றும் உள்ள பேர்கள் இதற்கு ஆகத் தக்கவர்கள் யாரும் இல்லை என்று சுவாமி பரமேசுவரர் தாமே யோசித்து, உமையை அழைத்துத் தங்கப் பலகை எடுத்துவரச் சொல்லி, உரு அமைக்க அதை உமையவள் கண்டு அதிசயப்பட்டுக் கருவுருவாய்ப் பேசும்படி கிருபை பாலிக்க வேண்டும் என்று இரக்க, அப்படியே கிருபை செய்து மந்திரம் உபதேசித்து, சித்திரபுத்திரன் என்று பேர் வைத்து, ஆடை ஆபரணங் களைப் பூட்டி, மகனை உச்சி முகந்து அண்ட புவனங் களில் உண்டான முன்னாள் கணக்கும் கருவூலமும், விஷ்ணு பிரம்ம முதலானவர்களிடமுள்ள கருவூலமும் பாவ புண்ணிய பல கணக்கும் கொடுக்க, உமையாகிய பரமேசு வரியும் வேண்டத்தக்க வரங்களும் கொடுத்து, தினமும் நடக்கிற பாவ புண்ணியம் முதலான பல கணக்கை நமக்கு அறிவியும் என்று உத்தரவு கொடுத்த படியே, சித்திர புத்தி

ரரும் கைலயங்கிரி வாசரான பரமேசுவரர் சந்நிதானத்தில் இருந்து கொண்டு கணக்கெழுதி வந்தார். இப்படிக் கைலாசத்தில் நடந்து வரும் போது, தேவேந்திரன் மகவு ஆசை கொண்டு வேணத்தக்க தருமங்கள் செய்து ஈசுவரனை நோக்கி, இந்திராணியுடன் தவம் பண்ணுகிற விஸ் தாரத்தை இனிமேல் சொல்லுகிறோம் ஒரே மனதாய்க் கேட்பீராக.

○ எப்படி என்றால், தேவேந்திரன் தபசு செய்யப் புறப்பட்டு வருகிற வழியிலே கௌதமரிஷி பத்தினியான அகலிகை ரிஷிக்கு மலர் கொய்ய வந்த இடத்தில், இந்திரன் அவ ளுடைய அழகு சவுந்தரியங்களைக் கண்டு, தவம் மறந்து, புத்திர நினைவும் விட்டு மையல் கொண்டு அந்தப் பெண் வாழுகின்ற இடத்துக்குப் போய்க் கோழியாய் நின்று கூவி னான். ரிஷியும் பொழுது விடிந்தது என்று கங்கைக்கு வரும் போது, கங்கை நித்திரை செய்கிறதைப் பார்த்து, நந்தவனம் சென்று புஷ்ப விரிவு பார்ப்போம் என்று செல்லும்போது, புஷ்பங்கள் எல்லாம் அரும்பு மயமாய் இருப்பதைக் கண்டு இது ஒரு காரணமாய் இருக்க வேண்டும் என்று தன்னுடைய ஆசிரமத்துக்கு வந்து கொண்டிருக்கை யில் இந்திரன் அகலிகை இடத்தில் தன்னுடைய விரக தாபத்தைச் சொல்லுகிற நேரத்தில் ரிஷி வருகிற ஜாடையை இந்திரன் தெரிந்து பூனை வேடம் போட்டதை அவர் ஞான திருஷ்டியால் பார்த்து, ''ஆரடா நீ? உன்னுடைய பேரும் ஊரும் வந்ததுவும் சொல்'' என்று கேட்க, அடியேன் தேவேந்திரன் என்று பெயரைச் சொல்லி, இந்த வருடம் பஞ்சாங்கப் பலன் கேட்க வந்தேன் என்று திருட்டுத் தன மாய்ச் சொன்னதைத் தெரிந்து, இவன் அகலியைக் கெடுக்க வந்தவனாய் காண்கிறது என்று மகா கோபத்துடனே ரிஷியானவர் கண்கள் இரண்டும் நெருப்புப் பொறி பறக்கும்படி பார்த்து, தன் தாரம் இருக்க அயல் தாரத்துக்கு ஆசைப் பட்டதினாலே உன் சரீரமெல்லாம் ஆயிரம் யோனியாக வெடிக்கக் கடவது என்று சாபம் இட்டார். உடனே இந்திரனும் பயந்து நடுநடுங்கி மகரிஷியைத் தெண்டனிட்டு எளியேன் செய்த குற்றம் பொறுக்க வேண் டும் என்று நமஸ்காரம் செய்ததன் மேல் ரிஷிக்கு, கொஞ்சம் தயை வந்து தாணு மாலயனாகிய சுவாமி கைலயங்கிரி வாசரைப் பூசை செய்தால், இந்த சாபம் அவராலே தீர்ந்து ஆயிரம் யோனியும் ஆயிரம் கண்ணாகும் என்று விடை கொடுக்க, அப்படியே தேவேந்தரன் தன்னுடைய

பட்டணத்துக்கு வந்து சுவாமி கைலயங்கிரிவாசரைப் பூசை செய்து முன் சொன்னபடியே ஆயிரம் கண்ணாகப் பெற்றுக் கொண்டான்.

○ எப்படி என்றால், அகலிகை மற்றொரு புருஷர்களின் வாடை படாதவளானதால் இந்திரன் கண்டு மோகித்த தினாலே இந்தத் தேகம் விட்டு மறு தேகமாக வேண்டிய தற்குக் கருங்கல்லாய்ப் போகக் கடவது என்று சபித்ததி னாலே அகலிகை ரிஷியைத் தோத்திரம்செய்து அடி பணிந்து எனக்கிட்ட சாபம், எப்போது தீருமென்று கேட்க, மகா விஷ்ணுவானவர் அரக்கர் குலம் அறுக்க வேண்டியதற் காக தசரதர் புத்திரனாக ஜனித்து ஸ்ரீராமச்சந்திரன் என் னும் நாமத்துடன் இருக்கும் காலத்தில், விசுவாமித்திரர் தன் வேள்வியைத் தாடகை சிறு நீரால் அழிக்கிற வேதனையை நீக்க வேண்டித் தசரிடத்தில் கேட்டு ஸ்ரீராமனை அழைத் துக்கொண்டு போய்த் தாடகையைச் சங்காரம் செய்து மிதிலையில் சீதையைக் கலியாணம் செய்விக்க ராமனை அழைத்துக் கொண்டு வரும்போது அந்த ராமனுடைய திருப்பாதம் உன் பேரில் பட்டவுடனே பெண் உருவமாகி என்னிடம் வருவாய். அப்போது உன்னைச் சேர்த்துக் கொள்ளுகிறேன் என்று விடை கொடுத்தபடியே சில நாள் சென்று ஸ்ரீராமர் வந்து தாடகையைக் கொன்று விசுவா மித்திரருக்குச் சந்தோஷம் செய்வித்து, மிதிலையில் கலியாணம் செய்ய வரும் வழியில் ஸ்ரீராமனுடைய பாதம் அகலிகையின் பேரிலேபட்டுப் பெண் சொரூபமானதை ஸ்ரீராமர் பார்த்து இதென்ன விதம் என்று விசுவாமித்திர ரைக் கேட்க அகலிகையானவள் நடந்த விருத்தாந்தம் எல்லாம் சொல்ல அப்பால் ஸ்ரீராமமூர்த்தி கௌதம ரிஷி யிடத்துக்குப் போகும்படி உத்தரவு கொடுக்க, அப்படியே ரிஷியிடம் அகலிகை வந்து சேர்ந்து வாழ்ந்து கொண்டிருந் தாள்.

○ அப்பால் நடந்த கதையைச் சொல்லுகிறோம் கேட்பீர் களாக. எப்படி என்றால், சுவாமி கைலயங்கிரி வாசரான பரமேசுவரர் காமதேனுவாகிய பசுவை வரவழைத்துப் புத்திர தவம் செய்த இந்திராணிக்கு நீ போயிருந்து ஒரு புத்திரனை ஈன்று கொடுத்துவா என்று விடை கொடுக்க, அப்போது பசுவானது எனக்கு மோட்சகதி எப்போது என்று கேட்கப் பரமேசுவரரும் அப்போது புத்திரனைப் பெற்றுக் கொடுத்த உடனே பூந்தேர் அனுப்பி

உன்னை இவ்விடம் வரவழைத்துக் கொள்ளுகிறோம் என்று சொல்லி விடை கொடுக்க விடை வாங்கிக் கொண்டு இளங் கன்றாக வேடம் கொண்டு அண்ட புவனங்கள் எல்லாம் இடிபோல முழக்கத் தக்கதாகப் பந்து குதித்தது போல நடந்து இந்திரன் இந்திராணி போன வழியை நோக்கி அவர்கள் இருவரையும் கண்ட உடனே, அவர்கள் இருவரும் பசுவாகிய கன்றைக் கண்டு பரமேசுவரரும் உமையாளும் அனுப்பி வைத்ததாய்க் காணப் படுகிறது என்று ஆனந்தம் கொண்டாடிப் பசுவைக் கட்டி முகந்து தாங்கள் கூடவே கூட்டி வருகிறார்கள். அப்பால் நடக்கிற அதிசயங்களை இனிமேல் விஸ்தாரமாகச் சொல்லுகிறோம்.

○ எப்படி என்றால், இந்திரனும் இந்திராணியும் அதித தவசு செய்து வரம்பெற்று தங்கள் பதியை நோக்கி வரும்போது சுவாமி, உத்தரவு கொடுத்து அனுப்பிய காமதேனுவாகிய பசுவானது தங்களிடம் சேர்ந்ததைக் கண்டு மகா சந்தோஷத்துடன் போற்றி வளர்க்க, நெடுநாள் சென்றும் நம்மைப் போலவே நாம் வளர்த்த பசுவும் மலடாய் நிற்கிற காரணம் என்னவோ, வையகத்தில் நாம் மலடு என்று பேரெடுத்ததோடும் அல்லாமல் தவசு செய்த கிடைத்த பசுவும் இப்படி நிற்கிறதே என்று இந்திரனிடத்தில் இந்திராணி நெடுமூச் செறிந்து சொல்ல, அவர்கள் இருவரும் புலம்பித் தவிக்கிறார்கள் என்றவாறு அப்பால் நடக்கும் அதிசயத்தை விவரமாய்ச் சொல்லுகிறோம்.

○ எப்படி என்றால், முன் கயிலாச பர்வத்திலேயும் வைகுண்டத்திலேயும் பிரம்ம லோகத்திலும் உண்டான தேவர்கள், ரிஷிகள், தபோதனர்கள் முதலானவர்கள் செய்கின்ற பாவ புண்ணிய கருவும் கணக்கும் பார்த்து, சிருட்டி செய்த சித்திரபுத்திரரை, ஈசுவரர் வரவழைத்து, தேவேந்திரன் மகா கொடூரமாய்த் தவசு செய்கிறதைப் பாரும் என்று சொல்ல, அப்போது சித்திர புத்திரர் அவருக்குச் சந்தானம் இல்லையே அவர் தவசு செய்தாலும் இல்லை என்று சொல்ல, அப்போது சிவன் எந்த விதமாகிலும் நீயே போய்ப் பிறந்து புத்திர வாஞ்சையைத் தீர்க்க வேணும் என்று சொல்ல, இந்திரன் வயிற்றில் பிறக்கக் காரணம் இல்லை என்று சித்திரபுத்திரர் சொல்ல, இந்திராணிக்கு நாம் அனுப்பிய காமதேனுவாகிய பசுவின் வயிற்றில் செனித்தால் குற்றமில்லை, அதற்குச் சம்புகமகாப் பொய்கையாகிய தடாகத்தில் தாமரைப் புஷ்பமாய் அவ

தரித்தால், அப்போது அந்தப் பசுவானது தண்ணீர் குடிக்க வரும். தண்ணீருடன் போய்ப் புகுந்து பிறப்பாய், உடனே மகவாசை தீரும். பூமியில் உண்டாகிய முன் பாவ புண்ணிய கணக்குகளும் சீராகும் என்று கணக்கு எடுத்து எழுதிக்கொடுத்து எழுத்தாணியும் கொடுத்து அவ்விடத்தில் உண்டான கணக்கும் கருவூலமும் மகாவிஷ்ணு வசம் ஒப் படைக்கச் சொல்லி, உத்தரவு அளித்தபடி, ஒப்புவித்துப் பின்பு சித்திர புத்திரர் அவ்விடத்திலுள்ள பெரியோர்களை எல்லாம் அழைத்துக் கொண்டு சம்புமகாப் பொய்கை யில் வந்து அவதரிக்கிற கதை இனிச் சொல்லுகிறோம்.

○ அது எப்படி என்றால், இந்திரன் இந்திராணி இவர்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்த சித்திர புத்திரரானவருக்கு வேதங்கள் அப்பியாசம் பண்ணு விக்க வேண்டும் என்று வாத்தியாரை அழைப்பித்துப் பட்டணம் எல்லாம் அலங்காரம் செய்து மகாதானம், கோதானம், வஸ்திர தானங்கள் செய்து ஓமம் எக்கியங் கள் எல்லாம் செய்து சித்திர புத்திரருக்கு வாத்தியார் அரியோமென்று சொல்ல, அதற்குப் பயன் சொல்லும் என்று வாத்தியாரிடத்தில் கேட்க, அவர் சொல்ல மாட்டா மையால், சித்திர புத்திரர் தானே பயன் சொல்லிப் பின் நடக்கிற காரியங்களைச் சொல்லுகிறோம். அது எப்படி என்றால், சித்திர புத்திர நாயனாரானவர் இந்திரன் இந்திராணி இவர்களை வணங்கி விடை பெற்றுக் கொண்டு தேரின் மேலேறி சுவாமி கைலயங்கிரி வாசரான பரமேசுவரரையும் பார்வதி அம்மையையும் கண்டு நமஸ் காரம் செய்து சிந்தை களி கூர்ந்து நிற்க, பார்வதி அம்மை யும் மகனைக் கட்டி வாரி மோந்து கொண்ட உடனே சித்திர புத்திர நாயனார் சுவாமியிடத்திலும் அம்மையிடத் திலும் அவ்விடத்தில் நடந்த விருத்தாந்தம் எல்லாம் சொல்லுகிறார்.

○ அது எப்படி என்றால் மார்க்கண்டனுக்கு வயசு பதினா றான உடனே எமன் தூதர்களை அனுப்பிக் கூட்டி வரச் சொல்ல, மார்க்கண்டனானவன் சுவாமி கைலயங்கிரி வாசர் கிருபையைத் தியானித்துக் கொண்டு வந்து தூதரை நிரா கரித்து எமதரும ராசனையும் சட்டை செய்யாமல் சொன்ன செய்தியைத் தூதரானவர் தருமராசனிடத்தில் போய் அறிவிக்க, தருமராசன் மிகுந்த கோபம் கொண்டு கண்கள் இரண்டும் நெருப்புப் பொறி பறக்க அண்டங்கள் மலைகள்

எல்லாம் நடுநடுங்கத் தேவர்கள் எல்லாம் வெகுண்டு சூடத் தக்கதாக வயிர முடி தரித்து புசங்கள் இரண்டிலும் ஆயிரம் பேர்களால் தூக்கம் படா நின்ற உடைவாளும் சூரியும் கட்டி ஆயுத வரிசைகளில் சில ஆயுதமும் இடுப்பில் வரிந்து கட்டிப் பாசக் கயிறும் தண்டாயுதமும் எடுத்துக் கருங்கடா வின்மீது ஏறிக் கொண்டு வெற்றிச் சங்கு ஊதி, வீர முர சறைந்து இருபுறமும் சேனைத் தளங்கள் சூழ்ந்து வர ஆயிரம் காலாள் ஆயுத பாணிகளுடனே வரவும் ஒரொரு கொம்பு இரண்டு நாழிகை வழிப் பரப்பு நீளம் வளர்ந் திருக்கப்படா நின்ற கருங்கடாவானது இரண்டாயிரம் வரவும் மீசைகள் படபடவென்று துடிக்கவும் அண்ட புவ னங்கள் எல்லாம் அதிரவும் வலது துடை தட்டி மார்க்கண் டனைத் தேடிப் புறப்பட்டான்.

○ இப்படி மார்க்கண்டன் தோத்திரம் பண்ணுவதைக் கேட்டு எமதரும ராசன் சொல்லுகிறான் என்னடா மார்க்கண்டா என்னுடைய மனுஷன் வந்து உன்னை அழைத்தால் மேலான வார்த்தை சொல்லுகிறாய். உன்னைவிடத் தக்க தில்லை. கர்த்தரானவர் உன்னைக் கொண்டு ஓடும் போது தடுக்க மாட்டார் என்று வெகுவாய்த் தருமராசன் மார்க்கண்டனைப் பயப்படுத்துகிறான்

○ அது எப்படி என்றால், எமதருமராஜனானவன் மார்க்கண்டனைப் பார்த்து, "அட மார்க்கண்டா நீ எத் தனை தவத்தோடும் கூடிப் பூசை செய்தாலும் உனக்குப் பதினாறு வயசுக்கு மேல் இருப்பு இல்லையே. கர்த்தர் தான் என்ன செய்வார்? அவர் பார்த்திருக்கக் கொண்டு போகிறேன்" என்று கருங்கடாவின் பேரிலிருந்து கீழிறங்கி கோபத்துடன் சொல்ல, மார்க்கண்டன் சிவனைத் துதிக்கி றான்.

○ இப்படி அபயமிட்டு வருந்தின மார்க்கண்டனைப் பார்த்து சுவாமி அருளுகிறார். இப்படிக் கைலாசபதியானவர் மார்க்கண்டனைத் தன் கிட்ட வைத்ததைப் பார்த்த எம தருமராசன் சொல்லுகிறான்.

○ அது எப்படி எனில், எமதருமராசனுக்குக் கோபம் உண் டாகி, மார்க்கண்டன் பேரில் பாசக் கயிறை வீசிட, மார்க்கண்டனானவன் சுவாமியைத் தாவிச் சேர்த்துக் கட்டிக் கொள்ள, அப் பாசக் கயிறு சுவாமியையும்

மார்க்கண்டனையும் சேர்த்தது. அதைக் கண்டு மார்க்கண்டனானவன் தன்னைப் பாசம் இழுக்கிறதும் தவிர நம்முடைய நிமித்தியம் சுவாமியையும் பாசக் கயிறு பற்றி இழுக்கும்படியாச்சுதே என்று கண்ணீரானது தாரை தாரையாக ஓடுகிறது சுவாமிக்குத் தெரிந்து கோபம் உண் டாகி எமதருமராசனை ஆக்கினை செய்யப் போகிறார்.

சித்திரபுத்திரர் கதை

காப்பு

அத்தனும் அயனும் மானும் ஆனமா ரிஷிகள் தேவர்
நித்தமும் பலாபலன்கள் நெறியுடன் தெளிவதற்குச்
சித்திரபுத்திரனார் தாம் செனித்ததோர் கதையைப்பாட
மத்தமா கஜமும் தொந்தி வயிறும் காப்பாமே.

வெண்பா

சீர்கொண்ட பூதலத்தில் சித்திரபுத்திரன் கதையைப்
பார் கொண்ட செந்தமிழால் பாடவே - ஏர்கொண்ட
வார் பூத்த கோல முலை மாது உமையாள் ஈன்று எடுத்த
கார் பூத்த குஞ்சரத்தான் காப்பு.

விருத்தம்

ஆனைமுகமும் ஒரு கொம்பும் அகன்ற மார்பும் சிறு கண்ணும்
பானைபோலப் பெரு வயிறும் பாங்காய்ப் பூணுநூல் அழகும்
தானே தோன்றி எனது உளத்தில் தயவாய் வாழும் விநாயகனே
நானே உனது பதம் தொழுதேன் நாவில் உதிப்பாய் கணபதியே.

நூல்

திருமகிழ்ந்து வாழும் அந்தச் சித்திரபுத்திரர் கதையை
விருப்பமுடன்பாட விநாயகனே முன்நடவாய்!
விக்கின விநாயகனே வேழமுகத்து ஐங்கரனே
தொந்திக் கணபதியே தூயவனே முன்நடவாய்
கர்த்தன் அருள் பெற்ற கணபதியே காத்துஅருள்வாய்
சத்திக் கணபதியே தையல் உமைபுத்திரனே
எத்திசையும் போற்றும் இறையோன் திருமகனே
பத்தியுடன் தொழுவோர்க்குப் பாவங்கள் தீர்த்தவனே

சித்திரபுத்திரர் கதையைச் செப்பஅருள் செய்வாயே
சீராக வாழும் சித்திரபுத்திரர் கதைக்கு
நேராக வந்து உதவு நீலமயில் வாகனனே
அந்தரியேதாயே அயனார்இடத்திருக்கும்
சுந்தரியே வெள்ளைநிறச் சோதியே முன்நடவாய்
பத்தியுடன் எப்பொழுதும் பாங்காக உதவுவாய்
பத்தி மிக உண்டாகப் பொற்கொடியே வந்து உதவாய்
பத்தியுடன் யானும் பாடுகிறேன் இக்கதையை
ஆதி அரனாரும் அச்சுதனும் வேதாவும்
தீதுஇல்லா முப்பத்து முக்கோடி தேவர்களும்
எல்லோருமாக இருக்கும் ஓர் நாளையிலே
சித்தம் மகிழ்ந்து செப்புவார் ஈச்சுரரும்
நன்றும் தீதும் தெரிய நடுஎழுதுவார் கணக்கர்
ஈசன்அருள்பெற்ற எமதருமர் தன்னிடத்தில்
நேசமுடன் கணக்கு நிச்சயமாய்த் தான் எழுத
புண்ணியம் செய்தவரைப் பூதலத்தில் வாழ்பவரை
எண்ணரிய பாவம் இயற்றியோர் தங்களையும்
ஒன்றும் தவறாமல் உள்ளபடி தான்எழுத
வென்றிபுனை நற் கணக்காய் விரைந்தே எழுதி வர
அந்நகர நாட்டுக்காம் அதிகாரியாம் கணக்கர்
முத்திரை நாட்டுக்கு எங்கு முதல் கணக்கர்
நாட்டுக் கணக்கும் நமனார் பெருங் கணக்கும்
ஏட்டுப் புறத்தில் எழுதும் எழில் கணக்கர்
நல்லார் குணத்தை நடுஎழுது நாயகனார்
பொல்லா குணத்தைப் பிரித்துஎழுதும் புண்ணியனார்
தன்னை நினைத்தவர்க்கும் தன்நியமம் செய்தவர்க்கும்
இந்நிலத்தில் செல்வர் இசைவாகத் தான்அருள்வார்
எல்லோரும் நீங்கள் இயல்பாகத் தான்கேளும்
உத்தமனார் தம்கதையை உவப்போடு தான்கேளும்
அத்தர் திருக்கதையை அன்பாகத்தான்கேளும்
மன்னவனார் தம்கதையை மகிழ்ந்திருந்து கேட்டவர்கள்
தென்னவனார் தம்கதையை தினம் இருந்துகேட்டவர்கள்
பரமனார் தம்கதையைப் பக்தியுடன் கேட்டவர்கள்
பார்வேந்தர் தம்கதையைப் பண்புடனே கேட்டவர்கள்
சித்திரபுத்திரர் கதையைச் சிந்தையுடன் கேட்டவர்கள்
உத்தரங்கள் சொல்லாமல் உண்மையாய்க் கேட்டவர்கள்
புத்திர நற்பாக்கியங்கள் பொருந்தியே தாம்வாழ
வேண்டும் என்றே ஈச்சுரனார் விஸ்தாரம் செய்தகதை
இனிமேல் நடத்துகிறோம் இப்போது செய்யும்வகை

சித்திரைக்குச் சித்திரையில் சீராரும் பௌரணையில்
விரதம் அதுதான் இருந்து வெண்பட்டுத் தான்உடுத்தி
புண்ணியமான பூதானம் தான்கொடுத்து
அடைகாயும் வெள் இலையும் அன்பாகத் தான்கொடுத்து
பூதானம் கோதானம் வஸ்திரதானம் கொடுத்துப்
பந்தல் விதானம் பாங்காகத் தான்போட்டுத்
தோரணங்கள் கட்டித் துலங்கு மேல்சுட்டிகட்டி
வித்தை விநாயகரை விரைந்துமே தான்போற்றி
செய்யும் வகை அதற்குச் சிறக்கவே வைத்தபின்பு
பூரண கும்பம் பொன்னின் குடத்தில்வைத்து
வஸ்திர ஆபரணங்கள் வகையுடனே தான்சாத்தித்
தக்ஷிணைகள் வைத்துத் திருமாலைகள் சாத்திச்
சந்தனம் குங்குமம் சரியாகத் தான்சாத்தி
வாழை கமுகுடனே வான்கரும்பு தான்இருத்திப்
பொன்னின் விளக்கு வைத்துப் பூமலர்கள் தான்சாத்தி
வாழைஇலை பரப்பி வைக்கும் வகைக் கனிகள்
வாழைப் பழமும் வருக்கைப் பலாச்சுளையும்
மாங்கனியும் தேங்கனியும் மற்றும் உள்ளநற்கனியும்
தேமாங்கனியுடனே செழுங் கதலி நற்பழமும்
விளாங்கனியும் சர்க்கரையும் விரவமிகப்படைத்துக்
கடலைசிறு பயறும் காராமணிப் பயறும்
கடலை பொரி அவலும் வேண்டும் பணியாரம்
தேனும்தினையும் திறமாகத்தான் படைத்துக்
கரும்போடு இளநீரும் கற்கண்டு நற்கனியும்
பொரி விளங்காயுடனே பிட்டுஅமுதும் எள்உருண்டை
கொழுக்கட்டை வகைகள் கொண்டு வந்து தான்படைத்துத்
தோசை வடை, இட்டலியும் தோன்ற மிகப் படைத்து
அப்பம் அதிரசமும் ஆனது ஒரு தேன்குழலும்
பாயசமும் பானகமும் பதிவாகத் தானும்வைத்து
அன்னம் மிகச் சமைத்து அரன் பாலன்முன்னே வைத்துப்
புத்துஉருக்கு நெய்யும், பொறிக்கறி உள்ளதுஎல்லாம்
அடைகாயும் வெள்இலையும், அன்பாகத் தான்படைத்து
அத்தனார் தம்அருளால் அமுது செய்யப்பண்ணுவித்து
நிவேதனம் செய்து நியமமுடன் பூசித்துத்
தோத்திரங்கள் செய்து தொழுது மிகப் பணிந்து.

விருத்தம்

கங்கையைத் தரித்தோன் பாலா கரிமுகா உன்றன் பாதம்
சங்கையாய்த் தரணி யோர்கள் தயவுடன் போற்றி செய்ய
மங்களமாக வாழ்ந்து வந்து எனக்கு அருளும் நாதா
எங்குமாய் நிறைந்தாய் நீயும் இறையவா போற்றி போற்றி

* * *

[இவ்வாறு கணபதியைத் தோத்திரம் செய்து அருச்சனை நிவேதனம் முதலானதும் செய்து தூப தீபம் காட்டி, அப்பால் கதையை நடத்த வேண்டியது]

சங்கரனார் கொண்டாடத் தான்எழுதும் மெய்க் கணக்கர்
சித்திரபுத்திரரைச் சீருடனே தான்இருத்திப்
பீதாம்பரம் சாத்திப் பரிவட்டம் தான்சாத்திச்
சீதள சந்தனமும் ஷண்பகமும் தான்சாத்திச்
சுத்தமாய் உள்ளம் எல்லாம்தோன்ற மிகச் சாத்தி
அறிவால் முறைப் படியே அர்ச்சனைகள் செய்த பின்பு
வெள்ளிலையினோடு விளங்கும் அடைகாயும்
உள்ளமகிழ் நைவேத்தியம் உவந்து மிகப்படைத்துப்
புத்தகத்தினோடு இலங்கும் பொன் எழுத்தாணியுடன்
பூதலத்தில் உள்ள புதுப்பண்டம் உள்ளம் எல்லாம்
இஷ்டமுடன் படைத்து அங்கு எல்லோரும் இக்கதையைத்
தெண்டன்இட்டே இக் கதையைச் செப்பவே வேண்டும்என்று
பக்தியுடன் கேட்கப் பகரலல் உற்ற இக்கதையை
ஓங்கு புகழ் மாதர் உண்மையாய் எங்களுக்குச்
சொல்லுமையா என்று துன்பம்அறக் கேட்கல் உற்றார்
கல்லும் உருக்க கருத்துடனே கேட்கல் உற்றார்
மன்னும் புகழ்உங்கள் மங்கிலியம் தான்வாழ்க
மலடிகள்எல்லாம் மனம் உருகித் தான்கேட்க
அகம்பாவம்விட்டு அன்புடனே கேட்டவர்கள்
புண்ணியங்கள் செய்து புதுமையுடன் கேட்டவர்கள்
நல்ல நினைவு வைத்து நன்றாகக் கேட்டவர்கள்
கதைமுழுதும் கேட்டவர்கள் கயிலைபதம் பெறுவார்
எந்த மனக்குறைவு நீங்கும்என்று ஈச்சுரனார்
பிச்சை இடாத பெரும் பாவி ஆனவரும்
நச்சுவாய்ப் பல்லர்கள் நடுக் கேடு செய்தவர்கள
கன்னிகளாய் உள்ளவர்கள் கணவன் உரைகடந்தோர்
பிச்சை இட்டு உண்ணாத பெரும் பாவிஆனவர்கள்

குண்டுணிகள் சொல்லும் கொடும் பாவி ஆனவர்கள்
உற்றுநின்று கேட்டு உறவை முறித்தவர்கள்
பல நினைவு வைத்த பாவிகளானவர்கள்
கொற்றவரைத் தள்ளி வைத்த கொடும் பாவி ஆனவர்கள்
மற்றவரைத் தேடி வாழ்ந்திருக்கும் மாபாவி
பிள்ளை அழிக்கும் பெரும் பாவி ஆனவர்கள்
சண்டை இட்டு நித்தம் தன்பேச்சு மேலிடவே
கொண்டவனைப் பேணாத கொடும்பாவி ஆனவர்கள்
தன்வீட்டைச் சாத்தி அசல் வீட்டில் போய் இருந்து
பின்னங்கள்பேசும் பெரும்பாவி ஆனவர்கள்
பசித்தார் இருக்கப் பார்த்திருந்த பாவியர்கள்
இத்தியாதிபேர்கள் எல்லாம் இக் கதையைக் கேளாமல்
கடக்கவே, நில்லும் என்று கணக்காய் உரைத்தமொழி
பூமிதனில் விளைந்த புதுமொழியைக் கேளும் என்றார்
பெரியவர் முதலோர்க்குப் பிசகாமல் தான்ஈந்து
வேதியர்க்கு ஈந்து, ஈந்து விரதம்அதைக் கொண்டாடிக்
கேட்டவர்கள் எல்லாம் கிளையுடனே வாழ்ந்திருப்பார்
காரணமாய் நடந்தகதையை நடத்துகிறோம்
பதிவிரதையாய் இருந்து பாங்குடனே கேளும் என்றார்
பக்தியுடன் கேட்டால் பாடுகிறேன் நீர்கேளும்
ஈசன் அருளால் எமதருமர் தன் அருகே
நேசமுடன் கணக்கு நிச்சயமாய்த் தான் எழுதப்
புண்ணியம் செய்தவரைப் பூதலத்தில் வாழ்பவரைப்
பாவங்கள் செய்தாரைப்படுத்துக் கணக்குஎழுத
வேனும்என்று சொல்லி விமலனார் செய்தகதை
கயிலாசம்மீதில் காரணமான கதை
தெய்வலோக பட்டணத்தில் திரமாய் நடந்தகதை
நன்றாகச் சொல்கிறேன் நாடுஎல்லாம் தான் அறிய
இந்திரன்இந்திராணியுடன் இருந்து மிகவாழ்க்கையிலே
புத்திர ஆசை பிடித்து மிகப்புலம்பி
நடந்தகதை சொல்லுகிறோம் நன்றாகக்கேளும் என்றார்
நல்லதொருபசுவும் இறையோன் கொடுத்து இருக்கப்
பிள்ளைஇல்லா வாழ்வு பெருமை அடையாதுஎன்று
இந்திராணி அம்மை ஏங்கி மிகவாடிச்
சொன்ன வசனத்தைச் சொல்லுகிறேன் கேளும்என்றார்
பட்டணம் பல், காது பாவங்கள் தீராது
ஆளடிமை கன்று ஆகாசம் போய் விடும்காண்
ஆபரணாதி எல்லாம் அழிந்திடும்காண் மன்னவரே
சிந்தித்த காரியங்கள் சிதறியே போய்விடும்காண்
என்று சொல்ல இந்திரனும் எண்ணி அறங்கள் எல்லாம்

கன்னிகா தானங்கள் கருத்தாகச் செய்தார்காண்
மாதானம் கோதானம் வஸ்திர தானங்களும்
விமரிசையாய்த் தருமங்கள் வேணபடி செய்த பின்பு
தவசு செய்ய வேணும்என்று தான் நினைத்தார் உத்தமனார்
உந்தமரும் உத்தமியும் உலகு ஆண்டோன் தனைநினைந்து
தபசுகள் செய்த கதை சாற்றுகிறோம் நீர் கேளும்
இந்தக்கதையை எள்ளளவும் தப்பாமல்
கேட்டவர்கள் எல்லாம் கிளையுடனே வாழ்ந்துஇருப்பார்.

விருத்தம்

சித்திரபுத்திரர் கதையைச் சிறப்புடன் கேட்க நோன்பு
பக்தியாய் இருந்தோர்எல்லாம் பழவினை நீங்கிநல்ல
அத்தர் தம் பதியைச் சேர்ந்து அன்புடன் சுகித்து வாழ்வார்
பக்தியாய் என்று முன்புபகர்ந்தனர் நூல் வல்லோரே,

* * *

உத்தமரும்ஆவார் உயர்ந்த குடிஆவார்
பத்தினிகள்ஆவார் பல பிள்ளைத் தாய்ஆவார்
சக்தி சிவம் பொருந்தித் தாட்டிதராய் வாழ்ந்திருப்பார்
நீடுழி காலம் நேசமதாய் வாழ்ந்திருப்பார்
மங்கிலியம் வாழ்ந்து மகிழ்ச்சி மிக உண்டாகும்
செல்வம் மிகஉண்டாகிச் சீராகத் தான் இருப்பார்
ஆழ்கடல் வற்றிடினும் அவர்புகழ் தான்குன்றாது
மாற்றில்லாச் செம்பொன் மதிக்கும் அவர் வசத்தில்
புண்ணியவான் ஆனாலும் போதம் உள்ளார் ஆனாலும்
மண்ணும் மதிஉள்ள அளவும் வாழ்வு மிகஉண்டாகும்
சித்திரைக்குச் சித்திரையில் சீராரும் பௌரணையில்
சித்திரைமாதம் திரு நோன்பு நாள்அதனில்
உத்தமரை நோக்கி ஒருநோன்பு செய்தவர்கள்
மைந்தர்கள்ஆனாலும் மடந்தையர்கள்ஆனாலும்
எந்தக் குலத்தில் எவர்களே ஆனாலும்
தந்தை தனைக்கொன்ற பெரும்பாவி ஆனாலும்
நித்தம் மதுஉண்ணும் நீசரே ஆனாலும்
இந்தக் கதையை இயல்பாய்க் கருத்தில் வைத்து
லோகத்து இயற்கை என்று யோசியாமலேஇருந்து
இளகும்படி மனத்தில் எந்நேரமும் நினைத்தால்
அங்கேதான் நோன்புக்கு அவரே வெளிப்படுவார்
இந்திரனைப் போலே இனிதாக வாழ்வும்உண்டாப்
அந்த நெடுமால் பதத்தில் அழகுடனே வாழ்ந்திருப்பார்

சிவன் அருளும் உண்டாகும் தீங்கு ஒன்றும்வாராது
நன்மையுடன் செல்வங்கள் நாள்தோறும் உண்டாகும்
முன்நோன்பு இராத முழு மூடர் ஆனாலும்
இந்நோன்பு இருந்தவர்கள் இகபரமும் தான்பெறுவார்
முக்தி அருள் கொடுக்கும் மோகங்கள் தான் நீங்கும்
வல்வினைகள் ஆனது எல்லாம் வழிவிலகித் தான்போகும்
நல்லதொரு புண்ணியங்கள் நாள்தோறும் உண்டாகும்
யாராகிலும் இதனை அன்புடனே கேளுங்கள்
நாயனார் பிறப்பை நன்றாகச் சொல்கிறேன்
சிவனார் கயிலையில் சிறப்பாய் இருக்கையிலே
அரனார் மனம் மகிழ்ந்து ஆன பராசக்தியுடன்
கேளாப் உமையவளே கிருபையுடன் சொல்லுகிறேன்
ஊழின் விதிப்படியே உள்ளபடியே உலகில்
அவரவர் செய்த புண்ய பாவங்கள் தான்அறியார்
நாமே அறியவென்றால் ஞாயம் இல்லை கண்டாயே
நம்மை நினையாமல் நாள்தோறும் உண்டவர்கள்
சிவசிந்தை இல்லாத சென்மங்கள் ஆனவர்கள்
நல்வினையைச் செய்யாத நரஜென்மம் ஆனவர்கள்
அசுரர், நரகர், அரக்கர் முதலானோர்
சக்தி சிவம் மறந்து தான் இடுக்கண் செய்வதனால்
அதற்கான செய்தி அடைவாய்ப் புகல்கிறேன்.
ஒப்பில்லாப் பெண்ணே உமையவளே நீ கேட்பாய்
செப்பமுடன் கணக்குச் சீராகத் தான்எழுதக்
கையாள் ஒருவனை நான் காரிகையே வேண்டுகிறேன்
நாமே கணக்கு எழுத நல்லது அல்ல கண்டாயே
மூலமாய் உலகத்தில் மூத்தமகன் தனை வைத்தோம்
மாபாரதம் எழுதி மெத்த அலுத்தான்காண்
கோலமயில் வாகனனும் கொடுஞ்சூரன் கண்டாயே
சூரரைக் கொல்லவே சோதனைக்கு வைத்தோம் காண்
சாலக்கணக்கு எழுதான் தகப்பன் குருசாமி
கோல பிரமாவைக் கொண்டு சிறையும் வைத்தான்
அவனைத் துதித்தவர்க்கு அனேக வரம் கொடுப்பான்
புவனககணக்கு எழுதப் புகார் சொல்வான் உன்மகனும்
பாலர் இருந்தும் பழிப்பார்க்கு இடமானோம்
மக்கள் இருந்து மாதே பயன்இல்லை
நல்வினைகள் தீவினைகள் நன்றாய் எழுதி வர
எந்தவினைஆனாலும் இயல்பாக உள்ளபடி
கணக்குப்படியே கருமங்கள் தான்பொசிப்பார்
பிறர் சாட்சியால் கணக்குப் பிரபஞ்சத்தே இருக்கும்
ஆதலால் ஓர்க்கணக்கன் ஆரணங்கே வேண்டுகிறேன்

என்று அரனார் சொல்ல இயல்பான பார்வதியும்
நல்லதுதான் சொல்ல வந்தீர்நாயகரே உம்முடைய
திருவுளத்துக்கு ஏற்றபடி செய்யும்என்றாள் பார்வதியும்
இன்பமாய்ப்பேசி ஈசுவரரும் ஏது சொல்வார்
பூ மாதை நோக்கிப் பொற் பலகை கொண்டு வா
என்ற பொழுதே இயல்பான பொற்பலகை
நன்று எனவே பார்வதியும் நாதன் முன்புவைத்தனளே
பார்வதி கொண்டுவரப் பரமனார் ஏது செய்தார்
சித்த மகிழ்ந்து சித்திரக்கோல் தந்திடு என
அந்தப் படியே அம்மைஉமை கொண்டு வந்தாள்
சாதிலிங்கத் தோடு தவள நிற பச்சையுடன்
நீலமணி மஞ்சளுமாய் நெறியாய்ச் சேர்த்துஉடனே
பால் நிறமும்ஆகப் பாவித்தார் பலகையின்மேல்
சாலவேதம்மைப் போல் தயாநிதியும் ஆகவென்று
கோலமுடன் இருக்கக் குறித்தாரே சித்திரத்தில்
பஞ்சவர்ணமாகப் பாகம் அது தப்பாமல்
திருக்கரத்தால் தானும் சிறப்பாய் எழுதினாரே
தம்மைப்போல் இருக்க வென்று தானே எழுதல்உற்றார்
உருவைஎழுதி உண்மையுடன் தான் பார்த்துத்
திரிபுரையே நீயும் சித்திரத்தைப்பார் எனவே
இந்தப் புதல்வனை நீர்இப்போது அழையும்என்றாள்
அழையும் என்றபோதே அரனும் அதைப் பார்க்க
ஆரும் அறியாத அரனார் தம்பேரருளால்
சித்திரத்திலே உதித்த சிறப்பான புத்திரனே
வாராய் மகனே என்று மலர்க்கரங்கள் நீட்டிடவும்
கை காட்டி வாய்காட்டித் கருவுருவாய்த்தான் திரண்டு
கருணைவிழி நோக்காலே கையில்பிறந்தனரே
பிறந்தாரே உத்தமனார் வேணும் வரங்கள் பெறப்
பணிந்தவர்க்கே அருள்கொடுக்கும் பரமனதுசந்நிதியில்
தெண்டனிட்டு வால் புதைத்துச் சென்னியின்மேல் கை குவித்து
நிற்கும் அந்த உத்தமரை நீலகண்டர் தான்பார்த்து
எக்கோடி காலம் இயல்பாக உள்ள மட்டும்
அக்காலம் நீடூழியாகவே தான்இருப்பாய்
பல்லாயிரம் கோடி பகிர்அண்டம் உள்ளமட்டும்
எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கும் நிறைந்திருப்போம்
பூவுக்குள் வாசம்போல் பொருந்தி இருப்போம் நாம்
பரைக்கும் நமக்கும் இது பண்புதான் கண்டாயே
ஒன்றாய் இருக்கும் இடம் ஒருவரும் தாம்அறியார்
அறிவார் தவம்உடையார் அடையாளம் சொல்லுகிறேன்
நன்றாய் உரைக்கிறேன் நன்மகனே கேள்அப்பா

மோட்ச வழி சக்திக்கு மொழிந்தோம் அதுபோல
மோட்ச வழி உபதேசம் மொழிந்தோமே இன்று உனக்கு
எங்களிடம் மனத்தில் இருக்கும் நினைவுகளும்
தேவர் அசுரர்கள் சிறப்பான மாதவர்கள்
எறும்பு கடையான எண்பத்து நான்குநூறு
ஆயிரம் யோனி பேதம் ஆகும் உயிர்கள் எல்லாம்
செய்கின்றது எல்லாம் திறமாய் எழுதும்என்றார்.
கருமுதல் நற்கணக்கும் கட்டாயம் எழுதும் என்றார்
கயிலாசத்து உள்ள கணக்கு எல்லாம் எழுதும் என்றார்
மகா மேரு நற்கணக்கும் வைகுண்ட நற்கணக்கும்
பிரமலோகக் கணக்கும் பின்புமற்றும் உள்ளதுஎல்லாம்
எல்லாக் கணக்கும் எழுத அருள் கொடுத்து
உமையவளும் தானும் உண்மையாய்த் தான் அழைத்து
ஆபரணப் பெட்டகத்தை அழைப்பித்தார் அந்நேரம்
பூட்டுத்திறந்து புதுப்பட்டுத் தான்கொடுத்து
காலில் சிலம்பு அணிந்து கனகமணித் தண்டைஇட்டு
முன்கையில் காப்புஇட்டு முழுபணியில் வளைஇட்டுத்
தங்கச் சரப்பளியும் தனியாரமும்தரித்து
அரனார் திருக்கரத்தால் ஆபரணம் தான்பூட்டிக்
காதிலேகுண்டலங்கள் கதிரொளிபோல் தான்சாத்தி
முப்புரி நூலும் முழு வயிரப் பதக்கமுடன்
தூய்மை பெருகும் சூளா மணிக் கவசம்
வில்சேர் சரப்பளியும் வேணபணி ஆபரணம்
பாதமுடி வரைக்கும் பல பணிகள் தான்பூட்டிப்
பார்வதியும் ஈசுவரரும் பார்த்தார்கள் கண்குளிர
அரனார் மன மகிழ்ந்தே அச்சிறுவனை அழைத்து
திருநீற்றும் காப்பும்இட்டுச் சித்திரபுத்திரர் எனவே
உபதேசம் காதிலே உரைத்தாரே உத்தமர்க்கு
அதிகாரம்செய் கணக்கு அய்யனே தந்தோம்என்றார்.
முத்திரைமோதிரத்தைச் சித்திரமாய்க் கையில்இட்டு
நீடூழிகாலம் கணக்குஎழுதுவாய் என்றார்.
உத்தமரும் அங்கே உடன்வணங்கிக் கைகூப்பி
அம்மைஉமை பார்வதியை அப்போதே தெண்டன்இட்டார்
தெண்டன் இட்டு நின்றது ஒரு சித்திரபுத்திரரை
மார்பில் அணைத்து மகனேஎன மகிழ்ந்து
ஆரும் அறியாத அரும்பொருளார் தன்மகனே
சீருடநீயும் சிவனார் அருள்படிக்குப்
பாரும் வீசும்பும்இந்தப் பரன்மொழிகள் தப்பாமல்

பல்லாயிரம் கோடிப் பலன்கணக்குத் தான்எழுதச்
சொல்லார் கணக்கைச் சுருதிஎன உண்டாக்கிக்
கரும நிழல் போலக்கணக்கில் தினசரியும்
எழுதி வருவாய்நீ இயற்றும் பயன்படியே
பழுதுகள் வாராமல் பார்த்தவுடன் அவ்வேடு
எடுத்தவர்கள் பேசாமல் இயலிழலே சாட்சிசொல்லும்
உனக்குப் பிரயாசம் ஒன்றும்இல்லை என்றுசொல்லி
கணக்கராய்இருந்து கருவூலம் கைக் கொள்ளும்
என்று கருவூலம் ஏற்பித்தாள் அந்நேரம்
பண்டுமுன்னால் உள்ள பழையகணக்கு உள்ள எல்லாம்
ஆயிரம்தேவர்கள் அசைக்கவொண்ணாப் பட்டோலை
தப்பாமலே எழுதத் தார் வேந்தர் தான்கொடுக்கச்
சித்திரபுத்திரனார் சீமானார் தன்னிடத்தில்
வாங்கினார் உத்தமனார் வையகம் வாழ என்று
அன்றாடம் கணக்கு அணுவும் பிசகாமல்
இருந்து கணக்கை எழுதுகின்றார் உத்தமனார்
சிவனார்தம் வாசலிலே சிறப்பாய் எழுதுகின்றார்.

விருத்தம்

அய்யனும் உமையும் கூடி யான நற்கணக்கர் ஆக
மெய்யராய்ச் சிருஷ்டித்தார்கள் மேதினி உள்ள மட்டும்
செய்யனும் கணக்கைப் பார்த்துச் சிறு பிழை வாராவண்ணம்
தையலாள் பாகன் வாசல் அருங்கணக்கு எழுதல்உற்றார்.

* * *

எண்ணத் தொலையாத ஏற்றசிவ பூசைதன்னைச்
செய்யவே வேண்டும் என்று திரமாகவே நினைந்து
தேவாதிதேவர் எல்லாம்சேரவே சூழ்ந்துவரச்
செம்பொன் மணித் தேரில் சிறப்புடனே தான்ஏறி
பசும் பொன் உலகுஆளும் பதியைவிட்டுத் தேர்நடத்தி
விண்ணுலகக் கன்னியர்கள் வேணப் பணி சூழ்ந்துவர
இப்படியே இந்திரனார் ஏத்தும் தவம்செய்ய
வருகிற வழிதனிலேவந்தாள் அகலிகைதான்
புண்ய தீர்த்தம் ஆடப்புறப்பட்டாள் அகலிகையும்
தந்திரமாய் அப்போது தான்கண்டார் இந்திரனார்
மெத்தவேமையலாய் மெய்சோர்ந்து அறிவுஅழிந்து
தேர்மேலே தான்விழுந்தார் தேவர்கள் சென்றுஎடுத்தார்
பாராமல் நடந்து பகல்பூண்ட ஆசையினால்
காதல்கொண்ட இந்திரனார் காமவினை நினைந்து

ஆதரவுபேசி அகலிகையைச் சேரஎண்ணி
தேரை மிகநிறுத்தித் தேவர்களைத் தான்நிறுத்தி
மாயமாய்ச் சென்று மருத்துவ மலையில்உள்ள
காய்கனிகள் கொண்டுஉடனே கார் இருளாம் அந்நேரம்
மாயாபாசத்தால் மகிமை தனைஇழந்து
ஆசைத் துயரம்தால் அகலிகைவீட்டினிலே
சென்றாரே இந்திரனார் தெய்வஉருமாறி
அன்றிரவு நல்உறக்கம்அறிந்து நடுச்சாமம்அதில்
வேளை இதுஎனவே விடியற்காலம் கூவும்
கோழியாய் நின்று கூவினார் இந்திரரும்
அப்போது கௌதமரான ரிஷிதானும்
எப்போதும்போலே விடிந்துதே என்றுஎழுந்து
தண்டுகமண்டலமும் திருநீற்றுப்பையுடனே
கங்கைக் கரையில்வந்து நின்றார் மகரிஷியும்
கங்கை உறக்கமதைக்கண்டார் மகரிஷியும்
மாயர்விதியோ மாயமோ தெரியாது
நந்தவனம் சென்று நாம் அறிவோம் என்றுவர
அந்த மலரும் அரும்பாய் இருந்ததுகாண்
இதுஎன்ன சோதனையோ ஈசுவரரே தஞ்சம்என்றும்
அதிசாம நேரே அறியாமல் வந்ததுஎன்று
மனக்கவலை ஆகிரிஷி மனையிடத்தே மீண்டுவந்தார்
சென்றுஅறிவோம் என்றுதிரும்பி வரும்அந்நேரம்
இந்திரனும்அவ்விருளில் ரிஷிரூபம் தான்எடுத்து
வந்துஅகலிகையின் வாய்த்த முகம்நோக்கி
மனக்கவலை மையலொடு வந்த வரலாறுஎல்லாம்
கேளும்என்று சொல்லிக் கருணைகொள்ள வேண்டும்என்றான்
பாவிகெடுவாய் பத்தினிமார் தன்னிடத்தில்
தீவினையால் வந்தாயே சீசீமகன்இன்றி
நீயும்அழிந்திடுவாய் நிச்சயமே தப்பாதுஎன்று
ஆசைஇல்லாமல் அகலிகை சொல்லிநிற்க
வாசவனும அந்நேரம் மயக்கத்தால் வீழ்ந்துஇறைஞ்சி
ஆசைத்துயர்தீர்ப்பாய் அகலிகையே என்றுஇரந்தான்
அப்போது மகரிஷியும் அதி வேகமாய்வந்தார்
மெய்யாகப் போனவரும் மீண்டுவந்தார்அந்நேரம்
கண்டார்தன் ஞானத்தால் காரணமானதுஎல்லாம்
அண்டர் பதிக்கோனை யாரடா என்றுஅதட்டப்
பூனை உருவம்கொண்டுபோனானே இந்திரனும்
ஆரடா இந்நேரம் அறிவுகெட்டு வந்ததுஎன்ன
பேரும் பிறப்பும் பிழையாமல் சொல்எனவே
இந்திரனே நான்காண் ரிஷியைய நானும்உடமிடத்தில்

வந்தது வேறுஇல்லை வருஷப்பலன் உள்ளதுஎல்லாம்
சாஸ்திரம் கேட்கத்தான் வந்தேன் என்றுஉரைத்தான்
இந்நேரம் நீஇங்குஇடும்புசெய்ய வந்தவன்காண்
அகலிகையை இச்சித்தே அடைந்தாய்நீ என்றுசொல்லி
ரிஷியும்தான் கண்சிவந்து நெருப்புப் பொறிபறக்க
இன்றுஎரித்தோமாகில் இந்திரலோகம்அழியும்
இச்சாபம் இந்திரனை இருந்துஅழிக்கவேண்டும்என்று
துர்ச்சாபம் வேறுசொல்லுவார் அப்பொழுது
தன்தாரம்விட்டுப் பரதாரம்வேண்டினதால்
இந்திரன் சரீரம்எல்லாம் யோனியாய்ப் போகஎண்ணி
ஆயிரம்யோனி அங்கம்எல்லாம் தான்வெடிக்க
என்றுமகரிஷியும் ஏற்றதொரு சாபம்இடத்
தப்பாமல்அந்நேரம் தோன்றியதே தான்குறியும்
கண்டானேஇந்திரனும் கண்கலக்கம்உண்டாகித்
தொழுவான் ரிஷிஅடியைத் தோற்றமுடன்அந்நேரம்
பெரியோரே நீர் பொறுப்பீர் பிழைசெய்தேன் நான்சிறியேன்
அரியவினைக்கு ஆளானேன் ஆசையால் தான்விரும்பி
வஞ்சகனும்ஆனேன் மாபாவி தான்ஆனேன்
வஞ்சகமாய்ச்செய்தகுற்றம் மகரிஷியே நீர்பொறுப்பீர்
என்றுசொல்லி இந்திரனும் ரிஷியைஅடிபணிந்து
இந்திர லோகம் இழந்துநான் போகாமல்
இச்சாபம்தீர்த்தே இரட்சிக்க வேண்டும்என்று
அச் சாபத்தோடே அவர்அருகில் நின்றுஅழுதான்
இந்திரனைப்பார்த்து ரிஷியும்அவர் ஏதுஉரைப்பார்
இருடிகள் சாபம் இந்திரனே தீராது
ஆணவ மாயையினால் அழியவந்த இந்திரனே
தாணுமால்அயனாரைத் தரணியிலே பூசைசெய்தால்
ஆயிரம்யோனியும் ஆயிரம்கண்ணாகும்என்றார்.
ஆயிரம்கண்ணாகும என்ற அம்முனியைத் தெண்டன்இட்டுப்
பூசை செய்தே இந்திரனும் போனான்காண் அந் நேரம்
அப்போது மகரிஷியும் அகலிகையைப் பார்த்துஉடனே
கருங்கல்லாய்ப் போகஎன்று கடும்சாபம் இட்டனரே
அப்போதேஅகலிகை அடிதொழுது தெண்டன்இட்டு
வேர்த்துவிரைத்து மெய்கலங்கி உள்நடுங்கி
இச்சாபம்தானும் எனக்கோ வரவேண்டும்
ஈதுஎன்ன மாயமோ எம்பெருமான் சோதனையோ
சாபநிவர்த்தி தான்அருள வேண்டும்என்று
அகலிகைதான்பணிந்து அடிதொழுது தெண்டன்இட்டுக்
கேட்கும்அளவில் கிருபையுடன் மகரிஷியும்
அரக்கர்குலமஅறுக்க அன்பாக மாயவனார்

ரவீகுலத்தில் வந்துதசரதன் பாலனாய்ப்பிறப்பார்
நாலுபேராகவந்து பிறந்துவளர் நாளையிலே
விசுவாமித்திரர்செய்யும் வேள்விகெடும்படிக்குத்
தாடகைசிறுநீரால் தான்அணைப்பாள் அம் முனியும்
தாடகையைச்சங்கரித்துத் தனிவேள்விமுடிப்பதற்குத்
தசரதன்தன்னிடத்தில் சார்ந்து விசுவாமித்திரரும்
இராமரையும், லட்சுமணரையும் தான்அழைத்துச்
சங்காரம்செய்து தனிவேள்வியை முடித்து
மிதுலையை நோக்கி விரைந்துவருகையிலே
கலியாணம் பண்ணஎன்று கனமாய்வருகையிலே
ஸ்ரீராமர் தன்பாதம் சிறப்பாகப் பட்டஉடன்
பெண்ணாக நீவருவாய் பேர்ந்துவிடும் உன்சாபம்
அப்போதுநாம் உன்னை அழைத்துக் கொள்வோம்என்னக்
கருங்கல்லின் பாறையாய்ப் போனாளே கன்னிகைதான்

* * *

விருத்தம்

இந்திரலோகம் விட்டே எழிலுறு புவனம் சுற்றித்
தந்திர வானம் எல்லாம் தன்னுடன் வரும் போது அந்த
மந்திரப் பெண்ணும் வந்து மலர் கொய்யும் போது கண்டு
இந்திரன் மயங்கிவாடி ஏகினான் இருப்பிடத்தில்

இருப்பிடம் தேடிப்பார்த்து இரவில்ஓர் கோழிபோல
உருக்கொண்டு கூவி அந்த ரிஷியினைக் கங்கை போக்கி
உருக்கின அகலிகையில் உணர்விலான் செல்லும்போது
செருக்கிலா ரிஷியும் கண்டு சினந்துதான் சாபம்இட்டார்

செய்ததுஓர் சாபம் காமத்திருடனாய் வந்ததாலே
வெய்யனே பெண் மேல் மோக விருப்பமும் இல்லையாகத்து
உய்யதோர் மேனியெல்லாம் துயருடன் யோனிஆகும்
பொய்யல்ல என்றுசொல்லிப் போஎன விடை கொடுத்தார்

இந்த நற் சாபத்தாலே இந்திரன் கலைகவிழ்ந்து
அந்த நல் ரிஷியைத் தானும்அடிபணிந்து அவனே கேட்கத்
தந்திர வீசனாரைத் தானுமேபூசைசெய்தால்
சுந்தரமேனிஎல்லாம் துலங்கும் ஆயிரம் கண்ணாமே

* * *

கௌதம ரிஷியும் பெண்ணைக் கண்டு அகலிகையேஉன்னைச்
சவுமியமாகக்கண்டு இந்திரன் சார்ந்ததாலே
புவிதனில் கருங்கல்ஆகிப் பொற்பு எல்லாம்குறைவாய் என்று
தவமுனி வந்து நின்றுசாற்றினார் சாபம்தானே

எந்தனுக்குஇட்டசாபம் எந்தநாள் போம்என்று ஏங்க
அந்த நற்சாபம்தீர ஆனதோர் வகையும் சொல்வார்
சுந்தரத் தசரதற்குத் தோன்றிய ராமன் பாதம்
உந்தன்மேல் பட்டபோதே ஒழிந்திடும் சாபம்என்றார்.

* * *

இந்திரனார் தன்கதையை இயம்புகிறேன் கேளும்இனி
ஆயிரம் யோனியும்கண் ஆகும்என்ற மாமுனியைத்
தெண்டன்இட்டுக்கொண்டு திரும்பினார் பூசைசெய்யத்
தாணுவை மால்அயனைத்தானே மனத்தில்எண்ணி
ஆணவமாயைதன்னை அகலவிட்டு யோகம்அதாய்த்
தான்செய்த குற்றம்எல்லாம் தாணுவே தீரும்என்று
வனத்துரிஷி சாபம்அதை மால்அயனே தீரும்என்று
மெத்தவேபூசைவிரும்பியே செய்யல்உற்றார்
பூசைதனைச்செய்த புதுமைதனைக் கண்டுமிகத்
தாணுவும்மால் அயனும் தயவுடனே வந்துஉதித்து
ஆயிரம்யோனிஉனக்கு ஆயிரம்கண்ணாகும்என்றார்.
ஆயிரம்கண்ணாகும்என்ற அம்மூவரைப்பணிந்து
ஆயிரம்கண்ணாக அயிரம் வதத்தோனும்
வரம்அதிகம்பெற்று வாழுகிற நாளினிலே
அகலிகை சாபம்பிடித்ததே அந்நேரம்
தெய்வலோகப் பட்டணத்தில் வாழுகின்ற தேவருக்கும்
எல்லார்க்கும்ஆகப் பிடித்ததே சாபம்அது
வானுலகம்எல்லாம் மலடாகப் போனதுகாண்
தான்மலடும் அல்லாமல் தரணிஎல்லாம் தான் மலடாய்
பூமி விளையாமல் பொன்மாரி பெய்யாமல்
காமன் எரிந்தது போல் காடுகள்எல்லாம் எரிய
காய்க்கும் மரங்கள்எல்லாம் காய்உதிர்ந்து போனதுவே
பால்பசுக்கள்எல்லாம் பால்வற்றி நின்றதுகாண்
பட்சிஇனங்கள்எல்லாம் பெருமலடுதானாகக்
கரடி மிருகம்எல்லாம் கடுமலடாய்ப் போயினகாண்
புல்லும்கருகிமிகப் பூக்களுமே இல்லாமல்
இந்திரலோகம்எல்லாம் ஈடுஅழிந்துபோனதுவே
இந்திரனார்தேவி இதுஎல்லாம் தான்தெரிந்து

இந்திராணிஎன்று இளங்கோதை நான்இருக்க
அனர்த்தம்விளைத்திரே ஆனதுஒரு இந்திரரே
ரிஷியினது சாபம் பலித்ததே இப்போது
பத்தினிசாபம் பலித்ததுவும் கண்டீரே
அவர்களிடசாபம் அவனிஎல்லாம் சூழ்ந்ததுவே
மதிகொண்டு வாழ்கையிலே மதிமயங்கிப் போனீரே
தபசுமறந்து தட்டழித்த காரணத்தால்
மனத்தில்துயரமதாய் மலடாய் இருந்தோமே.
இடுவார்கள்பிச்சைதன்னைக் கெடுவார் தடுத்தாற்போல்
படுவார்கள் பாடுஎல்லாம் பட்டோமே இந்திரரே
அம்பலத்தில் நின்றுஅலையும் அநியாயம் செய்தவர் போல்
ஊரார்உடைமைக்குப் பேராசைகொண்டவர் போல்
தேவர்கள் எல்லாரும் சேர மலடு ஆனோம்
இந்தப்படி சொல்லி இந்திராணி தான்புலம்ப
இந்திரனும்கேட்டு இலச்சையுற்றுத் தான்வாடி
எந்தன் விதியாலே எனக்குமே இந்த வினை
வந்ததே என்று மனக்கவலை தான்கொண்டு
மானே குயிலே மரகதமே நீகேளாய்
தேனே கனியே தெவிட்டாத தெள்ளமுதே
அந்த ரம்பைமாதை அடிமைகொள்ளும் பெண்ணே நீ
புத்திரன்இல்லாமல் பூதலத்தில் வாழ்வுஎன்ன
சேனை பலதாழச் சிறுவன் ஒருவன்இல்லை
மைந்தன்இல்லா வீட்டில் மறையோர்புசிப்பதுஇல்லை
மகன்இல்லா வீட்டில்மற்றொருவர் போகார்காண்
வடிவுள்ள மா மயிலே வகைஒன்று சொல்லுகிறேன
அரனாரைநோக்கி அதிகதவம் செய்தாக்கால்
அம்மைஉமை பார்வதிபால் அதிகதவம் செய்தாக்கால்
எல்லாப்பதமும் இயல்புமிக உண்டாகும்
என்று மனையாளுக்கு இதமாகச் சொல்லியபின்

விருத்தம்

மங்கையே சொல்லக் கேளாய் மைந்தன் இல்லாமையாலே
தங்கியே வாழ்ந்துஇருந்தும் தரணியில் வசையும்ஆச்சு
கங்கைவேணியர்தன் பாதம் கண்டுமே வரத்தைப் பெற்று
இங்குநாம் வருவோம்என்றே ஏகினார் கைலை மீதில்

* * *

சென்று சிவன்கைலைசேர்ந்தே இருவருந்தான்
சக்தியைவேண்டித் தவம்பெற வேண்டும்என்று

சங்கரனார் அஞ்சுஎழுத்தைத் தங்கள் மனத்தில் வைத்துச்
சிவனோடுஉமையாளைச் சிந்தையிலே தான்நினைந்து
இந்திரனும் தேவியுமாய் ஈசுவரர் பால்ஏகல்உற்றார்.
இந்தப்படியே இருவரும் ஒற்றுமையாய்க்
கயிலையைத் தான்நோக்கிக் கடுகவே தான்அடைந்தார்
கடிதாய்வழிகடந்து கயிலைக்குப் போனார்காண்
தென்கயிலை சேர்ந்து சிறந்த இருவருமாய்
நந்திதனைக் கண்டு நமஸ்கரித்தார் அந்நேரம்
நின்றுகை கூப்பி நெடுமூச்சு எறிந்துநின்றார்
நெடுமூச்சு எறிந்துநொந்து நின்றவரைத் தான்பார்த்துத்
தடுமாற்றம் நீக்கித் தயவாக வார்த்தைசொல்லித்
தேவியும் நீயும்தேடி வந்த காரியம்என்ன
தேடிவந்த காரியத்தைச் செப்பும்என உரைத்தார்
இவ்வார்த்தைகேட்டு இந்திரனும் ஏதுஉரைப்பான்
எவ்வார்த்தை என்று இயம்புவேன் நான்அடியேன்
சீரா உரைசெய்தால் சிரிப்பார்கள்எல்லோரும்
மகன் ஆசையாலே வருந்தி நடந்துவந்தோம்
புத்திரனும் இல்லாமல் பொன்உலகை ஆண்டுஇருந்தோம்
பொன்உலகை ஆளப்புத்திரனே தானும்இல்லை
சந்ததிக்காகத் தவம்பெறவே வந்தோம்காண்
எங்கள்தமைக் காத்து இரட்சிக்க வேண்டும்என்றான்
அந்தமொழிக்கேட்டு அருள்நந்தி ஏதுஉரைப்பார்
வந்தது நன்றுநன்று மகன்உமக்கு உண்டாகும்
சிவனோடுஉமையாளைச் சிந்தையிலே தான்நினைத்து
தவமாய் இருந்து தரையில் மிக ஊசிவைத்து
ஊசிமேல்நின்று உற்றதவம் செய்வீரேல்
சிவனோடு உமையாளும் சிந்தைமிகமகிழ்ந்து
சந்ததிப்பாக்கியமும் தந்தே அருள்புரிவார்
இந்தப் படிக்கு நந்தி எடுத்துஉரைக்க அப்போது
நன்றுஎனவே இந்திரனும்நாயகியும் அப்போது
ஆற்றில் முழுகி அஞ்சுஎழுத்தை நெஞ்சில்வைத்து
ஊசி நிறுத்திஅதில் ஒருகாலைத் தான்ஊன்றி
நின்றார்தவத்தில் நிருமலனைத் தான்நினைந்து
இந்திராணி தானுமஇருந்தார் நெடுந்தவத்தில்
ஈசனேபிள்ளைஅருள் என்றே மனத்தில்எண்ணி
இருவரும்ஒன்றாய்இருந்தார் நெடுந்தவத்தில்
உள்ளங்கால் உச்சி ஒன்றும்தெரியாமல்
தள்ளாத புற்றும் தானேவளர்ந்ததுகாண்
வேர்கள்ஓடி வியன்மரங்கள் உண்டாகிப்

பாருக்குள் வேர்ஓடிப் படரத் தவசுசெய்தார்
அந்தத்தவத்து அருமை அரனார்அறிய வில்லை
ஆனபொழுது இந்திரனும் அவன்மனைவிதன்னுடனே
எந்தப்படி தவங்கள் செய்வோம் என நினைத்துச்
சுந்தரியாள் தன்னுடனே சொல்லி விசாரமுற்றுப்
பாதாளம் தோன்றவெட்டி பண்பாய் அனல்வளர்த்தி
வேதாள அக்கினிபோல் மேலேபடர்ந்துஎரிய
ஈசனேபிள்ளைஅருள் என்றே தவம்இருந்தார்
தண்ணீர் அருந்தாமல் சருகும்புசியாமல்
இந்தப்படிஇருந்தார் இரண்டாயிரம் வருஷம்
அந்தத்தவத்து அருமை அரனாரும் தான்அறிந்து
பார்வதியைப்பார்த்துப் பரமன் அருள்செய்வார்
இந்திரன்உள்ள இடத்துக்கு நாம்சென்று
மன்னுமுடி தேவர்எல்லாம் வந்து தொழுதுஏத்த
பொன்உலகை ஆண்டு மிகப் போகம்படைத்துஅருள்வீர்
என்று வரம்கொடுப்போம் என்னச்சிவகாமி
இந்தப்படி பலத்தை எதுக்குத் தான்கொடுத்தீர்
புத்திரன் இல்லாச்செல்வம் போதக்கொடுத்தீரே
புற்று வளர்ந்து போத மரம் உண்டாக்கிக்
கண்ணீர் ஒழுகுவதைக் கண்ணினால் காணும்என்று
சிவனாரிடத்தில் செப்பினாள் பார்வதியும்
உள்ளபடி சொன்னாய் உமையவளே என்றுஉரைத்துக்
கள்ளன்இவன் இந்திரனும் கடுங்குற்றம் செய்ததுஉண்டு
மானே அவனிடமனத்தின்படி செய்வோம்
தேவனே அவன்செய்த தீவினைகள் மெத்தஉண்டு
ஒன்றும்அறியாமல் உபாயமாய்ச் சொன்னதுஎன்ன
ஆனால்உனக்காக அருள்செய்வோம் கண்டாயே
என்று சிவனார் இரங்கி உரைத்தனர்காண்
உமையாளும்அங்கே உரைப்பாள் மனம்நடுங்கி
ஈசிவகரே உம்அடியார் ஏதுபிழை செய்தாலும்
நேயமுடன் அதனை நீர்பொறுக்க வேண்டாமோ
என்றுஉமையாள் சொல்ல இறையோன்மனமகிழ்ந்து
மன்றல் செறி வெள்ளி மலை தனிலே வீற்றிருந்த
நந்தி தனைஅழைத்து நலம்சேரும் இந்திரனைக்
கூட்டி வரச் சொல்லிக் கொடுத்தார்கள் உத்தரவு
வென்றி புனை நந்தி விரைந்தோடியேஅழைக்க
இந்திரனும் தேவியுமாய் இன்பமுடன்எழுந்து
நந்தீசர் தன்பின்னே நன்றாய் நடந்தனரே
கந்த மலர்க்குழலும் கடுகவே தான்நடந்தார்
கூட்டியே தானும்வந்து கோமானைத்தேவியுடன்

தேடுபுகழ் நந்தி திருவாசலிலேநிறுத்தி
எண்ணத் தொலையாத இடியேறு தான்முழங்க
வண்ணக்கடல்முரசு வகை வகையாய்த் தான்முழங்க
சிந்தை மகிழத் திருநந்தி தான்கொலுவில்
வந்துபுகுந்து வலக்கைபிரம்பதனால்
இதங்கள்அறியாமல் எதிர்ந்துநின்ற தேவர்தம்மை
ஒதுக்கி விலக்கி ஒரு பால் நிறுத்தினரே
நேரே விலக்கி நிறுத்தினார் விஞ்சையரை
உற்றபிரம்பால் ஒதுக்கி ஒரு புறமாய்ச்
சென்னி வணங்கித் திரண்டுதொழும் தேவர்களை
உன்னிஅடித்து அங்குஒருபால் நிறுத்தியபின்
காலஎமதூதரையும் கடக்க நிறுத்தினரே
வருணன்முதல் மற்றவரை வாகாய் நிறுத்தியபின்
ஈசனுக்குத் தோழனாய் ஏற்றகுபேரனையும்
உருத்திரரையும் பக்கத்து உண்மையாய்த் தான்நிறுத்தி
ஆனைமுகத்தானுடனே ஆறு முகத்தனையும்
சேனைநடு மத்தியிலே சிறக்க இருத்தியவர்
பக்கத்தில் வீரபத்திரனைத் தான்நிறுத்தி
மேனகையினோடு விளங்கும் அரம்பையுடன்
ஆனஊர்வசியும் அந்தம்உள்ள திலோத்தமையும்
நாடகங்கள் ஆடும்அந்த நாதன் சிவசபையில்
தேடுபுகழ்நந்தி சேர்ந்தபல நாதர்களை
மிஞ்சு நவக்கிரக வேடிக்கை உள்ளவரை
அஞ்சாமல் சொல்லி அடைவாய் நிறுத்தினர்காண்
காளிகளை எல்லாம் கலக்க நிறுத்தியபின்
சத்தமகா ரிஷிகளையும் சார்பினில்நிறுத்தி
மற்றும்உள்ள பேர்களையும் வகையாகத் தான்நிறுத்தி
விருப்பமுடன் நந்தி விண்ணவர் கோன் கிட்ட வந்து
வந்துஅரனார் பாதம்வணங்குவாய் என்றுசொல்ல
அந்தப்படியே அரனார் திரு முன்பு
சென்றுபுகுந்து இந்திரனும் தேவிஇந்திராணியுமாய்
மன்றில் விழுந்து மலர்அடியைப் போற்றிசெய்யச்
சிந்தை மகிழ்ந்துசிவனார் எழுந்திருஎன்றார்
திருவாய் மொழிகேட்டுத் தேவியுடன் இந்திரனும்
எழுந்துநின்று கைகட்டி எதிராகவேநிற்க
வந்தகருமத்தை வகையாய்ச் சொல்லும்என
இந்திரனும் அப்போது இயல்பாகச் சொல்லுகிறேன்
புத்திரன்இல்லாமல் பொன்உலகை ஆண்டிருந்தேன்
புத்திரன் இல்லாதார் பொசிப்பு புழுவலவோ

எத்தனைதான் வாழ்வுஇயல்பாய் படைத்தாலும்
புத்திரனைஇல்லாமல் புலைநரகில் போவேனோ
சந்ததிதான் தாரும்எனத் தார்வேந்தன் கேட்டதின்பின்
இந்திரனேசந்ததிதான் தந்தோம் எனஉரைத்தார்
சந்ததிதந்த சங்கரனார் சொற்படியே
இந்திரனும் தேவியுமாய் இன்பமுற்று மீண்டனரே
மீண்டுமே அவர்கள் விரைந்து வரும்வழியில்
ஊர்பதியை நோக்கி உலாவிவந்தார் அப்போது
காமதேனு நற்பசுவைக் கயிலையிலே வரவழைத்துப்
பசுவின் முகம்பார்த்துப் பரமன்அருள்புரிவார்
சந்ததிஇல்லாமல் தவம்செய்த இந்திரனுக்காய்
உன்னைஅவர்களுடன் அனுப்புகிறோம் ஒன்றுசெய்வாய்
அன்புடனே நீபோய் அருகிருந்து தான்வளர்ந்து
பாலகனைஈன்று பாங்குடனே தான்கொடுத்து
வந்துவிடு நீயும்மாதே இளம்பசுவே
என்று சிவனார் இவ்வார்த்தை சொல்லியபின்
நிமலன் தனைப்பார்த்து நெடுமூச்சு தான்எறிந்து
தோத்திரங்கள் செய்து சொல்லுகின்றதுஅப்பசுவும்
பூலோகம்போய்இருக்கப் பொறுக்குமோ என்உடல்தான்
பூலோகம்போய்இருந்து புத்திரனைஈன்றபின்பு
எனக்குமே மோட்சகதி எப்போது எனக்கேட்க,
அப்போதுசிவபெருமான் அன்பு மிகப்பெருகி,
வாராய்பசுவே வருந்தி மெலியாதே
புத்திரனைஈன்றவுடன் பூந்தேர் அனுப்புகிறோம்
உன்ஆணை நாமும் உடன்அழைத்துக்கொள்கிறோம்
என்றுசிவனார் எளிதாய் உரைத்தபின்பு
போய்வருவேன்என்று பொருந்திவிடை கேட்டதன்பின்பு
அந்நேரமே சிவனார் அன்புவிடை தான்கொடுத்தார்
பசுவுமேஅப்போது பரமன் அருள்படியே
இடியும் கடலும்போல் எங்குமே தான்முழங்க
அவர்அடியின்பின்னே அலறித்தொடர்ந்ததுவே

விருத்தம்

அந்தணர் கயிலை வாசன் அருள்படி காமதேனு
இந்திரன்பின்னேநல்ல இளங்கன்றாய் வேடங்கொண்டு
பந்து போல் குதித்துமெள்ளப் பாரினில்வந்தும்ஏவ
வந்ததுஓர்பசுவை இந்திரன் வரிசையாய்த் துதிகொள்வானே

* * *

வந்ததுஒரு கன்றை வாரிஎடுத்து அணைத்து
அவாவிஎடுத்து அங்கம்எல்லாம் தான்குளிர்ந்து
இன்று நமக்கு ஈசர் ஈந்துஅருளும் செல்வம்என்று
கன்றைஎடுத்துக் கடுக வழிநடந்தார்
பூபாலர்எல்லாம் பூமாரி பெய்தனர்காண்
மற்றும்உள்ளார் எல்லாம் மனமகிழ்ந்துகொண்டாட
பிரமா முதலானோர் பிரியமுடன் பார்த்துநிற்க
நடந்தார்இருவருமே நல்உலகம் தான்நோக்கி
ஒருவருக்குஒருவர் உவந்துவந்து தான்பேசி
சந்ததியாய்வந்தகன்றைத் தான்கொண்டுசென்றார்கள்
பட்டணத்தில்உள்ள பரிஜனங்கள் எல்லோரும்
இந்திரன்இந்திராணிஇவர்கள் வரவுகண்டு
சந்ததிபாக்கியமும் தான்பெற்று வாரார்கள்
என்றுசொல்லிஅப்போது இயல்பாய்ப் பறைஅறைந்தார்
தேசம் எல்லாம் தான் அறிய சிறப்பாய்ப் பறை அடித்தார்
பறைஓசை கேட்டவர்கள் பாக்கியம்பெற்றோம்எனவே
பட்டணம்சென்ற தேவபதியும் இந்திராணியுமாய்
சிங்காதனத்தில் சிறக்கவே தான்இருக்க
அம்பொற்தருவான அழகான கற்பகக்கீழ்
செம்பொற் பதியில் சிறப்புடனே தான்இருக்க
நல்லதுஒரு சுந்தரியும் நன்றாய்மனமகிழ்ந்து
சங்கரனார் தங்களுக்குத் தயவாய்க் கொடுத்தகன்றை
மங்காதகன்றை வளர்த்துஎடுக்க வேணும்என்று
தாதியரை அழைத்து தயவாய் உரைத்தனள்காண்
மான்அனையீர் நீங்கள் மனமகிழ்ந்து கொண்டாடி
கானகத்தில்ஓட்டாமல் கனமாய் வளர்க்கஎன்று
சாற்றும்அந்த வார்த்தைதனைத் தான்கேட்டுத்தாதியர்கள்
சீருடனே போற்றித்திரமாய் வளர்க்கல்உற்றார்
போற்றிஎடுத்து அணைத்துப் பொன்போல் வளர்க்கல்உற்றார்
சீருடனே போற்றித் திரமாய் வளர்க்கல் உற்றார்
ஒருநாளுக்குஒரு நாள் ஓங்கிவளர் சந்திரன்போல்
அருமையாய்க் கன்றுதனை அன்பாய் வளர்த்தனர்காண்
பேர்இட வேண்டும்என்று பேர்முகூர்த்தம் தான்பார்க்க
பஞ்சாங்கப்பார்ப்பாரைப் பாங்காய் அழையும்என்றார்
சாத்திர வாதி எல்லாம் சடிதி அழையும்என்றார்
தபோதனரை எல்லாம் தாமேஅழையும்என்றார்
கட்டியக்காரர்சென்று கடிந்து மிகஓடி
பாப்பாரைஎல்லாம் பாங்காய் அழைத்துவந்தார்
தபோதனர் கேட்டவுடன் சந்தோஷமாகவந்தார்
சாத்திர வாதிஎல்லாம் தானேதான் வந்தனர்காண்

நாளும்முகூர்த்தமோடு நல்லதினமும்பார்த்து
யார்பேர் இடுவோம் என்று ஆலோசனை செய்தார்
அப்பொழுது வியாச பகவான் அருளுடன்
இந்திரன்தாயார் இளங் கொடியாள் தன் பெயரை
இடும்என்று சொன்னபடி எல்லோரும் சொன்னார்காண்
அந்தப்படி பெயரை அமைக்கவே வேணும்என்று
வைகாசிமாதம் வளர்ந்த இருபத் தொன்றில்
சுக்கிர வாரமதில் சூழ்ந்த திருவாதிரையில்
அமிர்த கணயோகம் அன்பாய் இருக்குதுஎன்றார்
அந்தப்படியே அவர்கள்மொழி தப்பாமல்
பட்டணம்எல்லாம் பதிவாய் அலங்கரித்து
சோடித்துஎல்லாம்தமக்கும் கொடுத்தாரே தட்சணைகள்
தட்சணை கொடுத்தவுடன் திருப் பெயரைத் தான்அழைத்தார்
மா வேந்திரி என்று வரவழைத்தார்அப்பசுவை
அழைத்தவுடனே அனைவரும் தானம் இட்டார்.
மாதானம் கோதானம் வஸ்திரதானம் செய்தார்
வாத்தியங்கள் எல்லாம் வரிசையாய்த் தான்முழங்க
பதினெட்டு வாத்தியமும் பாங்காய் முழங்கிடவே
நாடகசாலைப் பெண்கள் நாட்டியங்கள் தான்ஆட
ஓமங்கள், பூசைகள் ஒன்றும் தவறாதபடி
அன்னதானங்கள்முதல் அன்பாய்க் கொடுத்தனர்காண்
இந்தப் படியே இருபது நாள்வரைக்கும்
பட்டுப் பட்டாவளியும் பாங்காய்க் கொடுத்தனரே
மைதவமும் கன்றுக்கு வகையாய்ப் பணிபூண
பொனனாலே துப்பும் புரிகயிறும் போட்டார்காண்
நாலு காலில் குளம்பும் நல்லதொரு தங்கமதாய்
பேனியும் தங்கமதாய் மின்னும் படிசெய்து
நவரத்னவகைகள்எல்லாம் நன்றாகத்தான்அழுத்தி
ஆபரணாதிஎல்லாம் ஆணிமுத்தும் வயிரமுமாய்
கொம்புக்குநல்ல கோமேதகம் அழுத்தி
நாலு காலில் சிலம்பும் நல்லதொருவைரத்தால்
வாரியே பூட்டி வளர்த்தார்கள் நற் பசுவை
பால்அமுதம் ஊட்டி பரிவாய் வளர்க்கையிலே
பூம்பந்தலுக்குள்ளே போற்றி வளர்க்கையிலே
இந்த வரிசையாய் இதமாய் வளர்க்கையிலே
நாளிரண்டு தன்னிலே நற்பசுவும் தான் வளர
திங்கள் பிறை போலச்சீர்பெற்றுத் தான்வளர
பிள்ளைஎன்று சொல்லிப் பெருமையுடன் தான்வளர்த்தார்
இந்திராணி செய்யும் வகை ஏதென்று தான்கேட்கில்
நித்தப்படி நடக்கும் நியம நிஷ்டை சொல்லுகிறேன்

பொய்கைதனில் சென்று போதவேநீராடி
சிவ பூசை தவர் பூசை செப்பமுடன் செய்தபின்பு
தங்க நற் செம்புதன்னில் தானே ஜலம்கொண்டு
புஷ்பாதிகள் எல்லாம் போதவே கொண்டுவந்து
பசுவின் பாதமதைப் பாங்காகச் சுத்திசெய்து
பத்திரபுஷ்பத்தைப் பாங்குடனே தான்சாத்தி
சிவனைநினைத்துத் தோத்திரங்கள் செய்துவந்தாள்
இந்தப்படியாய் இருக்கும்அந்த நாளையிலே
பசுவின் முகத்தைப் பார்த்து மனம்சலித்து
நெடுநாளும் தான்ஆச்சே, நீயும்என்னைப்போலே
நிற்கும்வகை ஏதென்று நிமலனையே தான்தொழுவாள்.

விருத்தம்

அய்யய்யோ சிவனே நான்செய் அறத்தினும் கொடுமைஉண்டோ
வையகம்தன்னிலேதான் மலடிஎன்று என்னைவைத்தும்
துய்ய நற் பசுவும்கூடச் சுரப்பிலா மலடாய்நிற்கச்
செய்யும் மகறு ஏதோ வென்று சிந்தையும்நொந்துசொல்வாள்

* * *

நாம்தான் மலடாய்இருந்தோம் நாம்வளர்த்த நற்பசுவாம்
தவத்தருமையால் வந்த காமதேனு தான்மலடாம்
மலடாகிநின்ற மயக்கமதை நான்பார்க்க
விதியோஇதுவும் விளம்பீரோ என்றுசொல்ல
இந்திரரும்கேட்டு ஏங்கி முகம் வாடி
நாகமடந்தையரே நான்ஒன்று சொல்லுகிறேன்
இதுவரையும் பாலன் எமக்குவரக் காணோமே
இன்னமும் முன்னேபோல் எங்கள் பரமேசுவரவன்பால்
தவசுசெய்ய நான்போவேன் தப்பாதுஇளங்கொடியே
சங்கரனை நோக்கித் தவசு மிகச்செய்து
வண்மை உள்ள கானகத்தில் மகாவிரதம் தான்இருக்க
பூங்கா வனம்தேடி பேசுகிறேன் என்றுசொல்லி
கமண்டலமும் புலித் தோலும் கையில் பிரம்புடனே
கப்பறையும் புத்தகமும் கையில் மழுவாளும்
பத்தினி அக்கினியைப் பாங்காகத் தான்வளர்த்தி
இந்திராணி தன்னிடத்தில் இயல்பாய் அனுப்பினன்காண்
வந்துமே கானகத்தில் வாய்த்ததவசுசெய்ய
சிவனாரை நோக்கித் தெண்டன்இட்டுத் தவசுஇருந்தான்
இந்திரனும் கானகத்தில இசைவாய்த் தவசுஇருந்தான்
வாசியை நோக்கி வாகாய்த் தவம்செய்தான்

அஞ்செழுத்தை நெஞ்சில்வைத்து அரனை மிகநினைந்து
யாராலும் முடியாத அதிகதவம் செய்யல்உற்றான்
சற்றும்அசையாமல் தவம் செய்தான்அப்போது
முப்பத்து முக்கோடி தேவர்களும் மூத்தோரும்
நிருபன் குபேர நிருதி திசை பாலகரும்
சந்திரரும் சூரியரும் சத்த மகாமுனியும்
தேவர்கள் எல்லோரும் சேரவே தான்கூடி
மூவரையும் தெண்டன்இட்டு முறைமையாய்ச்சொல்லுகிறார்
சித்தம்இரங்குமையா தேவந்திரனாரும்
புத்திரவாஞ்சையால் பூமிமறந்துவிட்டார்
மைந்தனைவேண்டி மகாதவசு செய்கின்றார்
அப்போது அரனார் அகமகிழ்ந்து சொல்லுகிறார்
நந்தீசர் தன்னை நயமாகத் தான்அழைத்து
வள்ளுவனை இங்கே வரவழையும் என்றுஉரைத்தார்
அப்படியே வள்ளுவனை அழைத்துவந்தார்அந்நேரம்
செய்யசிவனாரும் திருவாய் மலர்ந்துஅருளி
சித்திரபுத்திரரைத் தேடி அழையும்என்றார்
சித்திரபுத்திரரைச் சிறப்பாகத் தான்கண்டு
அத்தனார் உம்மை அழைக்கிறார் என்றுசொன்னார்
சித்திரபுத்திரரும் சிந்தை அகமகிழ்ந்து
பாதத்தில் வீழ்ந்து பணிந்துகண்டார் புத்திரரும்
தேசம் விளையாடி வந்த சித்திரபுத்திரனே
கணக்கால் பெரியவனே காரியத்தில் வல்லவனே
தேவேந்திரனும் அங்கே திகைக்கிறான்பிள்ளைஇன்றி
மைந்தனைவேண்டி வருந்துகிறான் என்றுசொல்ல
சித்திரபுத்திரரும் செய்திஒன்று சொல்லுகிறார்
அரிய தவம் பண்ணினாலும் ஆவதுஉண்டோ இந்திரற்கு
மைந்தன்பிறக்க வழக்கில்லை நாயகரே
என்றுஅருளிச்செய்ய இருந்தவர்கள் எல்லோரும்
சக்திஅருள் கொண்டு தவம்செய்த இந்திரற்கு
புத்திரனைத் தான்கொடுப்பாய் பூத நாதா என்ன
சிவனாரும் அங்கே திருவாய் மலர்ந்துஅருளி
பூமி விளையாடிவந்த புண்ணியரே நீரும்ஒரு
தீமையை நீக்கும் என்று திருவாய் மலர்ந்தருளி
பாலகராய்ப் போய்ப்பிறக்க பரமன் விடைகொடுக்க
புத்திரராய்ப் போய்ப் பிறக்கப் பினாகி விடை கொடுக்க
தேவேந்திரன் வயிற்றில் சென்மிக்கை தர்மமல்ல
இந்திரனுக்குப் பிள்ளை எழுதவில்லை கணக்கில்என
அந்தமொழிகேட்டு அரனாரும் தான்மகிழ்ந்து

எந்தவகையானாலும இந்திரனுக்கு அன்புடனே
செந்தாமரைப்பூ தினம்பூக்கும் பொய்கையிலே
இந்திராணி தான்வளர்த்த இளம்பசுவும் தாகமோடு
தண்ணீர்குடிக்கத் தான்வருமே அந்நேரம்
தாமரைப்பூவாகத் தண்ணீருடன் கலந்து
ஆவின்வயிற்றில் அவதரித்தே அற்புதமாய்
வளர்த்த பசுவயிற்றில் வருவாய் எனஉரைத்தார்
ஆகில் அடியேன் அருள்பெற்றேன் என்றுசொல்லி
கூறுபெற்றேன் என்றுசொல்லிக்கும்பிட்டு எழுந்திருக்க
தேவர் முனிவரையும் சிறப்பாகவே அனுப்பி
வாய்புதைத்து நின்ற மகவை மிகநோக்கி
செப்புகின்றார் ஈசுவரரும் சித்திரபுத்திரருக்கு

விருத்தம்

அரனுடன்வாழும் தேவரான ஓர் உயிர்கட்கு எல்லாம்
பரனுடன் பாவ புண்ய பத்திரம் எழுதவேண்டிக்
கரமிசை உதித்த சித்திரபுத்திர மாணிக்கமே என்று
அருமையாய் அவனை ஈசன் வரவழைத்து அருள்செய்வானே

சித்திரபுத்திரனாரைச் சிவனுமே வரவழைத்து
புத்திர வாவி தன்னில் பாங்குடன் பூவாய்ச் சென்று
வச்சிரன வளர்த்த ஆவின் வயிற்றில் சென்றுபுக்குப்
புத்திரனாய்ப் பிறக்கப் போஎன விடைகொடுத்தான்

எழுதிய கணக்கைநீயும் இறைவன்மால் வசத்தில்ஆக்கிப்
பழுதுஇல்லாப் பூமிதன்னில் பகுத்துரை தெரியஅப்பால்
வழுவில்லாது ஒழுகநாமும் வரம்உனக்கு அருளிச் செய்தோம்
எழும்எனப் பூமிப்பாரக் கணக்கையும் மாலுக்குஈந்தான்

ஈசுவரரும்ஈசுவரியும் இன்பத்துடன்மகிழ்ந்து
எந்தெந்த புத்தகத்தை எடுப்பேன்நான் என்கோவே
ஆயிரம்பேர் ஆனாலும் அசைக்கஒண்ணாப்புத்தகத்தை
ஞானநெறி நீதிமறை நன்னூலின் நீடு புகழ்
பூண்டவர்கள் புத்தகத்தைப் போய்எடுத்து வாரும்என
போய்எடுத்துவந்து பொற்பலகை தன்னில்வைத்தார்
பொன்னின் எழுத்தாணியுடன் புத்தகமும் கைக்கொடுத்தார்
முற்கணக்கும் பிற்கணக்கும் முன்ஏட்டுஅனுப்படியும்

எக்கணக்கும்பார்த்து எழுதும்என்றார் புத்திரரை
எழுதிஅந்த நாள்வரையில் எடுத்துக் கொடுத்தனர்காண்
ஏழுலோகக்கணக்கும் எழுதி மிகக்கொடுத்து
பாவி கணக்கும் பஞ்சபாதகர் கணக்கும்
நாக லோகததில் உள்ள நன்மை உள்ள தன் கணக்கும்
பூமிதனில் மாயவனார் புண்ணிய பாவக்கணக்கும்
எல்லாக்கணக்கும் எழுதி மிகக்கொடுத்து
ஆதிபரமசிவன் அண்டர் அண்டன்தான் வகுத்து
மூத்தகணபதியும் முதுகு வலம்இருக்க
இளைய குமாரன் இடதுபக்கம் தான்இருக்க
தேவாதிகள் எல்லாம்சேரவே தாம்இருக்க
இருடி முனிவர்கள் எல்லோரும் தாம்இருக்க
சாதிபதினெட்டும் தப்பாமல் தான்வகுத்து
எமதர்ம ராசன் இயல்கால தூதருடன்
பல்லாயிரம்கோடி பகிர்அண்டம் தான்வகுத்துப்
புண்ணிய பாவம் புதுமையாய்த் தான்வகுத்து
இந்தவரைக்கணக்கை இயல்பாகத் தான்எழுதும்
வச்சிர காயமாய் வரைந்து கணக்குஎழுதும்
பத்திரமாய்அதிகாரம் பலநாளும் பாங்குடனே
தப்பாமல் உந்தனுக்குத் தந்தோம் எனஉரைத்தார்
சந்திர சூரியர்கள் தங்கள்ஒளிபோல்எனவே
குண்டலமும் காதில்இட்டுக் கூந்தல் முடிசூட்டி
ஆபரணாதிஎல்லாம் அழகழகாய்த்தான்பூட்டிச்
சிவனாரிடத்தில் தீர்க்க விடைவாங்கி
அம்மைஉமையாளிடத்தில் அன்பாய் விடைவாங்கி
எண்ணாயிரம்பூதம் எடுக்க ஒண்ணாப்பட்டோலைக்
கூட்டிச் சமைத்துக் கொடுத்தார்கள் அந்நேரம்
கட்டிச்சுருட்டிக் கக்கத்தில் தான்இடுக்கித்
தாங்குவாய்என்று தானேவரம்கொடுத்தார்
தாமரைப்பூவாகத் தாபித்தார்உத்தமரை
சித்திரைக்குள் சித்திரையில் சிறந்த பௌரணையில்
அந்தத் தலைக்கிழமை ஆதித்தவாரத்தில்
புத்தகமும் முந்நூலும் கூடப் பிறக்கும்என்றார்
சிவனார் அருள்படிக்குச் சிறநத விடைவாங்கி
அயிராவதங்கள் என்னும் ஆனைகளைத் தான் பூட்டும்
ஆகாசத்தேரும் அப்போது தான்கொடுத்தார்
ஆகாசத்தேரில் அப்போது தான்ஏறி
வாராரே உத்தமனார் வாவி தனைநோக்கி

சண்பகங்கள்ஆடும்அந்தச் சிறந்ததொருபொய்கையிலே
ஆணிப்பவளமும் அடுக்கடுக்காய்த் தான்விளையும்
வயிரவைடூரியமும் வச்சிர கோமேதகமும்
புஷ்பராகங்களும் பொலியும்அந்தப் பொய்கைதனில்
முத்துக்கள் வந்துமுழங்கும்அந்த வாவிதனில்
சங்குகள் சூல்கொண்டு தவழும்அந்தப் பொய்கையிலே
கருடனும்தன்னுடைய கிளைகூடி கொண்டாடும்
மயில்இனங்கள்எல்லாம் மகிழ்ந்துவிளையாடும்
அன்னங்கள் தாராக்கள் அமர்ந்துஆடும் பொய்கையிலே
வானரங்கள்பாடி மகிழ்ந்து விளையாடும்
மாடப்புறாக்கள்எல்லாம் வரிசையாய்த் தான்இருக்கும்
புனுகுடன்பிள்ளை பொருந்தி மிகவாழும்
சவ்வாதுடன்பிள்ளை தானும் மிகவாழும்
கஸ்தூரிபிள்ளை கவியும்அந்தப் பொய்கைதனில்
கவரிமான் வந்துகலந்து விளையாடும்
காண்டாமிருகம் கதித்தாடும் வாவிதனில்
புஷ்பாதிகள் எல்லாம் பொலியும்அந்த நீரதனில்
கனிவகைகள் எல்லாம் காய்க்கும்அந்தப் பொய்கையிலே
செந்நெல்விளைந்து சிறந்துஇருக்கும் நீர்வாவி
மல்லிகை முல்லை வாய்த்தசிறுபிச்சிகளும்
இருவாட்சிபிச்சி இருந்து மிகவீசும்
மருவும்மருக்கொழுந்தும் மணம் வீசும்பொய்கைதனில்
ஏலம்கிராம்பும் இலங்கும்அந்த நீர் வாவி
சாதிக்காய் பத்திரியும் தான்விளங்கும் பொய்கையிலே
மரங்களில் தேன்அருவி வந்துமிகப்பாயும்
வண்டுகள் தும்பிமுதல் வந்துநுகர் பொய்கைதனில்
மந்திகள்பாய்ந்து மதுஉண்ணும் பொய்கைதனில்
செந்தாமரை பூத்துச் சிறப்பிக்கும் வாவிதனில்
அல்லிமலரும் அப்படியேதான்பூக்கும்
சந்திரர்கள் சூரியர்கள் தான்உதிக்கும் பொய்கைதனில்
ஆதிப்பிரமாவும் அமர்ந்துஆடும் நீர்வாவி
நாராயணர் முதலாய் நல்ல ரிஷிகளுமே
முனிவர்முதலானோர் முழுகும்அந்தப பொய்கையிலே
கன்னியர்கள்எல்லாம கலந்துவிளையாடிடுவார்
பழைய வினைகள்எல்லாம் பறந்துஓடும்கண்டீரே
தீவினைகள்எல்லாம் திடுக்கிட்டுத் தான்ஓடும்
பிணிகள்முதலாகப் பிறக்கிட்டுத் தான்ஓடும்
கிழவர்முழுகினால் குமரர் ஆகிப் பிறப்பார்
இந்தவிதமாய்இருக்கும் அந்தப்பொய்கையிலே
சித்திரபுத்திர்ரும் சீராகவந்துஉதித்தார்

தாமரைப்பூவாகத் தான்வந்து அவதரித்தார்
இனிமேல்நடக்கும் இக்கதையைக் கேளும்என்றார்
ஏலக்கருங்குழலாள் இந்திராணி அவள்தனக்கு
நித்திராதேவி நிறையவே தான்பிடித்து
பஞ்சணைமெத்தையினில் சயனித்தாள்பைங்கொடியும்
அப்போது சொப்பனங்கள் அழகாகக் கண்டனளே
கண்டுமகிழ்ந்து கடுகி எழுந்திருந்து
தாதியரைத் தாம்அழைத்து தானுமே எடுத்துஉரைப்பாள்
இந்திரரைப்போலே எந்தன் மடிமீதில்
சந்திரர்கள் சூரியர்கள் தங்கள் ஒளிப்போலப்
பதினான்குலோகம்முதல் பண்பாய்க் கணக்குஎழுத
செம்பொன் எழுத்தாணியுடன் சேர்ந்தபிள்ளை தான்இருக்க
பச்சை உடம்பு நல்லபால் சுரக்கக்கண்டேனே
காயாதவாழை காய்ச்சவும்கண்டேனே
இன்பம்பெருகி இருதோளும் பூரித்தேன்
கொட்டைப்பலாமரமும் கொழுந்துவிடக்கண்டேனே
கண்டகனாவும் கைமேல் பலிக்கஎன்று
சிந்தித்துநின்று சிவன்பாதமேதொழுது
வேழமுகத்துவிநாயகனைத் தெண்டன்இட்டு
மயில்ஏறும் பெருமானை மனமகிழ்ந்துகொண்டாடி
மூவரையும்அங்கே முழுதுமேதெண்டன்இட்டாள்
சூரியபகவானைத் தோத்திரங்கள் செய்யல்உற்றாள்.
கண்ட கனாப்படியே காசினியில்கொண்டாடி
குண்டலங்கள் மின்னக்குமாரன்வந்து தோன்றுதற்குப்
பொன்கனக மாரி பொழிந்திடுங்கள் எல்லோரும்
என்றுஅரனார் பாதம் ஏத்திப்பணிந்துநின்று
இந்திராணி தான்வளர்த்த இயல்பசுவை அந்நேரம்
தும்பு தரித்துவிட்டார் சூரியனும் அப்போது
கட்டுஅவிழ்த்துக்கொண்டு கடுகப் புறப்படுதே
இந்திராணிஅம்மை இளங்கோதை ஓடிவந்து
முத்திமுகந்து முகத்தை மிகத்தடவி
நான்மலடிஎன்று நாடுஎல்லாம் தான்அறியும்
என்னோடேகூட நீயும்மலடு ஆகாமல்
இனத்துடனேகூடி இன்பமுற மேய்ந்திடுவாய்
வனங்கள்தனிலே வளர்மிருகம் மெந்தஉண்டு
இனத்தாரைவிட்டு இனம்பிரிந்துமேயாமல்
எல்லைகடவாமல் இளம்பயிரைத் தின்னாமல்
ஈனாத சாலி இளம்சாலி தின்னாமல்
குலையோடே ஆமணக்கைக் கொழுந்தோடுஅருந்தாமல்
சோளக்கதிர்கண்டால் சுற்றிமேயாமல்

இளம்கடுகு நாய்க்கடுகு ஏறிட்டுப்பாராமல்
கள்ளிகளைத்தின்னாமல் காய்ந்தபுல்லு மேயாமல்
இத்தனையும்நீக்கி இதமாகத் தான்மேய்ந்து
மாலைகறுகறுத்து மை இருளாகும்முன்னே
எல்லைக்குவந்துவிடு என்மகளே என்றுசொல்லி
இந்தப்படியே இசைந்தபுத்தி தான்சொல்லி
மேய்ந்துவா என்றுவிட்டாளே அப்பசுவை
மேய்ந்துவருவதற்கு மெய்குளிர்ந்தே அப்பசுவும்
சிலம்புகலகலஎனச் செஞ்சலங்கைஓசையிட
ஆபரணத்தோடே அசைந்தே விளையாடி
அடிமேல்அடிவைத்து அன்னம்போல் தான்நடந்து
காட்டோடே சென்று கடுகவே தான்மேய்ந்து
பொற்புல்லுத்தின்று புனப்புல்லும் தான்அருந்தி
தண்ணீர் தாகத்தைத் தான்பொறுக்க மாட்டாமல்
கண் ஆயிரம்உடைய காவலனார்சோலையிலே
இந்தப்படியே இருக்கிறநேரத்தில்
சிவனாரும் அங்கே சித்த மகிழ்ந்து அந்நேரம்
அலைகடலிலே உதிக்கும் ஆதித்தபகவானை
விரையவே தான்அழைத்து விடைதந்தார் என்னவெனில்
தேசமதை ஆளும் தேவேந்திரன் தேவி
பிள்ளையாய்த் தான்வளர்த்த பெரியதொரு பசுவும்
சம்புத் தலத்தில் தான்நிற்கும்சோலையிலே
திக்கு திசைகள் தெரியாமல் நிற்குதுகாண்
வழிதடம்காட்டி வரும்போதுவாவியிலே
தண்ணீர்குடிக்கும் தருவாயில் நீதானும்
செந்தாமரைப் பூவைச் சிறப்பாகமுன்னிடுவாய்
என்று அரனார்சொல்ல ஏற்றபகவானும்
திகைத்தபசுவுக்குத் தெரியவழி காட்டிடவே
வழியின் படியே வந்ததேந ட சுவும்
சம்புமகாப் பொய்கை தன்னருகே வந்துநின்று
பொய்கைதனைக்கண்டு பூரித்தேஆகம்எல்லாம்
சுற்றிவலம்வந்து துய்யதிருநற்பசுவும்
தங்கப்படித்துறையைத் தான்கண்டேஅங்குஉள்ள
புதுமைகள்எல்லாம் பார்த்துப் பூரித்துஇருதோளும்
ஆவலுடன் தண்ணீர்அருந்தும் அந்தவேளையிலே
தப்பாமல்சூரியனும் தாமரையின்பூப் பறித்துப்
போடவே தான் தின்று பொறிகலங்கச்சூலாகி
வால்வீசிக் கரைஏறி மயங்கியே சூலாகி
முட்டுகளும் தான்அசைந்து முகமும் மிகக்குழைந்து
வாயில் நுரைதிரண்டு மயிர்குச்சு தான்எறிந்து

முட்டிமுணங்கி முன்வயிறு தான்தள்ளி
நான்குதிக்கும்பார்த்து நடுங்கிவழிநடந்து
காதும்அடைத்துக் கண்ணும்இருளாகிச்
சிவனாரை அங்கே தோத்திரங்கள் செய்துமெள்ள
எல்லைதனில்வரவும் ஏங்கிமிகத்தளர்ந்து
செட்டியர்கள் வீதியிலே சென்றுமேகால்மடித்துப்
படுத்ததேஅப்போது பலபேரும்ஓடிவந்து
நாடாளும் இந்திரற்கும், நாகமடந்தையர்க்கும்
தேடாததிரவியமே சிறந்த மகா தேவிஅம்மா
மயிலேநீ போகும்இடத்தில் மலை நாகம்தீண்டியதோ
மாயமிருகம் வளைந்துமிரட்டினதோ
நச்சுப்புல்லும்தின்றதுவோ நாகம்கடித்ததுஉண்டோ
என்றுபுலம்பி எல்லோரும் ஓடிவந்து
விஷத்துக்குப்பார்த்து மேல்தடவி நீறும்இட்டு
செட்டிச்சிகள்எல்லோரும் சிறக்கவேஓடிவந்து
சந்தன குங்குமம் தானும்மிகக்கொண்டுவந்து
ஆவின் மேல்எல்லாம் அடைவாகத் தான்பூச
அப்போது ஒருதாதியான ஒரு வார்த்தைசொல்வாள்
பசுவின்வடிவல்ல பாலன் வடி வென்றுசொல்லிக்
கழு நீரும்புல்லும்கலந்து குடிக்கவைத்து
சந்தனமும்பன்னீரும் தானும்மிகப்பூசி
ஆல வட்டம்கொண்டு அருகிருந்து தான்வீசி
சுற்றித்திரைகட்டி சூழவே காத்துஇருக்க
தாகம்தெளிந்து தான்விழித்துப்பார்த்தவுடன்
பசுவின் வயிற்றில் இருக்கும்அந்தப்பாலகனும்
சிறப்பாய்ப் பிறந்திருக்கவேணும் என்றார்செட்டிச்சிகள்
என்றபொழுதே எழுந்ததேநற்பசுவும்
செம்பொன்மணி மண்டபத்தில் சேரவேவேணும்என்று
ஆசாரம்ஏறி அசையாமணி அடித்துத்
தங்கமணித்தூணுடன் சாய்ந்ததுகாண் அந்நேரம்
இந்திரனார்தேவி இளங்கோதைதான்கேட்டு
அசையாமணியை அசைக்கவந்த காரியம்ஏன்
இந்திரரும் போனார் தவத்துக்கே என்று சொல்லி
எந்த விதமோ தெரியமாட்டுவதுஇல்லை
பாருங்கள் என்றுசில தாதியரை விட்டார்காண்
போனார்கள் தாதியர்கள் பொற்கொடியாள் சொல்கேட்டு
வந்துமே பார்த்து மறுபடிதான் சொல்லல்உற்றார்
நாக மடந்தையரே நல்லதொரு தேவியரே
வளர்த்த பசுவந்து மயங்கிக் கிடக்குதுஎன
எண்ணத் தொலையாத ஏற்ற பசுக்கள் உண்டு

எந்தப்பசு என்றுகண்டீர் ஏந்திழையீர் சொல்லும்என
கண்கள்பவளமுமாய்க் கண்டவர்க்குநல்லுறவாய்
நெற்றியிலே வெள்ளையுமாய் நிறம்எல்லாம் பொன்னிறமாய்
என்ற மொழிகேட்டு ஏங்கியேஓடிவந்து
சிங்காசனத்தைவிட்டுத் திரும்பியேஓடிவந்து
கராவின் அண்டையிலே கதறியேஓடிவந்து
தேனே மரகதமே தியக்கம்வந்த காரியம் என்
மானே மரகதமே மயங்கிடுவது என்னஎன்று
துயரத்துடனே சொல்லுவாள் இந்திராணி.

விருத்தம்

அந்தியில் நடந்தது உண்டோ வரனுரை தவிர்த்தது உண்டோ
நிந்தையாய்ப் பெரியோர் முந்நூல் நெடுமறை தவறினோமோ
கந்தன்மால்அயன் வேறுஎன்று கருத்தினில்நினைத்ததுஉண்டோ
உந்தன் முன்னோர்கள் செய்த இகழ்வினை முடிந்தவாறோ

மானே உனக்கு வஞ்சனைகள் செய்தது உண்டோ
கொள்ளிக் கண்ணியான கொடும்பாவி பார்த்தாளோ
மலைமீதில்ஏறி மலைப்புல்லுத் தின்கையிலே
விஷங்கள் கடித்ததுஉண்டோ விள்ளுவாய் எந்தனிடம்
உந்தன் திருமேனி உள்ளுடைந்து வாடுவதுஏன்
இந்த விதி வருமோ அறியேனே என்றுசொல்லி
குங்குமச் சந்தனமும் கூட்டிக் குழம்புசெய்து
செங்கையால் வாரித்து இமிர்ந்தாளே உத்தமியாள்
அப்போதுகூடத் தீரவில்லை அம்மயக்கம்
காடிக்கழுநீரும் கஞ்சியும் தான்கலந்து
விட்டபொழுதே குடித்ததுவே நற்பசுவும்
பாரக்களைதீர்ந்து பார்த்துமே அந்நேரம்
கண்கள் பொரிபறக்கும் காலசந்து வால்சுற்றும்
வானத்தைப்பார்த்து மனத்தை அருவருக்கும்
பூமியைப்பார்த்துப் பொறி கலங்கிச் சீறிநிற்கும்
ஆனந்தமாகி அதிர நடனமிடும்
சிவசிவாஎன்றுசொல்லித் திகைத்துநெடுமூச்செறியும்
அரகரா என்றுஅலறுவதைத்தாள கண்டு
தேவியும்அங்கே திகைத்துமொழி சொல்லுவாள்காண்
பசுவுக்குவந்தநோய் பார்த்துஅறிந்து சொல்வோரைக்
கூட்டிவாஎன்றாள் கோதை மயிலாளும்
ஆயர்இடையர் தம்மை அழைத்துஓடிவந்தார்கள்
வந்தவர்கள்அப்பசுவை மதியோடே தான்பார்த்து

சொல்லுவார் அந்தத்தோகை மயிலாளுக்கு
ஆரமுலைப் பசுவும் அடக்கி மிகச்சூல்ஆச்சே
இன்றுநாளை ஈனும்மீற்று மயக்கம்இது
என்றுதான் சொல்லி ஏகினார் அப்போது
பசுவின் மயக்கத்தைப் பார்க்க முடியாமல்
கோவிற்கால்தன்னில் கொண்டு வாஎன்றுஉரைத்தாள்
தாதியர்கள் கூடித்தான் எடுத்தார் அப்போது
கொண்டுவந்து விட்டார்கள் கோவின் கால்முன்பாக
சூழநிறைந்து தூயஇடம்பண்ணுவித்து
வாய்த்தபரிகாரிகளை வரவழையும் என்றுஉரைத்தாள்
பரிகாரிகள்வந்து பணிந்துமே தெண்டன்இட்டார்
கோவைப்பிழைக்கவைத்தால் கோடிதனம்கொடுப்பேன்
என்றமொழிகேட்டு ஏற்றபரிகாரிகளும்
காட்டு மருந்தும் கடுமருந்தும் ஒருகோடி
சிவனை நினைத்துத் தோத்திரங்கள் செய்கின்றாள்
அபயம் அபயம் என்றாள் அல்லல் ஒழிப்பாய்என்றாள்
செங்கை சிவக்கத் திருவயிற்றில்அறைந்தாள்
அய்ய கோஎன்று அடித்துவிழுந்துஅழுதாள்
அப்போதுசிவனும்அங்குள்ள தேவர்களும்
கயிலாசம்மீதுஇருந்து கண்டார்கள்அந்நேரம்
வானுலகம்தன்னை வழிதிறந்து பார்க்கல்உற்றார்
வைகுண்டலோகம் வழிதிறந்து பார்த்தார்கள்
அநியாயம் ஓவென்று அலறிஅழுத குரல்
மகாதேவர் தாமும் மனதாரக்கேட்டதன்பின்
சிவபெருமான் ஈசுவரியைத் திரும்பிமுகம்நோக்கி
போய்நீ உமையே புகழ்ந்துகுறி சொல்என்றார்
பத்தினியாய்ச்சென்று பகுந்துஉரைப்பாய் என்றுஅருள
அந்தஉமையவளும் அரனார் அருளியபடியே
கொக்கிற்கு சூடிக்குறமாது தன்னைப்போல்
பொற்கூடை பொற் பிரம்பு பொற்குடுக்கை தான்எடுத்து
பாடிநடந்துவந்தாள் பார்வதியாள்நற்குறத்தி
பாடிஇருந்து பரமன் இருதாள்பணிந்து
இருந்தவளைப் பார்த்து இறை சிவனார் சொல்லுகிறார்
குன்று மலைச்சி கொடிச்சி கொடிஇடிச்சி
வள்ளிக் குறமாமி மலைஅரசன்மகளே
எந்தனது கைபார்த்து ஏற்றகுறி சொல்லும்என்றார்
குறிகளும்அப்போது குறமாதுசொல்லுகிறாள்
மண்ணும் சுமந்ததுஉண்டு மரத்தால்அடியும்உண்டு
சிறுத்தொண்டர் பிள்ளை கறிஉண்ணப் போனதுஉண்டு
வண்டோதரியுடனே வாள்அரக்கன் மாளிகையிலே

கூடியேவந்து குழந்தையாய்ப்போனது உண்டு
ஆரூரில்சோழன் அருமைமகனை அன்று
தேர் ஊர்ந்து கொன்றுஎழுப்பச் செய்ததும் தான்உண்டு
பிள்ளை ஒருமைந்தன் பெருவயிறன் தானும்அவன்
அன்னைபிதாவுக்கு முன்னே அவன்பிறந்தான்
இப்படியும் நல்லகுறி இசைவாகத் தோணுதுஎன்றாள்
அப்போதுசிவனும் அருளுவார் உத்தமிக்குக்
கொச்சைக்குறத்தி குறிபார்க்கும்சிற்றிடைச்சி
கழுவிலிருந்து கை காட்டினர் தங்கையரே
உழுதுதிரிந்தபன்றி உங்கள் அண்ணன் தான்அல்லவோ
ஆச்சியர்கள்வீட்டில் அடியுண்டுகட்டுண்டு
வெண்ணெய்திருடிஉண்ட வெறியன் தங்கைஅல்லவோ
புன்னைமரத்தில் போய்ஒளித்தார் தங்கைஅல்லோ
என்றே இருபேரும் ஏற்றபடிகொண்டாடி
சந்தோஷமாகித் தாமேவிடைகொடுத்தார்
திருஆபரணம்எல்லாம்பூட்டிச் சிவனாரே
போய்வாரேன் என்று புனிதர்விடை பெற்று
மாதாவும் அந்நேரம் வானுலகு விட்டுஇறங்கி
தேவேந்திரலோகம் சென்றாள்குறமாது
மைவாழ் குறத்தி வானவர்தம் கோவில்வந்தாள்
இந்திராணிஅம்மை எங்குஇருக்கிறாள் என்றாள்
இந்திராணிகண்டு எழுந்துமே ஓடிவந்து
வாராய் குறமாது எனவே வந்தேன் எனஉரைத்தாள்
பாராய்குறத்திஅம்மா பசுவைப்பிழைப்பித்தால்
வேண்டியதுஎல்லாம்தருவேன்விதவிதமாய்க்கொடுப்பேன் எனச்
சொன்ன உடனே சொல்லுவாள் குறமாது
குறமாதுதானும் குறிசொல்ல இந்திராணி
ஆசனங்கள்போட்டு அடி பணிந்து கேட்கல் உற்றார்
குறமாதுதானும் குறுஞ்சிரிப்பு கொண்டுஅருளி
விநாயகபூசை செய்ய வேணும் என்று தான்சொல்லி
வேண்டியது எல்லாம் வேண்டிய படித் தான்குவித்து
விநாயகனைத் தான்நினைத்தாள் வெள்ளிமலைக்குறத்தி
கணபதியும் அங்குவர கனமாப்படைத்ததனை
உருட்டித்திரட்டி ஒருஉருண்டையாய்ப்பிடித்து
கவளம் கொடுக்கக் கணபதியும் வாங்கிஉண்டார்
சிங்கி அடித்துச் சிரித்தாள் குறமாது
கேளாயோ என்குறியும் கேவலம்என்று எண்ணாதே
எந்தன் குறிதானும் எள்அளவும்தப்பாது
செங்கை வடிவேலன் என்சிறு மைந்தன் கண்டாயே
மூத்த மகனும்அந்த மூர்த்தி விநாயகன்காண்

கந்த மருமகள் வள்ளி தானும்அவள்மாமி
ஆறார் சடைஈசர் அவருடைய பத்தினியாள்
பரமேசுவரருடைய பார்வதியும் நான்தாண்டி
நின்னுடைய சிந்தையிலே நினைந்தபடி சொல்லுகிறேன்
வானுலகம்ஆள மகன்வருவான் உந்தனுக்கு
அன்புடனேகேளாய் ஆன குறி தானும்
இம்மையிலும், மறுமையிலும் என்குறிகள் தப்பாது
ரத்ன முடிசூடி நல்ல மைந்தனாய்வருவான்
பெற்றிடுவீர்இப்போது பெருமாள் திருவருளால்
கண்நிறைந்த பாலகனார் கணக்குஎழுதத் தோன்றுகிறார்
நீலகண்டர் தம்அருளால் நினைத்தபடி கிடைக்கும்
வளர்த்தபசு வயிற்றில் மைந்தர்வந்து தோன்றுகிறார்
கோவின் வயிற்றில் குமரன் வந்து தோன்றுகிறார்
சித்திரைக்குச்சித்திரையில் சிறந்த பௌரணையில்
அத்தன் தலைக்கிழமை ஆதித்தவாரத்தில்
புத்தகமும் பூணூலும் பொருந்தியபொற்குண்டலமும்
ஆயிரம் கிங்கிலியர் அசைக்க வொண்ணாப்புத்தகமும்
எழுத்தாணி கைப்பிடித்துப் பிறப்பாண்டி என்மகளே
உத்தளமாய் வெண்ணீறுஒளிரும் திருமுகமாய்ச்
சித்திர புத்திரர்வந்து செனிக்கிறார் மாமயிலே
பூலோகம் ஆளப்பிறக்கிறார் பொற் கொடியே
எறும்புகடை யானைதலை எல்லாம் எழுதவல்லார்
புத்தகமும் தன்னில் புகழ்ந்துஎழுதும் புண்ணியனார்
அருளும்சிவனுக்கும் ஆனமகா விஷ்ணுவுக்கும்
வகுக்கும்பிரம்மாவுக்கும் வாழ்விக்கும் லட்சுமிக்கும்
கணக்கராய்த் தான்இருந்து காரியம்எல்லாம்பார்ப்பார்
இப்படியாக இருப்பான்காண் ஏந்திழையே
அரனார் கருவூலம் அவர்கையில்இருக்குதுகாண்
இந்திராணி மாதே இக் குறி பொய்யாது எனவே
இன்பத்தோடு உள்ளம்களித்து இருதோளும் பூரித்து
குப்பல் குப்பலாகப்பொன்குவித்தாளே ஏந்திழையாள்
அந்நேரம்தான் குறத்தி அவள்முகம்பார்த்து உரைப்பாள்
உன்னுடைய அன்பு இருந்தாலும்போதும்இனி
பொன்னும் பணமும் புலையன்படைக்கலையோ
நிறை நாழிமுத்தை நேரம்கொடும் என்றார்
மங்கையரே போய்வாரேன் மகாதுயரமும்தீர்ந்து
மகனுடனேநீயும் மகிழ்ந்துமேவாழ்ந்திருப்பாய்

விருத்தம்

உமையவள் குறிகள் சொல்லி உரைப்படி முடியும் என்று
சமையும் நல் இந்திராணிக்குத் தானுமே மனதைத் தேற்றி
அமையவே வரத்தை ஈந்து அடைவுடன் அரன்பால் சென்று
உமையவள் நடந்தது எல்லாம்உரைத்துஅரனிடத்துஉற்றாளே.

* * *

அப்பால்நடக்கும் அதிசயத்தைக் கேளும்என்றார்
நாக மடந்தையரும் நல்லகுறி என்றுசொல்லி
பசுவின்வயிற்றில் பாலன் பிறப்பதுதான்
நிச்சயமாய் எண்ணி நினைவுகளை விட்டு விட்டு
கொலுச் செய்யும் மண்பத்தில் கோலமுடன் வீற்றிருந்து
வானம் புவலோகம் மண்பூமி உள்ளது எல்லாம்
சிறப்பிக்க வேணும்என்று சீரானவள்ளுவனை
அழையும்என்றபோதே அழைத்து அங்கேவிட்டார்கள்
பசு வயிற்றில்இப்போது பாலன்பிறக்கும்என்று
ஏழுலோகத்தில்உள்ளோர்எல்லாரும் தாம்அறியப்
பறைசாற்றும்என்று பைங்கொடியாள் சொன்னவுடன்
வள்ளுவனும் அப்போதுவாகாய்ப் பறைஅறைந்தான்
தெரு வீதிகள் எல்லாம் சிறக்கவேபந்தல்இட்டார்
முத்து வளைத்து முகப்பந்தல்இட்டார்
வயிரக்கால் நாட்டி வகைவகையாய்த் தூண்நிறுத்தி
தங்கத்தால் ஓடுசெய்து சதிர்ப்பந்தல் போட்டார்கள்
பவளத்தால் காலும் பண்பாகத் தான்நிறுத்தி
விதவிதமாய்ப் பந்தல் வேடிக்கை யாய்ச்செய்து
இந்திரன் நற்சபைக்கு எதிரான தென்புறத்தில்
ஐம்பது காதப்பரப்பில் அகலம்உள்ள பந்தல்என்று
தங்கத்தால்கால்கள் சதிராகத் தான்நிறுத்தி
வெள்ளியினால் கால்கள் விதவிதமாய்த் தான்நிறுத்தி
நவரத்னத்தாலே நன்றாகத் தான்அழுத்திச்
சித்திரவிஸ்தாரமாய்ச் செய்யவே வேணும்என்றாள்
தேவாதி தேவர்எல்லாம் சிறக்கவே வந்திருக்க
தபோதனர்கள் எல்லாரும் தாமுமே வந்திருக்க
முனிவர்கள் எல்லாரும் முக்கியமாய்த் தாம்இருக்க
அந்தணர்கள் எல்லோரும் அப்படியே தாம்இருக்க
சங்கீதமேளம் முதல் தப்பாமல் வந்திருக்க
பட்டணத்தில்உள்ள பரிசனங்கள் தாம்இருக்க
வகை வகையாய்ப் பத்திவகுக்கவே வேணும்என்றாள்

பத்திபத்தியாகப் பண்பாகச் செய்யும்என்றாள்
அந்தப்படியே அடைவாகச் செய்யல்உற்றார்
பிள்ளை பிறக்கும் பெருமுகூர்த்தம் வந்ததுஎன்று
ஏழுலோகம் அறிய இடிபோல் முரசுஅடித்து
வாரும்என்றபோதே வள்ளுவனும் பறைசாற்றத்
தேவர் முனிவர் சிறக்கவே தந்தார்கள்
தபோதனர்கள் மூதறிவோர் தப்பாமல் வந்தார்கள்
ரிஷிகள் முதலாக எல்லோரும் வந்தார்கள்
அந்தணர்கள் எல்லாம் அப்படியேவந்தார்கள்
பட்டணத்தில்உள்ள பரிசனங்கள் வந்தார்கள்
கூன்குருடு செவிடு ஊமை கும்பலாய் வந்தார்கள்
தானங்கள்வாங்கத் தான்வருந்திஇருந்தார்கள்
வந்தபேர்க்குஎல்லாம் வடிவு ஆசனம்கொடுத்து
அவரவருக்குஎல்லாம் அயிராணிஅப்போது
திருமஞ்சனங்கள் சிறப்பாகக் கொண்டு வந்தார்
மாணிக்கச்சங்கு வலப்புறத்தே நின்றுஊத
வேதப்பிராமணர்கள் வேதங்கள் தாம்ஓத
மங்கையர்கள் வந்து வாழ்த்திக் குரவைஇட
கன்னியர்கள் எல்லாம் காவலாய்ச் சூழ்ந்துநிற்க
அங்கயற்கண்ணம்மை அருகிருந்து கைகொடுக்க
பார்வதிஅம்மை பண்பாக வந்தார்காண்
பொன்னின் கலம்ஏந்திப் புறப்பட்டாள்பூமாது
மன்னர்பெருமாள் வருகிற அதிசயத்தை
ஆயிரம் கிங்கிலியர் அசைக்க வொண்ணாப் புத்தகமும்
பொன்னின் எழுத்தாணியுமே பொற்பாகக் கைபிடித்துக்
காதில்இடும்குண்டமும் கனக்கவே தான்பூட்டி
அரனார் திருவருளால் ஆவின் வயிறுவிட்டு
பொன்னின் கலத்தில் பிறந்தார் புகழ்வீரர்
மின்னின் ஒளி போலே வெளிப்பட்டார் உத்தமனார்
பூமிவழி சிறக்கப் போர்வேந்தர் வந்துஉதித்தார்
பாவபுண்ணியங்கள் பதிந்துஎழுத, வந்துஉதித்தார்
ஏடும்பிடித்து இடது கையில் வெண்ணீறும்
காதிலேஇட்ட கனகமணிக் குண்டலனார்
கார்இந்திரன் மைந்தர் கணக்கர் இவர்என்பாரும்
எந்தஉலகில் இருந்தவர்காண் என்பாரும்
பிரமாவோ என்று பெருத்தமொழி உரைத்தார்
இப்படியும் சிலபேர் ஏற்றமொழி உரைத்தார்
திருவழகைச் சொல்லத் தேவரால்கூடாது
எல்லாக்கணக்கும் எழுதஎன்று தான்பிறந்தார்

நமச்சிவாய என்கின்ற நன் நாமச் சித்தமுடன்
நமனுக்கு அதிகாரி நான்என்ற சத்தமதாய்
சித்திரபுத்திரரும் சிறப்பாக வந்து உதித்தார்
தெய்வ லோகப்பெண்கள் சிறக்கக் குரவைஇட்டார்
பெண்கள்எல்லாம் கூடிப் பெருங் குரவை இட்டார்கள்
கன்னியர்கள்எல்லாம் களக்கக் குரவைஇட்டார்
பதினெட்டு வாத்தியமும் பார்எங்கும் தான்முழங்க
பூமாரி எங்கும் பொழிந்தார்கள் தேவர்எல்லாம்
தேவர்அமிர்தம் திருச்சங்கில் தான்ஏந்திச்
சீராக அங்கே சிவன்உமையாள் தான்கொடுத்தாள்
இந்திராணி தானும்இளங்கோதை அந்நேரம்
திருவாய் விளங்கித் தீர்த்தமும் தான்ஆடி
பட்டை உடுத்திப் பகவானைத் தெண்டன்இட்டுப்
பிள்ளையைவாரி முகத்தோடே முத்தம்இட்டாள்
அப்போது பச்சுடம்பாய் ஆச்சுஅவள் மேனிஎல்லாம்
பாலும்முலை இரண்டில் சுரந்ததுகாண் பைங்கொடிக்கு
தான்பெற்றதுபோலே தானகையில் போனாள்காண்
அப்பொழுது ஒருதாதி அறிவாய் எழுந்திருந்து
காயம் கடைசரக்குக் கனமாக உள்ளது எல்லாம்
கூட்டியே தானும்கொடுத்தாரே கோதையர்க்கு
அப்போது அவ்வையாரும் அங்கேதான் ஓடிவந்து
மைந்தனைக் கையால்எடுத்து மடிமீதில் வைத்திருந்து
வாகால் துருவி வாயில் செவிமூக்குஎடுத்துச்
சேரணை எடுத்துச் சுரிகுழலாள் கைஅமர்த்தித்
தொப்புள்அறுத்து குலவை மிகமுழக்கி
ஈரம்துவட்டி இணைஆடை தான்போட்டு
பஞ்சாடைக்குள்ளே பலகலை தான்அமர்த்தி
வேண்டும்உபசாரம் விதம் விதமாய்ச் செய்த பின்பு
தேவேந்திரன் வரவைக் காணோம்எனத்திகைத்து
இந்திராணி தான்புலம்பி ஏங்கல்உற்றாள் அந்நேரம்
பாலகனைப் பார்ப்பதற்குஎன் பர்த்தாவைக் காணோமே
அப்போது சிவனாரும் அங்குள்ள தேவர்களும்
வந்தவுடனே மகனாரைத் தான்வாங்கி
தாங்கிஎடுத்துத் தழுவிமுத்தம் தானும்இட்டுக்
கண்டான்மகன் முகத்தைக் கண் ஆயிரத்தாலே
அந்நேரம் இந்திரனும் அழகனைத் தாதியரே
சுந்தரியாளிடத்தில் கொண்டுபோம் என்றுசொன்னார்
ஆவலுடன்வந்து அரியமகனார்தம்
பிறந்தகதை விபரம் பிசகாமல் கேட்டவுடன்

இந்தப்படியாய் இருக்கும் அந்த வேளையிலே
தெய்வப் பிராமணரைத் திரும்பி அழைத்தார்கள்
நவக்கிரகம்எல்லாம் நலமான நாள்ஒன்றில்
பேர்இட வேணும்என்றும் பெரியதொரு இந்திரனும்
சித்திரையில் வந்ததினால் சித்திரபுத்திரர்என்றார்
அப்படியேபேரை அழைத்தார்கள் எல்லோரும்
சீரிட்டபால் பசுக்கள் சிறப்பாய்க் கொடுத்தனர்காண்
தானதருமங்கள் தான்கொடுத்தார் அந்நேரம்
மகனைஅன்று பெற்றுஎடுத்த வாய்த்ததொரு பசுவும்
மகனுக்குப் பால்அமிர்தம் வாஞ்சையாய்த் தான்கொடுத்து
நிற்கும்அளவில் நினைவுமறந்து ஒருநாள்
பாலகன்நெஞ்சில் பசுக்குளம்பு பட்டவுடன்
இந்திராணிகண்டு ஏங்கி மிகப்பயந்து
மகனைஎடுத்து மார்போடே தான்அணைத்து
இந்திராணிதானும் இளம்பசுவை அந்நேரம்
கரத்தால் அடித்தவுடன் கண் சிவந்தது அப்பசுவும்
திடம் உடைய பால்பசுவும் தெய்வமே சாட்சிநீயே
சரணம் சரணம்ஐயா தற்காத்துக்கொள்என்று
சிவனைநினைந்து தோத்திரங்கள் செய்ததுவே
அப்போது சிவனும் அங்குள்ள தேவர்களும்
பசுவைஅடித்த பாவத்தைத் தான்தெரிந்து
இந்திரவிமானத்தை எடுத்துக்கொண்டு ஓடிப்போய்
இந்தட்சணம் பசுவைஇங்கே அழையும்என்றார்
தேர்கொண்டு வந்தார்கள் தேன்மொழியாள் வாசலிலே
வந்தவுடன்அப்பசுவும் மகாதேவரைப்போற்றி
தேரின்மேல் ஏறிச் சிவனாரிடம்சேர்ந்து
இந்திரருக்குப்பிள்ளை கொடுத்து வாஎன்றுஉரைத்தீர்
பாலனை ஈ[illegible]று [illegible]த்தேன் பரிவுடனே
கொடுத்தவுடன் என்னைக கோதையாள் தான்அடித்தாள்
வந்துவிட்டேன் என்று வருந்தி உரைத்ததுவே
சிந்தைமகிழ்ந்து சிவனாரும் ஏதுசொல்வார்
உன்மகனை இங்கே உனக்குஅழைத்து நான்தருவேன்
வஞ்சம்இல்லாமல் மனமகிழ்ந்து நில்என்றார்
அப்படியே நற்பசுவும் ஆனந்தம் கொண்டதுவே
இப்பால் நடக்கின்ற இவ்வசனம் சொல்லுகிறேன்
தேசாரும் இந்திரரும் தேவியும் தான்ஏதுசொல்வார்
பாலன் பசித்துப் பதறி அழுதவுடன்
பால்அமுதம் வாங்கப் பசுதன்னைத் தேடும்என்றார்
பசுவை மிகத்தேடிப்பார்த்தார்கள் எல்லோரும்
காடுஎல்லாம் தேடிக் காணோம் எனஉரைத்தார்

இந்திராணியான இளங்கோதை தான்அழுதாள்
இந்திரனும் அப்போது ஏங்கி மிகவாடி
மாயையாய்வந்து மாயையாய்ப் போச்சுதுஎன்று
மற்றும்ஒரு பால்பசுவின் பால்அமுதை மைந்தனுக்குக்
குற்றம்வராதபடி கொடுத்து வளர்த்தனரே
பாலகர்க்குத் தொட்டிலைப் பாங்காய்ச் செய்தார்காண்
வயிரம்வைடூரியத்தால் வகைவகையாய்ச் செய்தார்காண்
சித்திரபுத்திரரைச் சீர்சிறந்த தொட்டிலிலே
வைத்துத் தாலாட்ட மன்னவரும் சொன்னஉடன்
ஆவின் பால்ஊட்டி அரிய தொட்டில்மேல்கிடத்தி
தொட்டிலைத் தான்அசைத்துச் சூழநின்றதாதியர்கள்
இந்தநல்ல தொட்டிலிலே என்மகனே நித்திரைபோ
தேவேந்திரன்மணியே செம்பொன்னே தான்உறங்காய்
இந்திரனார் செல்வங்கள் ஈடுஏற வந்தானோ
வான் உலகம் ஆளவந்து பிறந்தானோ
மைந்தனாய்வந்து மகன்ஆசை தீர்த்தானோ
எங்கள் துயர்தீர இன்றுவந்த பாலகனோ
தோகை கணக்கும் தொகுத்த பெருங் கணக்கும்
மண்ணில் கணக்கு மகாதேவர் தம்கணக்கும்
விண்ணில் கணக்கும் விரைந்துஎழுத வந்தவனோ
சந்திர சூரியர்போல் சார்ந்ததிருபாலகனோ
ஆதிபரம்கட்டளையில் அவதரித்த பாலகனோ
துஷ்டர் கணக்கும் துரோகியர்கள் தம்கணக்கும்
சிஷ்டர் கணக்கும் தெரிந்துஎழுதவந்தவனோ
தேவேந்திரன் தவத்தால் சிறிய உயிர்செய்யும்
நன்மைகளும் தீமைகளும் நன்றுஅறிய வந்தவனோ
சீராய்ச் சிவலோகம் சேருகின்ற புண்ணியரை
ஆராய்ந்து சொல்ல அறிவுடனே வந்தானோ
ஆவின் வயிற்றில் அவதரித்த பாலகனோ
எங்கள் அரும் பொருளோ இந்திரனார் கண்மணியோ
எங்கள்குலம்வாழ எழுந்துஅருளும் நாயகமோ
இந்தப்படியாக ஏற்றிநின்று தாலாட்டி
அந்த மகனை அரிதாய் வளர்க்கும்கால்
தாதிமார் தம் பாலைத் தான்உண்ணச் சொன்னார்கள்
உங்கள் முலைப்பாலை உண்ணவோ நான்பிறந்தேன்
என்று அறிந்து சொன்ன இளமைக் குழந்தைக்கு
மந்திர நூல் வேதமகா அறிவை உண்டாக்க
வாத்தியார் தம்மை வரவழைத்தார் அந்நேரம்.

விருத்தம்

இந்திரன் புதல்வருக்கு இன்பமாய் ஓதி வைத்த
தந்திர வாத்திமார்கள் தான் அரி ஓம் என்று ஓத
மந்திரபுதல்வனாரும் வகைசொல்லும் என்றுகேட்க
மந்திர உரை சொல்லாமல் மைந்தனும் உரை செய்தானே

* * *

விநாயகர்பூசை விதவிதமாத் தான்முடித்து
ஆதிமுதலான அரிவரியும் கைக் கொடுத்து
அரி ஓம் அரி ஓம் என்று ஆதரவாய்ச் சொன்னார்கள்
ஆயிரம் பார்ப்பார் அரிஓம் நம எனவே
அரி என்ற சொல்லுக்கு அர்த்தம் உரையும்என
அப்போது வாத்தியார் அதன்பொருள் சொல்லாது இருக்க
நான்சொன்ன படிகேளு நல்லதொரு உத்தமரே
அரிக்குப்பொருள்சொன்னால் அண்ணாவி நீர்எனக்கு
குருக்களும்ஆவீர் குற்றம்இல்லை கண்டீரே
எனக்கும்ஓர் அண்ணாவி ஈசன்அல்லால் வேறும்உண்டோ
மேலான உங்களுக்குவேதமது சொல்லுவேன்யான்
கிட்டியான் வாசிக்க கேளுங்கள் என்றுசொல்லி
நன்னெறி நூல் அவிழ்த்து நற்பாடம் மீதுஏறிச்
சைவ நூல் வேதம் தழைக்கவே வாசித்தார்
ஓர்ஏட்டுக்குள்ளே உலகம்எல்லாம் வாழ என்று
தேவர்கள் வாழ என்று திருவேடுவாசித்தார்
மூவர்கள்வாழஎன்று முதல்ஏடு வாசித்தார்.
அயன்அரன்மால்செங்கை ஆனதொரு சீவனமும்
நமனாரும்வேந்தன் நடுக்கணத்தில் உள்ளவர்காண்
சங்கர நாராயணர் தான்கொடுத்த பட்டுஓலை
அட்டவணைப் பட்டுஓலை அனுப்படியேவாசிக்க
வாத்தியார் தன் கணக்கு வந்துவெளிப்பட்டதுகாண்
தனதுமனைஅன்றித் தலைதாளில் நீரும்ஒரு
அகதி மனையை அடிமைஒத்திக் கண்டீரே
உம்முடைய செய்கையும் உமக்குஅறியப்போதாமல்
என்னுடையஏட்டில் எழுதினேன் என்றுசொன்னார்
என்றுசொல்லவாத்தியார் இரு கையால் போற்றிசெய்து
ஈசுவரனார் கற்பனையோ என்றுசொல்லித் தான்இருக்க
இவ்வார்த்தைகள் கேட்டு இந்திரன்இந்திராணியுடன்
மைந்தனை அங்கே மனமகிழ்ந்து முத்தம்இட்டார்
இப்படியேதானும் இருக்கும் சிலநாளில்
மைந்தர்பெருமாள் மனமகிழ்ந்து ஏதுசொல்வார்

பூலோகசோதனைக்குப் போய்வாரேன் என்றுஉரைத்தார்
நகரங்கள் சோதனைக்கு நாம்போறோம்இந்திரரே
அங்கேசிவன்வாசல் அருகிருக்க நாம்போறோம்
என்றுகணக்கை இதமுடனே தான்சுருட்டி
நன்றியுடனே புறப்பட்டார் நற்கணக்கர்
இஷ்டப்படியே ஈசுவரனார் தான்கொடுத்தார்
கட்டளைஇட்டபடி கணக்கு எழுதப் போறோம்என்றார்
அந்தக் கயிலை அரனார் கருவூலம்
நித்தம் எழுதிவர நிமலர் அருள்கொடுத்தார்
பத்திரமாய் என் வசத்தில் தந்ததொரு பட்டோலை
சீருடனே என்வசத்தில் சிறப்பாய் இழுக்குதுகாண்
பரமனார் தான்கொடுத்த பண்டாரபொக்கிஷமும்
கோத்தவரிசைகளும் கொற்றவரே கண்டீரோ
பொன் உலகம் மட்டும்அல்லோ புண்ணியரே நீர்ஆண்டீர்
நிறைந்த புகழ் மாதாவும் நீரும்மிகத் தவசுஇருக்க
உங்களுக்குப் பிள்ளையாய் உகந்துஅளித்தார் கண்டீரே
அண்டர்அண்ட கோளம் மட்டும் அணுஅளவும்தப்பாமல்
எழுத்தாணிபட்டோலை என் கையில் தான்கொடுத்தார்
முத்திரைமோதிரமும் முன்விரலிலே அணிந்தார்
கண்டீரோ நீரும் கணையாழி மோதிரத்தை
இவ்வளவு வாழ்வும் உங்கள் இருவருடையவாழ்வும்
புதிதான காரியமும் போய்ப் பார்க்க வேணும்என்று
போய்வருவேன் ஐயா பொருந்த விடை தாரும்என
வாலவயசு வரும்அளவும் நீர்இருந்தால்
பாலனாய் வந்தபலன் கிடைக்கும் என்று சொல்ல
அந்தப்பாலனும் அரன்அருளால் தான்கிடைக்கும்
அப்படியே நானும் அவ்விடத்தில் இருந்துவிடேன்
எப்படியும்என்தாயே இங்கும் அங்குமாய்இருப்பேன்
போகவிடை அருளும்புண்ணியரே என்றுஉரைத்து
மாதாவைத் தந்தையை வணங்கி இருபாதமதில்
புஷ்பமது போட்டுப் பணிந்தாரே புண்ணியனார்
அருமைத்திருமகனை அன்னை பிதா தான்வாழ்த்தி
இந்திர வான் தேரில்ஏறியே உத்தமனார்.

விருத்தம்

சென்றனன் ஈசன்தன் பால் சீர் மாதம் தெண்டன்இட்டு
நின்றனன் மகிழ்ச்சிகூர்ந்து நிகர் இல்லா உமையாள் தானும்
வந்துஎன் மகனேஎன்று வாரியே மோந்து கொண்டாள்
மைந்தனும் அங்குவந்து வரன்முறை இயம்பல்உற்றான்

* * *

அப்பால் நடக்கும் அதிசயங்கள் உள்ளதுஎல்லாம்
செப்பமுடன் நானும் சொல்லுகிறேன் சீராக
மாதாபிதாவை மறந்திருந்தேன் இத்தனைநாள்
ஈசுவரன்சொன்னஇவை எள்ளளவும்தப்பாமல்
தாமரைப்பூவாய் தடாகத்தில சென்றுஇருந்து
ஆவின் வயிற்றில் அவதரித்தேன் ஆதரவாய்
இந்திரன் இந்திராணி இவர்கள் மனம்குளிர
புத்திரனாக என்னைப் போற்றியே தான்வளர்த்தார்
பிறந்தவுடன் தருமம் பெருக்கவே செய்திட்டார்
என்னையும் அங்கே ஈன்றதொரு நற்பசுவை
என்னை மிதித்ததுஎன்று இந்திராணி தான்அடித்தாள்
உடனேதான் அப்பசுவும் உன்கயிலை வந்ததுவே
மற்றும்ஒரு பசுப்பால் கொடுத்துஎன்னை வளர்த்தார்கள்
நன்றாய் வளர்த்தார்கள் நாயகியும் நாயகனும்
இந்தப் படியாய் இதுவரையும் நான்இருந்தேன்
இவ்விடத்துச் சிந்தையினால் ஏக்கம்மிகஉண்டாகிப்
போகிறேன் என்றுசொன்னேன் போர்வேந்தன்அப்போது
பாலவயசு பருவம் உனக்கு இல்லைஎன்றார்
இவ்விடத்தில் தானும்இருக்கவே வேணும்என்றார்
இங்குஇருக்க நீதி எள்ளளவும் இல்லைஎன்றேன்
அரன்கயிலைசென்று அவ்விடத்தில் நான் இருப்பேன்
இங்கும் அங்குமாக இருப்பேன் எனஉரைத்து
அவர்கள் விடைவாங்கி அடிபணிந்து இங்குவந்தேன்
என்றுசித்திர புத்திரனார் இரக்கமாய்ச் சொன்னவுடன்
பசுவை மிகஅழைத்துப் பாலன் வந்தான் கண்டாயே
என்று அரனார் சொல்ல ஏற்றதொரு நற்பசுவும்
சென்று மகனார் திருமுகத்தைத் தான்முகர்ந்து
எழுந்தே இருகொம்பால் இரங்கித் தடவினதே
இப்படியே தானும் இருக்கின்ற வேளையிலே
இந்திரன் இந்திராணி இவர்கள் இருபேரும்
மகனார்தான் போனவழித்தடத்தைத் தான்நோக்கி
வந்தார் கயிலைமலைதனிலே வானவர் கோன்
அப்பால்நடக்கும் அதிசயத்தைக் கேளும்இனி
சிவனாரிடத்திலே தேவேந்திரன் புலம்பிப்
புத்திரனும்சத்துருவாய்ப்போனான் எனஉரைத்தார்
உரைத்தமொழிகேட்டு உமைபாகர் ஏதுஉரைத்தார்
சத்துருஎன்று சலியாமல்சொன்னாயே
தாயார்அருகே தன்பிள்ளை வந்ததுஎன்றால்
பேயா உனக்குஇனித்தான் பேசக்கணக்கும்உண்டோ

பித்தரைப்போலேபிதற்றுகிறாய் நீ தானும்
நாட்டுக்கணக்கும் நமனார் பெருங்கணக்கும்
நன்மையும் தின்மையும் நடுஎழுத வேணும்என்றே
எமதருமர் தன்னிடத்தில்இருந்து கணக்குஎழுத
வேணும்என்று சொல்லி விரும்பியே நாம்அழைத்தோம்
எங்குஇருந்தால்என்ன ஏற்றதொருஇந்திரரே
போம்பிள்ளாய் என்றுஉரைக்கப் போனாரேஇந்திரரும்
ஈசுவரனார் தாமும்ஏற்ற தொருபுத்திரரை
இப்போதுநீயும் எமனுடைய வாசலுக்குச்
சித்தாந்தம்யாவும் செய்யும் முறைப்படியே
அத்தாந்திரக்கணக்கும் அடைவாய் எழுதும் என்றார்
இப்படியேதானும் எமனைத் தான்அழைத்து
கலியின் உபத்திரவத்தால்களறிகள் தான்மிகுத்து
அவையக்குரல் உண்டாம்ஆனதால் இப்போது
எல்லாக்கணக்கும் இயல்பாகத் தான்எழுத
சித்திரபுத்திரரைச்சிறப்பாய் அருளினன்காண்
என்று நமனுக்குச் சிவனார் இசைத்தபின்பு
நன்றுநன்று என்று நமஸ்கரித்தேஅந்நேரம்
இரு பேரும்ஒன்றாகி ஏற்றவிடை தான்கொண்டு
நின்றபொழுதே பிரம்மா நிமலர்அருளாலே
இருபேரும் வாழ என்று ஏத்திவிடைகொடுத்துக்
கட்டழகருடனே கனத்ததண்டம்சூலமுடன்
குத்திடும் கோல் கொடுத்துக் கோலக் கடாஅளித்து
இவ்வளவும்தான் கொடுத்து ஏற்ற பிரம்மாவும்
வாகாய்சிவனுக்கு வழி அடிமை செய்வார் மேல்
சிவனைநினைத்துத் திருத்தொண்டு செய்வார்மேல்
தவத்தைநினைத்துத் தான்பூசை செய்வார் மேல்
தருமங்கள்செய்வார் மேல் சற்றும் செல்லாதேஎன்று
புத்திகளும் சொல்லிப் போக விடைகொடுக்கக்
கருங்கடா மேல் ஏறிக் கணக்கனையும் தான்வைத்து
வலக்கடாஏறி வாரார் எமதருமர்
நல்லமுரசுசின்னம் நன்றாய் முழங்கிவர
இருபேரும் ஒன்றாகி இந்திரலோகம் புகுந்தார்
இருபேரும் தாங்கள்இசையவே தான்பேசி
பாரில்உள்ளோர் தம்கணக்கைப் பார்த்தார்கள்அப்போது
சிவகுருவே என்று திருநீறுஅணியாதார்
நாராயணா என்று நாமம்அணியாதார்
பெற்றதாய் தந்தையைப்பேணாத பாவியர்கள்
மண்ணில்இருந்து வழக்கோரம் செய்தவர்கள்
அம்பலத்தில்நின்று அநியாயம்சொன்னவர்கள்

ஊரார்உடமைக்குப் பேராசை கொண்டவர்கள்
கல்லாக்கசடர் கணக்குப்படியாதோர்
சிவனைவணங்காதார் திருக்கோயில்சூழாதார்
அயனைவணங்காதார் ஆலயத்தை மேவாதார்
பிச்சைக்குவந்தவரைப் பின்னைவா என்பவர்கள்
கன்றுவருந்தக் கறந்துபால்உண்டவர்கள்
சுற்றம்கொதிக்கச் சுரந்த பால்உண்டவர்கள்
பொட்டாநாழி மரக்கால் போட்டு அளந்த பாவியர்கள
பிள்ளை அழித்துப் பேதமுறச்சொன்னவர்கள்
உள்ளபொருளை இல்லைஎன்றே உரைத்தவர்கள்
தூரவழிக்குத் துணை வாரோம் என்றுசொல்லி
யாரும்இல்லாக் காட்டில் அடித்துப்பறித்தவர்கள்
குளிசீலை இன்றிக் குளித்திடும்பொல்லாதார்
கொண்ட மனையாள்வருந்தக் கூத்தியர்கள் தன்னைவைத்தே
மாதாபிதா வருந்தவயிறு வளர்த்திடுவார்
இட்டுண்டு வாழாதார் ஏற்றவர்க்கும் இல்லைஎன்பார்
நீட்டும்புழைக்கையில் நின்று மெள்ளக்கேட்டவர்கள்
சாவல்போர் செய்விக்கும் சண்டாளபாதகர்கள்
கொண்டகணவனுக்குக் குறிப்புஅறிந்து செயயாதார்
இப்படிக்கொத்த இழிதொழில் செய்வோரைஎல்லாம்
செப்பமுடன் நல்ல செந்தழலில் தான்போட்டுப்
பாசத்தை வீசிப்பதறவே தான்பிடித்து
நாசிதனில் நஞ்சை இட்டு நாக்கில் துரடிட்டு
உச்சித்தலைதனிலே ஓங்கி முளைஎறிந்து
அச்சப்படக் கண்ணில் ஆணைதனைநிறுத்தி
கைஇரண்டும்பின்கட்டாக் கட்டி இருகால்பின்னி
மார்பைத் துளைத்து மறுகுகதிர் பாம்புடனே
கூரியநாராசம் கொடுஞ்செவியினூடு ஏற்றி
பாறையினில் போட்டுப் பதறஇழுத்துஇழுத்து
வேறுவேறாய் உடலை வெட்டியே போட்டுஇழுத்துக்
காரம்உள்ளஉப்பதனைக் கரைத்ததிலே தான்ஒழுக்கி
முள்ளுவனங்களில் முகம்கீழாகப்போட்டுஇழுத்துப்
பள்ளம் மேடுஎன்று பாராமல் தான்இழுத்து
இவர்-தங்களைஎல்லாம் ஏழாநரகத்தில்
தள்ளஎன்று பட்டோலை தான்எழுதிகொண்டார்காண்
நல்லோர்பெரியோரை நடுங்கவேசொன்னவரை
கொண்டகணவனுக்குக் கொலைமருந்துசெய்தவரை
வீதிவீதியாக விவரமாய்த் தான்எழுதி
அவ்வீதிவிட்டு மறுவீதிவந்தார்கள
பெற்றதாய்சொத்தைக்களவுமசையும் பேதையரை

அரைத்தஅம்மிசாத்தாத அரும்பாவியானவரை
குற்றும்உரல்உலக்கை ஒதுங்கவையாக்கொடியவரை
வாசற்படிநடக்கும் வழிசுத்திசெய்யாரை
எந்தப் பதார்த்தமும் ஏற்ற சுத்தி செய்யாரை
கண்டபோது ஒன்றுசொல்லிக் காணாமல்ஒன்றுசொல்லி
குண்டுணிகள்சொல்லும் கொடும்பாவியானவரைப்
பகல்உறக்கம்செய்யும் பாவிகள்தங்களையும்
நரகத்திலேஅழுந்த நடுஓலை தான்எழுதி
கள்ளர்களோடு கடுகவந்து சிக்கினிதே
குண்டுணிகள் சொல்லிக்குறளிகள் தான்பேசிச்
சண்டையிட்டுமுன்னே சாலங்கள்சொல்வாரை
கணவனைக்காணாமல் கள்ளியவள்வீடுவிட்டுத்
தீர்த்தமும்ஆடித் திருநாளும்பார்த்தவரை
பர்த்தாஇருக்கப் பசிஆற்றிக் கொண்டவளை
அவர்களைப்போல அணுக்கணக்குத் தப்பாமல்
செய்யஎன்று நல்கணக்குச் சேரவேதான்எழுதி
செட்டிகள், வீதியிலே சிறப்பாக வந்தார்காண்
அவர்கள் எல்லாம் அங்கே அடிபணிந்து வாய்புதைத்து
வில்லாச்சரக்கை விலைச்சரக்காய் விற்றிடுவோம்
செல்லாப்பணத்தைச் செலுத்துவோம்கண்டீரே
எல்லாப் பிழையும் பொறுத்துஅருளும் என்றுசொல்ல
அவர்களுக்குச்சொல்லி அமைத்தபடி தான்எழுதி
வெள்ளாளர் எல்லாம் வேண்டினது எல்லாம்படைத்தும்
நெல்லுகளை நாங்கள் உலர்த்தாமல் விற்றிடுவோம்
கள்ளமரக்கால் நாழி கலந்துமிக விற்றிடுவோம்
என்றுசொல்லி எங்கள்குற்றம் பொறும்எனவே
இவர்களுக்குத்தக்க ஏற்றபடி தான்எழுதிப்
பட்டமார்வீதியிலே வந்தார் பரிவுடனே
பட்டமார்வந்து பணிந்து மிகத்தொழுது
குளிக்காமல் சேவிப்போம் கோவிலையும் பூசிப்போம்
பால்தயிரும்நெய்யும் பசித்துஎடுத்துச்சாப்பிடுவோம்
ஏறாதமானதனை ஏற்றிடுவோம் என்றுசொல்ல
இவர்களுக்கும்அங்கே ஏற்றபடி தான்எழுதி
அந்தந்தச் சாதிதெரு அடைவாகத் தான்பார்த்து
அவரவர்கள் செய்யும்வகை அதிர்க்கவே தான்எழுதி
பாவபுண்ணியங்கள் பகுத்துமே தான்எழுதி
புண்ணியம்செய்வோரைப் புதுமையாய் எடுத்துஎழுதிப்
பசியாமல்அன்னம் பாங்குடனே கொடுத்தவரை
இடுக்கத்துடனே ஏமாறிவந்தவர்க்கு
உடுத்தபுடவை உகந்து அளித்தோர் தங்களையும்

பிச்சையும்இட்டுப் பெரியஇடம் கொடுத்து
மகேசுவரபூசைக்கு மடம்கட்டி வைத்தவரை
சாலைமரமும் சத்திரமும் வைத்தவரை
சிவபூசை தவபூசை குருபூசை செய்வோரை
நான்கு திசை விளங்க நந்தவனம்வைத்தவரை
ஆலயங்கள்கட்டி அன்னம் மிகக்கொடுப்போரை
இடித்தபழங்கோயில் எடுத்துப்புதுப்பித்தவரை
தாகத்துக்காக நல்லதண்ணீர் கொடுத்தவரை
பொரிந்த உயிர்தனக்குப் போகநீர்விட்டவரை
இராக்காலப்பட்டினியை இதமாகத்தீர்த்தவரை
பஞ்சம் வரும்காலம் பகுந்துஅன்னம்இட்டவரை
பெரியோர்கள் தங்களையும் பேணிநடந்தவரை
விருந்துகள்வந்தால் வேறுவைத்து உண்ணாமல்
வைத்துவகையில் வஞ்சகம்செய்யாரை
நெய்விளக்கு மாவிளக்கு நேயமாய்ச்செய்தவரை
மாதானம் கோதானம் வஸ்திரதானம் முதலாம்
தானங்கள்எல்லாம் தயவாகச் செய்தவரை
வழக்குஓரம் செய்யாமல் மன்னருடன்சேர்ந்தவரை
சிவனை வணங்கிச் சிவபூசை செய்தவரை
செருப்புக்குடை முதலாய்ச் சிறந்தபிராமணர்க்குக்
கோடைகாலத்தில் கொடுத்து அன்னம்இட்டவரை
பிள்ளை பால் வார்த்தோரைப் பிணிக்குமருந்துஅளித்தோரை
அதிதிபரதேசியருக்கு அன்னம் இட்டுஉண்டவரை
பௌரணையில் நல்விரதம் பக்தியாய்இருந்தோரை
பாத்தாவின்மேல் ஆசை பண்பாகவைத்தவரை
குருவை மறவாரைக் கொலைகளவுசெய்யாரை
கணவரின்சொல்லைக் கட்டாய்நடத்தினாரை
ஆறுகுளங்கள்தனில் அணை கட்டிவைத்தவரை
வழியைப்பறியாமல் வாகாகக்காத்தோரை
கன்றுபால் குடிக்கும் மட்டும் கருத்தாகவிட்டவரை
தருமங்கள் செய்வோரைத் தப்பாமல்எழுதி வைத்து
ஒளிவு மறைந்தவர்க்கு ஊன்றுகோல் தான்கொடுப்போர்
காய்ந்ததலைக்குஎண்ணெய் கட்டாகத் தான்அளிப்போர்
ஆவைவணங்கி அனுதினமும் தான்தொழுவோர்
விநாயகர்பூசை விருப்பமாய்ச்செய்தவர்கள்
பள்ளிக்கூடம் கட்டிப்பாங்காக வாத்தியாருக்குச்
சம்பளமும் பணமும் தான்கொடுத்தோர் தங்களையும்
கந்தனைஎந்நாளும் கருதித்தொழுதிடுவோர்
மாதாபிதாவை மகிழ்ந்துநித்தம் தொழுவோர்
வேதங்கள் ஆகமங்கள் விதிப்படியே தான்நடப்போர்

குரு நன்றி செய்ந்நன்றி குறையாமல் தான்நடப்போர்
விஷங்கள் தனைமீள விருப்பமாய்ச் செய்தவரும்
வண்ணான் நாவிதன்கூலி மனமகிழ்ந்தே தான்கொடுப்போர்
தருமங்கள்செய்வோரைத் தப்பாமல் தான்எழுதி
இப்படிக்கொத்த இயல்புடைய புண்ணியரைச
செப்பமுடன்அறிந்து செய்தபிழை பொறுத்துத்
தப்பாமல் ஈசுவரனார் தன்அடியில் தான்சேர்த்து
வைகுண்டலோகத்தும் வகையுடனே தான்சேர்த்து
அந்தஉலகத்தில் அமரர்களைப்போல் இருந்து
புண்ணியம்செய்தவர்கள் போதவே தான்இருக்கக்
கயிலைக்கு வடபுறத்தில் காவணம் உண்டாக்கி
பூங்காவனத்தில் புஷ்பங்கள்உண்டாக்கி
காய் கனிகள் உள்ளது எல்லாம் கனக்கவே உண்டாக்கி
எப்போதும்சிவனை இன்பமாய்ப் பூசைசெய்ய
பணிவிடைகள் செய்யவே பாங்காக உண்டு பண்ணி
அவ்விடத்திலேஇருக்க அன்பாகச் செய்வித்து
வைகுண்டலோகத்தும் வாழ்ந்திருக்கத் தான்எழுதிப்
பாவையர்க்குத் துன்பப் பலனை எழுதுகிறார்
அட்டைக் குழியும் அழுகு புழுக்குழியும்
கிருமிவகைக் குழிகள் வேறாகச்செய்தார்காண்
மிருகங்கள் வாழ்குழிகள் வேறாச் செய்தார்காண்
அகல்கிடங்குவெட்டி அதிலே அனல்வளர்த்தி
முள்ளு வனங்களையும் மோசமாய்ச் செய்தார்காண்
நூற்பாலம் மயிர்ப்பாலம் நூதனமாய்ச் செய்தார்காண்
காடும்கரடும் கல்லும் மிக உண்டாக்கிச்
சற்றுநிழல் இல்லாமல் தவிக்கவே செய்தார்காண்
நரகக் குழியும் நடுநடுங்கச் செய்துவைத்தார்
மெத்தவே உண்டாக்கி விமரிசையாய் ஆயுதமும்
ஆயிரம்கிங்கிலியர் அசைக்க ஒண்ணாச் செக்குகளும்
இரும்புத்தூணுக் காய்ச்சி ஏற்றபடிநிறுத்தி
செப்புத்தூணுக் காய்ச்சி சேரவே தான் இருத்தி
இரும்பு முக்காலிகளை எந்நேரம் காய்ச்சிவைத்தார்
செவிகளுக்கு நாராசம் சேரவேஉண்டாக்கி
உச்சிமுதலாய் உள்ளங்கால் தன்வரைக்கும்
வகைவகையாய் அணிவரிசையாய்த் தான்அடித்து
தொறண்டி வகைகள் தோற்றம் மிகஉண்டாக்கி
இந்தவகைப்படியே எள்அளவும் தப்பாமல்
பாவ புண்ணியங்களுக்குப் பரிந்துவகை செய்தபின்பு
இந்திரன்இந்திராணி இவர்கள்பால் போகல்உற்றார்
அப்பால்நடக்கும் அதிசயங்கள் உள்ளதுஎல்லாம்

செப்பமுடனே நானும்சொல்லுகிறேன் கேளும்என்றார்
மாதாவின் தன்அருகேவந்தார் பெருங்கணக்கர்
எமதருமராசனும் இயல்பாக அருகிருந்தார்
தந்தையாரை வணங்கித் தாயார்தம் பாதமதில்
நமஸ்கரித்த தன்மகனை நன்றாகவே வாழ்வாய்
என்றுசொல்லி உத்தமரை இருகையால் தான்எடுத்து
கன்னல்மொழியாள் கனிவாயால் முத்தம்இட்டாள்
முத்தம்இட்டபோது முன்நின்ற தாதியர்கள்
எண்ணெய்ப் பலகை தன்னை எடுத்துஅங்கே தான்போட்டுப்
பொற்கிண்ணி தன்னில்போதவே எண்ணெய்இட்டு
எண்ணெய்க்காப்புச்செய்ய எழுந்துஅருள வேணும் என்றார்
எண்ணெய்க் காப்பிட்டபின்பு ஏற்றதலை தான்கோதி
தீர்த்தமும்ஆடித் திருநீறும் தான்அணிந்து
சிவனைத்தொழுது சிவபூசை தான்முடித்து
வேதப்பிராமணர்க்கு வேண்டிய தானம்கொடுத்து
அதிதி பரதேசியர்க்கு அன்னம் மிகக்கொடுத்து
மகேசுர பூசையை வண்மையுடன் செய்தபின்பு
ஆபரணம்உள்ளதுஎல்லாம் அழகழகாய்த் தான்பூண்டு
புஷ்பாதிகள்எல்லாம் போதவே தான்முடித்து
போசனச்சாலைக்குப் போய்இருந்தார் உத்தமனார்
நாடாளும்இந்திரரும் நாகமடந்தையரும்
தலைவாழைஇலை அறுத்து தங்கத் தகடுஅழுத்தி
பூமிதனில்வைத்து பொன்னின் முக்காலிவைத்து
மாணிக்க வட்டிலை வைத்தார்கள் முன்பாக
கைக்குநீர் வார்த்துக் கறி வகைகள் உள்ளதுஎல்லாம்
சுற்றிக்கறிகள் எல்லாம் சேரவே தான்படைத்து
தும்பைப்பூபோல்அமுது சொரிந்துநறு நெய்வார்த்து
தம்பியரை உண்ணஎன்று தடவினார் முதுகதனை
அப்போது உத்தமனார் அவர்கள் முகம்நோக்கி
உன்வீட்டிலே அமுது உணபமே யாம்ஆகில்
உன்வயிற்றில் வந்துபிறப்பேன் காண்மாதாவே
என்றபொழுதில் இயல்பானமாதாவும்
நின்றுபரிதவித்து நெடுமூச்சு தான்எறிந்து
அகமகிழச் சந்ததி தான் அறியாத பாவிஎன்று
காதல்மிக இல்லாத கன்னிஇருந்து என்னஎன்று
போதமயங்கியே போய்ச்சேர்ந்தாள் பஞ்சணையில்
மாதா மயங்கியபின் மைந்தர்எழுந்திருந்து
உண்ணவே வாரும்என உவந்து நிற்கஅப்போது
தண்ணீர்குடித்தவுடன் தாகம் தெளிந்தாற்போல்
கைதொழுது பாலகனைக்கட்டி எடுத்துஅணைத்து

மைவிழியாள் தானும்மடியில் எடுத்துவைத்து
வருக்கைப்பலாச்சுளையும் மற்றும் உள்ள நற்கனியும்
சர்க்கரை நற்சீனி தாரணியில் உள்ளதுஎல்லாம்
திரட்டுப்பால்தன்னையும் சிறக்கவே தான்படைக்கப்
பாங்குடனே உத்தமனார் பரிந்துஅமுது செய்யல்உற்றார்
கைகழுவிச் சுத்திபண்ணிக் கனகமணி ஆசனத்தில்
அடைக்காயும் வெற்றிலையும் ஆனபரிமளங்கள்
சிறப்பாகத் தான்கொடுத்து சிந்தைமகிழ்ந்து அங்குஉரைப்பார்
எமலோகக் கணக்கு எழுதவே போவாய் நீ
அற்பமாம்குற்றங்கள் அக்கணக்கில் எழுதாமல்
சொற்பமாம் குற்றமதைத் தொகைபடுத்தாமல் கணக்கை
எழுதி முடித்திடுவாய் என்மகனே என்றுசொல்ல
ஏதுகுற்றம் சொன்னீர் என்னுடையமாதாவே
தலை வாழைஇலை அறுத்துத் தான் எனக்குப் போட்டதுவும்
குற்றம்என்று பட்டோலை கொண்டேன் நான்மாதாவே
என்றுசொல்லி ஏசிஇருக்கின்ற அந்நேரம்
மைந்தர்பெருமாள் மாளிகையில் உட்புகுந்து
போகவிடை தாரும்என்று பொருந்தவே தாம்உரைத்தார்
வந்துதொழுத மகனாரைத் தான்பார்த்து
வாரிஎடுத்து மார்போடே தான்அணைத்து
இந்திரனாருடனே இந்திராணி மனமகிழ்ந்து
தருமராசனிடத்தில் தாம்ஒரு வார்த்தைசொல்வார்
புத்திரர் பின் வருவார் போம்முன்பு எனஉரைத்தார்
அந்தப்படி தருமராசனும் போகல்உற்றான்
போனார் எமதருமர் பூவுலகில் சேனையுடன்
அப்பால் நடக்கின்ற அதிசயத்தைக் கேளுங்கள்
மிருகண்டன் நற்கதையை மெய்யாகச் சொல்லுகிறேன்
வருந்தி மிருகண்டன் மகனுமே வேணும்என்று
பாதாளம்தோன்ற வெட்டிப்பதிவாய் மிகவளர்த்த
ஓமகுண்டமத்தியிலே உயர்ந்தகம்பம் நாட்டிஅந்தக்
கம்பத்தில்ஏறிக் கால்விரலைத் தான்ஊன்றி
வேதாளஅக்கினியும் மேலே படர்ந்துஎரிய
ஈசனேபிள்ளை அருள்என்றே தவம்இருந்தார்
தண்ணீர்அருந்தாமல் சருகும் புசியாமல்
இருந்தான் தவசு ஈராண்டோடுஎட்டுடனே
வருந்தித்தவசுஇருந்தான் மன்னி மிருகண்டன்
அந்தத்தவத்துஅருமை அரனாரும் தாம்அறிந்து
தவசி வடிவாகத் தான்எழுந்தார்சங்கரரும்
அப்போது உமையவளும் அப்படியேதானும்வந்தாள்
இருபேரும் தவசியாய் ஏகினார் தவத்துஅருகே

மிருகண்டன் செய் தவத்தை மெய்யாகக் கண்டார்காண்
அப்போது மிருகண்டன் அரனாரைத் தான்தொழுது

விருத்தம்

அய்யனே போற்றி போற்றி அறம்வளர்த்தவனே போற்றி
செய்யனே போற்றி போற்றி திருக்கயிலாசாபோற்றி
பையவே தவசியாகப் பார்தனில் உதித்தாய்போற்றி
உய்யவே அடியேற்குஅன்பாய் ஒருமைந்தன் அருள்வாய்போற்றி

* * *

என்றமொழிகேட்டு இருவரும் மனமகிழ்ந்து
சிந்தையுடனே திருவாக்குத் தான்உரைப்பார்
வாராய்மிருகண்டா மதலையை நாம்தருவோம்
சீராகவேவயசு தீர்க்காயுசாய்இருந்தால்
கல்விஅறிவில்லாமல் கசனாடாய்த் தான்இருப்பான்
அல்லது கல்விஅறிவுடையவனாய்இருந்தால்
பதினாறு வயதுதனில் பரிந்தேஇறந்திடுவான்
ஆனதினால்அந்தவகைதனிலே ஆண்பிள்ளை
எந்தவகையாய் இருக்கவே வேணும்என்றார்
அப்போது மிருகண்டன் ஆராயும் கல்வியனாய்த்
தவத்தினில்மிக்கோனாய்த் தந்தருள்வாய் பிள்ளைஎன்று
தெண்டன்இட்டபோது திருமதலை தான்அருளி
அம்மைஉமையவளும் ஆனபரமேசுவரரும்
இடபமதில்ஏறி ஏகினார் கயிலைதனில்
மிருகண்டனாரும் மிக்க தவம்முடித்து
நலம்பெறவே தான்இருந்து நன்றாகவாழ்க்கையிலே
வந்து பிறந்தான் மகவாகி மார்க்கண்டன்.
சாஸ்திர புராணம்எல்லாம் சதுராகத் தான்படித்து
வேதங்கள்ஓதி விளங்கினார் மார்க்கண்டன்
அப்பால்நடக்கும் அதிசயத்தைக் கேளும்இனி
வில்வம் துளசி விருப்பமுடன் தான்எடுத்து
மந்தாரை பிச்சி மறுவற்றபூக்களுடன்
சண்பகமும் மல்லிகையும் சேர்ந்த அலரியுடன்
புஷ்ப வகைகள்எல்லாம் போதவே தான்எடுத்து
கண்டிஅணிந்து ஐந்துஎழுத்தைக்கருத்திலே தான்அமைத்து
சிவனைத்தொழுது சிவபூசை செய்யல்உற்றான்
அல்லும்பகலும் அரைநாழிகை பிரியாமல்
அந்தமுடன்சிவனை அன்பாகப் பூசைசெய்தான்
தோத்திரங்கள் தானும் துலங்கவே சொல்லல்உற்றான்

விருத்தம்

அண்டர்களுக்கு அரியாய்போற்றி அடியவர்க்கு
எளியாய்போற்றி
வண்டமிழ்ப் பாண்டிநாடு வாழமண் சுமந்தாய்போற்றி
கண்டவர்க்குஇனிய மேனிகாட்டிஎன் சென்னிமீதில்
முண்டகத்திருத்தாளானே முத்தனேபோற்றிபோற்றி

வேத நாயகனே போற்றி விண்ணவர் தலைவா போற்றி
மாதொருபாகா போற்றி மறு சமயங்கள்மாயப்
பேதகம் செய்வாய் போற்றி பிஞ்ஞகா போற்றி யான்செய்
பாதகம் அனைத்தும் தீர்க்கும் பராபரா போற்றி

* * *

இப்படித் தோத்திரங்கள் இயம்பி மிகப்பணிந்து
பழுதுகள் வாராமல் பரமனையேதொழுவார்
இந்தப்படியே இருக்கும்தறுவாயில்
ஆண்டுபதினாறும் ஆச்சுதே ஆங்குஅவர்க்கு
அப்போதுஎமதருமர் அருகில்நின்ற தூதுவரை
மார்க்கண்ட மாமுனிக்கு வயதுபதினாறுஆச்சு
மார்க்கண்டன் தன்னை வரவழையும்என்றுஉரைக்க
அந்தமொழிகேட்டு ஆனபெருந்தூதுவர்கள்
சென்றவனைத்தேடிச்சீக்கிரத்தில் வந்தார்கள்
அப்போது மார்க்கண்டன் ஆனபெருங் கோயில்நிற்க
நின்றமார்க்கண்டனையும் நீர்வாரும் என்றுஉரைத்தார்
அப்போது தூதரைத் தான்அன்பாகத் தான்பார்த்து
நீங்களும் யார்என்று எடுத்துரைத்தார்அந்நேரம்
எமதரும ராசன் இயல்தூதர் நாங்கள்எல்லாம்
எங்கள்அரசன் உம்மைஇனிமையாய்த் தான்அழைத்தான்
உங்கள்வயசும் ஒரு பதினாறு ஆச்சுதுஎன்று
வந்தோம்உமை அழைக்க வாரும்என்று தான்உரைக்க
மார்க்கண்டனாரும் மனம் நடுங்காதே உரைப்பார்
தார்க் கொன்றை சூடுகின்றசங்கரனைத் தான்நினைந்து
வந்தாரே தூதுவரே வார்த்தைஒன்று கேளுங்கள்
அந்தமுடன்உங்களை அழைத்துவரச்சொன்னவனும்
முந்திஇருந்தவனோ முறைசெய்ய வந்தவனோ
எந்தஎமன் எனைஅழைக்கச் சொன்னவன்காண்
என்றபொழுதில் எமதூதர் ஏங்கிநின்றே
இவர்உயிரைத் தான்பிடிக்க இசையாதுஎன்று ஓடிவந்து

எமதரும ராசன்பால் இசைக்கிறார் தூதுவர்கள்
மார்க்கண்டன் தன்னை வரவழைக்கச் சொன்னீரே
அவன் சொன்ன வார்த்தை அடியேம்உரைக்கின்றோம்
முந்திஇருந்தனவே முறைசெய்ய வந்தவனோ
உங்கள்எமன் ஒளிந்தோடிப்போவான்காண்
வந்தபடியே வழி பார்த்து ஓடும்என்றான்
உடனேபயந்து ஓடிவந்தோம்என்றனரே
அந்த மொழிகேட்டு அப்போது எமதருமர்
கோபித்துகண் சிவந்து கூற்றுவரும் அந்நேரம்.

விருத்தம்

அரியும் மயனும் தெரியாத அரனை நோக்கித் தவம்பண்ணிப்
பிரியமுடனே மிருகண்டன் பெற்றபிள்ளை உயிர்சோர
எரியும்குஞ்சி உளகூற்றன் எடுத்தான் சூலத்துடன்பாசம்
விரியும்கனல்சூழ் உலகம்எல்லாம் வெற்றிபிறக்கத்தோன்றினனே

தெரியும்கடல்போல் கோபமூண்டு சேனைஎல்லாம் புடைசூழக்
கரியமலைபோல் செம்மலைப்போல் கடுகநடந்தான் வழியின்மேல்
பெரியகடாவின் மீதுஏறிப் பிறைபோல் வளர்ந்தவயிறுகளும்
எரியும் விளக்கின் சுடர்போல இரண்டு விழியும் பொறி சிதற.

* * *

வாரார்எமதருமர் மார்க்கண்டனைத்தேடி
எமதருமன் அங்குவரும் இரைச்சல்மிகக்கேட்டு
மார்க்கண்டன்தானும் மனது மிகநடுங்கி
என்செய்வோம் என்று ஈசுவரரைத் தான்நினைத்து
தஞ்சம்என்று சொல்லிச் சரணம் பணியல்உற்றான்

கண்டான் பாலன் காலனையும் கண்ணில் மிகவும்நீர்ததும்பி
அண்டர்பெருமான் தனைப்பார்த்தேஅடியேன்செய்தகுற்றங்கள்
உண்டானாலும்பொறுத்துஅருள்வாய் உற்றகாலன் என் உயிரைக்
கொண்டே இன்றுபோகாமல் கோவேகாத்துக்கொள்வாயே.

என்றேஇறங்கி மார்க்கண்டன் இறைவன் பாதமலர்போற்றி
நின்றே தொழுதுகும்பிட்டு நெடுமூச்செறியநிமலனுமே
நன்றே உனது பக்தி இனி நமனும் முனைப்பற்றிடில் யாமும்
சென்றே தொலைப்போம் மார்க்கண்டா தெரிவாய்என்றே செப்பியுடன்

அஞ்சாதே நாம்காத்திடுவோம் ஆனைமுகவன் தன்ஆணை
துஞ்சாதே நீஅவனுடனே சொல்லால் ஒன்றும்பேசாதே
மஞ்சார் பொழில் சூழ் உலகு அறிய மதியாது உன்மேல்
வருவானேல்
நஞ்சார் கூர்வாள் மழுவாலே நமனைக் கொல்வோம் எனச்
சொல்ல

கோலஞ்செய்து மலர் தூவிக் குறித்துஉன் பாதம்வணங்கிடுவேன்
ஆலம்உண்ட மிடற்றானே அடியேன்நெஞ்சம்கலங்காமல்
சூலபாசம் தன்னுடனே சுற்றிநின்று என்உயிரைக்
காலன்கொண்டு போகாமல் காத்துக் கொள்வாய்கொள்வாயே.

அத்தனே போற்றி போற்றி அடியவர்க்குஎளியாய் போற்றி
பித்தனே போற்றி போற்றி பிறைமுடித்தாடி போற்றி
நித்தனே போற்றி போற்றி நிருமலா போற்றி போற்றி
உற்றதோர் கூற்றன் வந்தால் உதைத்து உடன் கொல்லுவாயே.

ஆதிப்பொருளாய் அலைகடலாய் அணுவுக்கு அணுவாய்
யாவருக்கும்
நீதிப் பரனாய் நிர்க்குணனாய் நினையும் அடியார்க்கு
எளியோனாய்ச்
சோதி வடிவாய்ச் சுடர்ஒளியாய்த்தோன்றும் சிவனேமாமறலி
மோதிப்பாசம் எறியவந்தான் முழுது நான்உன் அடைக்கலமே.

வாடாகெடுவாய் மார்க்கண்டா மறந்தானாலும் வீடுவேனா
ஓடு கொண்டார் என்செய்வார் உன்னைப்பிடித்துக்கொடு
போகிச்
சூடாமணி சேர் வழிஇரண்டும்சொருகச் சூலத்தால்குத்திக்
கூடாஉயிரைப்பிடித்தேநான் கொண்டேபோவேன் கண்டாயே

ஈசன்தன்னால் என் செயலாம் இந்தப்பதத்தை இனி அவரால்
வாசம்செய்து மலர்இட்டு வணங்கினாலும் மாற்றல் அரிது
மோசம்போகேன் உந்தனுக்குமுடிந்த நாளும்வந்ததுகாண்
பாசம்கொண்டே உன் உயிரைப்பற்றி மிகவும்பறிப்பேனே.

ஈரெட்டுஒழியவயசு உனக்கு ஏற்றம்உண்டோ என்னுடனே
மார்பைத்தட்டி எதிர்ஆடி வலிமை சொன்னாய்மார்க்கண்டா
பார்இப்போதே நான்உன்னைப் பரமே சுவரரும்பார்த்திருக்கக்
கூரிட்டு ஒளிர்வேல்தன்னாலேகொண்டேபோவேன் கண்டாயே.

அடியேன் தொழுநம் பரனேஅபயம் பரமேசுவரனேஅபயம்
துடிசேர் இடையாள் கணவாஅபயம் தூய்நெல்லைப் பதியா
அபயம்
கடிசேர் சூலக்கர்த்தா அபயம் கருணாலயனே அபயம்அபயம்
கொடிதாகிய கூற்றுவனைக்கொன்று கொடுப்பாய் எல்லா
வரமும்என்ன

வந்துபயந்தே அபயம் இட்ட மார்க்கண்டாநீ அஞ்சாதே
ஐந்துகரத்தன் தன்ஆணை அந்தநமனை அணுகவொட்டோம்
சிந்தைமகிழ்ந்தே இருஎன்று திருவெண்ணீற்றுக் காப்புஅணிந்து
மைந்தன்தன்னைத் தன்அருகே வாஎன்று அழைத்து
வைத்தனரே.

கூசக்கடவேன்அல்ல என்று கொடியகோபத்துடன் எமன்
ஈசர்க்குஎதிரே தழல்எழவே எரியும்செக்கர்க் குஞ்சியுடன்
பாசக்கயிற்றால் அவன் தன்னைப் பற்றிப் பிடிப்போம் என்று
எண்ணிப்
பேசிக்கொண்டு தான்வந்து பெரிய மலைபோல்நின்றனனே.

நின்றான்எமன் நேசம்உள்ள பாசமதை
வீசிஎறிந்தான்காண் விரைந்துமார்க்கண்டன்மேல்
அப்போதுமார்க்கண்டன் அரனையே கூட்டல்உற்றான்
வீசினபாசத்தால் விமலனோடுமார்க்கண்டனைச்
சிக்எனவே தான்இறுக்கி சேர்த்துமேதான்இழுத்தான்

விருத்தம்

வட்டச்சடையார் திருமுதுகை வலுவாய்மார்க்கண்டன்
தன்னைக்
கட்டிக்கொண் ... தான்இறுக்க கண்ணீர் நின்றுமிகத்ததும்பும்
சிஷ்டர்க்குஉரிய பிரானாரும் சிறுவன்தானும் அகப்படவே
துஷ்டக்காலன் பாசத்தைச் சுழற்றிஇழுக்கல்உற்றானே

வாழும்உலகில்அருள்பெற்றமார்க்கண்டனைத்தான்காத்திடவே
ஏழையாகஎழுந்திருந்து இடதுகாலை மிகநீட்டி
வீழஉதைத்தார் நிலம்பார்க்க விண்ணும்மண்ணும்தான்அதிர
ஆழிஉடைந்தால் போல்எமன் அலறிவீழ்ந்தான் அவனியிலே.

அப்பால்நடக்கும் அதிசயத்தைச் சொல்கிறேன்
பாதத்தாலேஉதைக்கப் பாதாளத்தேவிழுந்து
இறந்தானே எமன் ஏற்றதொருஈசுவரரும்
மார்க்கண்டா நீயும்மயங்காதே என்றுஉரைத்து

என்றும்பதினாறாய் இருக்கவரம்கொடுத்து
ஒன்றுக்கும்அஞ்சாதே உன்னைநாம்காத்திடுவோம்
என்றுசிவனார் இவ்வசனம் சொல்லிடவே
மார்க்கண்டன்தானும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்துஇருந்தான்
அன்றுமுதல் உலகில்உள்ள ஆருயிர்கள்இறவாமல்
இருந்ததினால் என்னசெல்வாள் ஏற்றதொருபூமாது
கன்றிமுகம்வாடி கண்ணிடத்து நீர்சொரிந்து
சாவார்கள்இல்லாமல் தரைப்பாரம் ஆச்சுதுஇனிப்
பூமிபெருகாதுஇருக்கப் புனிதர்அருள் வேணும்என்று
பைந்தொடியாள் பூமாதுபாரம் சுமத்தல்அற
இந்திரனார் தம் இடத்தில் போவோம்எனநினைத்து
சித்திரபுத்திரரைச் சென்றுகண்டு சொல்வோம்என்று
பூமாதும் அங்கே புனிதமாய் ஓடிவந்தாள்
வந்துநின்று இந்திரனார் வாயத்ததிருமாளிகையில்
முறையிட்டுசொல்லுகிறாள் மடிந்தான்காண் மறலியுமே
என்னால்சுமக்கக் கூடஇல்லை என்றுஉரைத்தாள்
அப்போதுசித்திரபுத்திரர் ஆசரவாய்வந்துநின்று
நாராயணர்இடத்தில் நண்ணியே சொல்லும்என
நின்றுசலித்து நெடுமூச்சுத் தான்எறிந்து
ஆரமுலைமாது அலறியே சென்றுகண்டாள்

விருத்தம்

பாலன்செய்த பாக்கியத்தால் பரமசிவனார் பாதத்தால்
காலன்பட்டு விழுந்துஇறந்தான் அதனால்உயிர்கள் காசினியில்
சாலம் மிகுந்துசாவின்றித் தரணி பாரமாச்சுதுஎன்று
ஞாலம்மடந்தைவருத்தமுற்று நாராயணனைப் போற்றினளே

* * *

அப்போதுமாயவரும் ஆனதொருபூமாதே
உனனுடைய பாரம்ஒழித்துஅருள்வேன் நான்தானும்
போம்என்று சொல்லி அனுப்பினார் பூமாதை
அப்போது தான்கணத்தை அழைத்தே அருள்புரிவார்
தேவேந்திரலோகத்தில் தான்இருக்கும்உத்தமரை
இங்கேஅழைத்து ஓடிவாரும் என்றார்அங்கே
கணங்களும்ஓடியே கணக்கரிடம் வந்துகண்டு
நாராயணர் உம்மை நன்றாய் அழைக்கல்உற்றார்
என்றமொழி கேட்டவுடன் ஏற்றதொரு புத்திரரும்
சிந்தைமகிழ்ந்துசீக்கிரமாய்த் தான்எழுந்து

நாடாளும்இந்திரருக்கும் நாகமட ந்தையர்க்கும்
கூடவே தெண்டன் இட்டுக் கூப்பிட்டுஎழுந்திருந்து
இனிதான் அனுப்பும்என்று இணைஅடியைக்கை தொழவே
நல்லதுஎன்று இந்திரரும்நாயகியும் உளமகிழ்ந்து
போய்வாரும் என்று புகழ்ந்து விடைகொடுத்தார்
சேனைகள்சூழ்ந்து வரச் செம்பொன்னின்தேர்ஏறி
சித்திரபுத்திரனார் சிவன்கைலை போய்ச்சேர்ந்தார்
முப்பத்துமுக்கோடி தேவர்களும் வந்துகண்டார்
நாற்பத்துநாற்கோடி ரிஷிகளும் வந்துகண்டார்
சந்திரரும்சூரியரும் தானவரும் வானவரும்
வந்துமுனி தேவர்எல்லாம் வணங்கினார்அப்போது
சித்திரபுத்திரரும் சிவனார்அடிவணங்கி
அர்ச்சனைகள் செய்து அரன்பாதம் போய்ப்பணிந்தார்
வந்துபணிந்த மகனாரைத் தான்எடுத்து
நன்மையும்தின்மையும் நடுஎழுத வந்தீரோ
என்றுஅரனார் களிகூற ஏற்றசித்திர புத்திரரும்
பக்தியுடன்பட்டோலை வாசித்தார்பாங்காக
அப்போதுவிஷ்ணுவும் அகமகிழ்ந்தே அடிவணங்கி
சிவன்அருகில்சென்று செப்புகிறார் நல்வசனம்
எமதருமராசன் இறந்ததினால் பூமாது
சாவின்றிமிகுந்த உயிர் தமைச்சுமக்க மாட்டாமல்
அல்லல்படும்துயரம் ஆற்றவே வேணும்என்று
சிவனாரிடத்தில் செப்பினார் அப்போது
எல்லோரும்கூடி இசைத்தார் சிவனிடத்தில்
சிவனாரும்அங்கே சித்தம் மகிழ்ந்திடவே
பிரம்மாவும்அந்நேரம் பெருமையாய்த் தான்உரைப்பார்
வயசுபதினாறாச் சிருஷ்டித்தோம் நாம்அவர்க்குக்
கணக்குப்படிசென்றான் காலத்தை அறிந்தநமன்
தவத்தைமிகப்பாராமல் தானேதான் மாண்டான்காண்
புத்திக்குறைச்சலினால் போய்மாண்டான் இந்தஎமன்
பிள்ளைகள் செய்தகுற்றம் பொறுத்தருள வேணும்ஐயா
யாரிடத்தில் சொல்வோம் அரனே நீர்அல்லாமல்
வேறொருவர்உண்டோ விண்ணப்பம் கேட்க என்றார்
இப்படியே வானவர்கள் எல்லோரும்முறையிடவே
சொல்லுகிறோம் கேளுங்கள் சுருக்கமாய் என்றுசொல்வார்
அன்னதானம்செய்வோர் அருங்கோவில்கட்டினவர்
கன்னிகாதானம் செய்வோர் கனறுக்குப் பால்விட்டோர்
சிவன்பாதம் சென்றவர்கள் சிவபூசைசெய்திடுவோர்
அன்னைபிதாவை அனுதினமும் தான்தொழுவோர்
கோவிலுக்குநித்தம்போய்க் கும்பிட்டு வருவோர்கள்

பார்வதிபூசை பக்தியாய்ச் செய்வோர்கள்
வைகுண்டநாதருக்கு வழிஅடிமை செய்தவர்கள்
இவ்வளவுபேர்களையும் இன்பமுடன் என்னிடத்தில்
கொண்டுவர வேணும்என்று கூறியே பின்புசொல்வார்
எமனை எழுப்பி இன்பமுடன் மகிழ்ந்து
கூப்பிடுங்கள்என்றுசொல்லிக் கோமான் விடைகொடுக்க
அருள் அளிப்பாய் என்றுசொல்லி அந்தகனைத்தான் எழுப்ப
தண்டாயுதத்தோடே எழுந்தான் எமனும்தான்
வாய்புதைத்து தெண்டன்இட்டு வணங்குகிறான் தான்எமன்
அப்போதுஅரனார் அகமகிழ்ந்து பார்த்துஅவனை
நன்மைகள்செய்தவர்மேல் நாடாதேஎன்றுசொல்லி
ஆயுதங்கள்எல்லாம்அன்பாகத் தான்கொடுத்து
தருமக்கணக்குஎழுதித் தான்வந்தஉத்தமரை
நன்மைதின்மைஉள்ளபடி எமன்அருகே தான்இருந்து
வாக்குடனே சொல்லும்என்று மகிழ்ந்துமே தான்உரைத்தார்
இருபேரும் ஒன்றாய் எல்லோரையும் அனுப்பி
எமலோகபட்டணத்தைச் சேருகிறார்இருபேரும்
பட்டைகள் மிகநெருங்கப் பாரக் கடாஏறி
வெற்றிக்குடை பிடிக்க வெண்சாமரைபோடக்
கணக்கரும் நல்லகற்பகத் தேர்ஏறி
எமதருமன்கூட இசைந்து வந்தார் உத்தமனார்
எட்டுத்திசையும் எங்குமே தான்முழங்க
திக்குத்திசைகள்எல்லாம் சிறப்பான பந்தலிலே
கவிவாணர் பாட க் கட்டியவர்கள்ஆடிவர
நாடகசாலைப்பெண்கள் நாட்டியங்கள்ஆடிவர
பதினெட்டு வாத்தியங்கள் பண்பாகத் தான்முழங்க
வாசங்கள்தான்வீச வான்கவரி தான்வீச
பொன்உலகத்தாரும்போதவே சூழ்ந்துவரத்
தேவாதிகள்எல்லாம் சிறப்புடனே தான்வரவே
இந்தப்படியே இருபேரும் வந்திருந்தார்
புஷ்பமாரி பொழிந்து பொன்உலகோர் வாழ்த்திட
வானம்புவியும் மற்றுஉலகில் உள்ளதுஎல்லாம்
எமதருமன் மாளிகையில் எழுதுகின்றார் நற்கணக்கர்
நான்குவாசல் வழிக்கு நடுவேஓர் மாளிகையில்
சித்திரபுத்திரரும் சிறப்பாகத் தான்இருந்து
பட்டோலை தன்னைப்பதிவாக வாசித்தார்
திருந்தவே நன்மைசெய்தோர் சிறந்தவழி வருவதற்கு
வடக்குவாசல்வழியை வரிசையாய்ச் செய்யல்உற்றார்.
மாணிக்கம்சேர்த்த வைரக்கால் தான்ஆட்டி
இடம்பெறவே பந்தல் எழிற்காவணம்போட்டு

மாடங்கள்கட்டி வைர விளக்குஏற்றி
கூடங்கள் கட்டிக் குளிர்ந்தமலர்க் காவுடனே
நல்லதண்ணீர்ப் பந்தல்களை நன்றாக உண்டுபண்ணி
புண்ணியம்செய்தவர்க்குப் பொருத்தம்மிகஉண்டாக
அதற்கானபேரை அவ்வழிக்குக் காவல்வைத்து
இதுதான் கயிலைவழி என்றுமே புண்ணியர்க்குச்
சொல்லும்படிக்குச் சுருதியுள்ள காவலரைத்
திட்டங்கள் செய்து சிறப்புடனே வைத்தார்காண்
கீழ்வாசல் தன்அருகே கேசவனைத் தான்நோக்கி
ஞானநிஷ்டை செய்தவர்கள் நல்வழி வருவதற்கு
சிவஞான பக்தர் தரிசிக்க வருவதற்குப்
பராசக்திபக்தர்கள் பண்பாய் இருப்பதற்கு
மண்டபமும் சூளிகையும் வகையுடனே தான்வைத்து
மாளிகைகூடம் வகுப்பாகச் செய்யல்உற்றார்
வெள்ளிக் கதவும்இட்டு வேதியரைக் காவல்வைத்து
வைகுண்டநாதருக்கு வழிஅடிமை செய்தவர்கள்
வருகின்ற வழிஎன்று வைத்தாரே தூதுவரை
வேறும்ஒருவாசல் விரைவாக வகுக்கஎன்று
வந்துதெற்கு வாசல் வழிதோறும் உட்பரப்பி
நெருப்புப்பரந்துஎங்கும் நின்றுஎரிய உண்டு பண்ணி
சுண்ணாம்பும்சேறும சுடுமணலும் உண்டாக்கி
பேர்தெரிய வெட்டிப் பெருங்கழுக்கள் தான்ஆட்டி
கூரையும் காவும் குளிர்ந்தநிழல்இல்லாமல்
நாயும் நரியும் பெருங்கடுவாயோநாயும்
கட்டெறும்பு கொட்டும்தேள் கடியதொருபாம்புடனே
அட்டைப்புழுக்குழியும் அரணைப் புழுக்குழியும்
நரகக்குழியும் நன்றாக உண்டாக்கி
அரியதொரு பாதகரை அடித்துஇழுத்து வரச்சொன்னார்
கல்லும் கரடும்கூடிய மணல்பரப்பிப்
பாதகரைத்தண்டிக்கப் பாவிகளைக் காவல்வைத்தார்
மேற்கே ஒருவாசல் விதம்விதமாய்ச் செய்யும்வகை
பார்க்கப்பயம் காட்டும் படர்பூதப் பிசாசுகளும்
கருநாயும்செந்நாயும் கலந்துகட்டி நிறுத்திவைத்தார்
குரைக்கும் தலைப்பேய்கள் கூட்டமாய் நிறுத்தி வைத்தார்
செக்குஉலக்கை தலைதிருகிச் சிறப்பாக உண்டுபண்ணி
செப்புத்தூண் நாட்டிஅதில் தீஎரி நிறுத்திவைத்தார்
இரும்பாலே தூண்டில்களை எங்குமே தான் நாட்டி
நிகர்இல்லாத் தரைதனிலே நெருப்புஎரியச் செம்புஉருக்கி

பஞ்சமாபாதகர்க்குப் பரப்பியே செய்துவைத்தார்
கிங்கில்யர் அங்கே கெட்டியாய்க்காவல்வைத்தார்
இப்படியே வாசல்கள்எல்லாம் வகுத்தபின்பு
செப்பமுடன் இருபேரும் சிறப்பாகத் தான்இருந்தார்
இங்கிதங்கள்பேசி இருபேரும் தான்மகிழ்ந்து
வள்ளுவனுக்கு ஆள்விட்டு வரவழைத்தார்அந்நேரம்
வள்ளுவனும் அங்கே வலமாகவந்துநின்று
அடியேனை இங்கே அழைத்தது எதுக்கு எனவே
படிஏழும்சென்று பறைஅடிக்க நீகேளு
சீவசந்துக்கள்எல்லாம் சிறப்பாகத் தான்அறிய
காய்இருக்க பழம்உதிரும்படியே அடிமுரசை
அடித்துவா என்றுசொல்லி அனுப்பினார் அந்நேரம்
அப்படியே வள்ளுவனும் ஆனைதனைக்கொண்டுவந்து
ஆனைக்குஉள்ள வரிசைகளை அன்பாய்அலங்கரித்து
ஆபரணம் உள்ளதுஎல்லாம் அடைவாகவேபூட்டி
தம்பட்டம்வைத்துத் தனிக்கால் வழியேதான்
ஆனைதனில் ஏறியே புறப்பட்டான் அபபோது
துர்க்கை திருக்கோயில் தூரவே தான்தெரிய
துய்யகரி விட்டுஇறங்கித் துர்க்கையைத் தான்பணிந்தான்
மதுவைக் கொடுத்தாள்மாகாளி அப்போது
அரக்குமதுவை அளவின்றித் தான்குடித்தாள்
பதினாலு உலகு அறியப் பறைஅறைந்து சொல்லுகிறான்
ஆண்பால்பெண்பால் ஆகியே தான்பிறந்த
நான்குவகைச் சாதிகளும் நன்றாகத்தான்தெரிந்து
பழம்உதிரக் காய்இருக்க எனறுசொல்லிப் பண்புடனே
வெய்யபெருந்தோளான வீதியிலே வந்துநின்று
முறையிட்டுத் தான்பறையும் முழக்கினான்அப்போது
இந்தமொழிகேட்டுஉடனே எல்லாரும் தான்மகிழ்ந்து
அந்நேரம் சிறுபிள்ளை அனேகம்பேர் தான்கூடி
இரைச்சல்இட்டுக்கொண்டு எதிராக நின்றாரே
அப்போதுவள்ளுவனும் ஆனைதனை நோக்கி
அடித்தானே பிள்ளைகள்மேலானதொரு கோபத்தால்
அப்போதுபிள்ளைகளுக்கு அதிகோபம் உண்டாகிக்
கையில் மணல் எடுத்துக் காற்றிலே தூற்றிவிட்டார்
கண்ணில்மணல் விழுந்து கசங்கியேவள்ளுவனும்
கோபம் பெரிதாகிக் குணக் கோடாச் சொல்லிவிட்டான்
குடித்தவெறியால் குணம்தப்பிச் சொல்லிவிட்டான்
பூஉதிரப் பிஞ்சுஉதிரப் பொருக்எனவே பொட்டுஉதிரக்
காயும்பழமும் கலந்துஉதிர வேணும்என்று

தினம்பிறப்பார் ஆயிரம்பேர் தினம்இறப்பார் ஆயிரம்பேர்
கனம்மிகுதி ஏறாமல் தரணிப்பாரம் குறைய
என்றே மதுகுடித்த வெறியால்இரங்காது
அடிஅடி என்று அடித்தான் பெருமுரசை
அப்படியே தான் அடித்து அவ்விடத்தை விட்டுஏகி
சித்திரபுத்திரர்பால் சென்றே அடிபணிந்தான்
அந்தக்கொடும்பறை கேட்டு அவ்விடத்தில்உள்ளவர்கள்
இந்த வகை ஏதென்றே எழுந்துமே தான்பிறகே
எல்லோரும்ஒன்றாய் எமலோகம் போய்ப்புகுந்தார்
நல்லதர்மராஜனையும் நற்கணக்கு நாதரையும்
வந்து மிகப்பணிந்து வள்ளுவன் அங்குவந்து
மன்னவரே நீங்கள்சொன்ன மாற்றத்தை விட்டுவிட்டு
கருங்குழியில் பூமுதலும் கருத்தரித்த பின்முதலும்
வடுப்பிஞ்சு காய்உதிர என்றுஉரைத்தே வள்ளுவனும்
ஏற்றதொரு பறைஅடித்தான் எல்லோரும் தான்கேட்க
என்று தொழுதுசொன்னார் இருபேரும் தான்பார்த்து
அந்நேரம் அவர்களுக்கு அதிககோபம்உண்டாகி
சொன்னமொழி ஒன்று இருக்கச் சொல்தவறிஅடித்தவனை
கோபம்பெரிதாகிக் கூட்டிவரச் சொன்னார்கள்
வந்துமே வள்ளுவனும் மலர் அடியைப் போற்றிசெய்ய
வாராய்நீவள்ளுவனே வாய்மதங்கள்ஏதுஉரைத்தாய்
அப்போதுவள்ளுவனும் அடிபணிந்து அங்கு ஏதுஉரைப்பான்
இப்போது வந்தகுறை என்னாலே வந்ததுஅல்ல
அரக்குமது மாகாளி அம்மை மிகவார்த்தாள்
அரக்குவெறியால் முழக்கினேன் நம்முரசை
பிள்ளைகள் துர்ச்சனரால் பிழைகேடாய்ச் சொல்லிவிட்டேன்
இந்தப்பிழையைப் பொறுத்துஅருள வேணும் ஐயா
குடித்தவெறியால் குணம்தப்பிச் சொல்லிவிட்டேன்
உள்ளமொழி சொன்னதுஎல்லாம் உறுதியாம் என்றுசொல்ல
மாயைஅது சொன்னவள்ளுவனைத்தான் பார்த்துச்
சாராயம்தான் குடித்தான் தவறுவந்துவிட்டதினால்
வள்ளுவனைச்சொல்ல வகைஏதும் இல்லைஎன்றார்
பிள்ளைகளாலே பிழைகேடு வந்ததுஎன்றார்
வள்ளுவன்தான் என்செய்வான் மற்றபேர் ஏதுசெய்வார்
வள்ளுவன் சொற்படியே மானிடவர் எல்லோரும்
வாழ்வுபெறவே வாழ்ந்து மகிழ்ந்துஇருங்கள் புவிமீதில்
என்றேஎமனார் இன்பமாய்த் தான்உரைத்தார்
பூலோகத்தில்உள்ள புகழ்படைத்த மனிதர்எல்லாம்
அவரவரிடத்தில் ஏகினார்அப்போது
இருந்தார் இருவரும்தான் இரத்னமணி மண்டபத்தில்

மணிமுடியைத் தான்பூட்டி வண்மையுடன் தான்இருந்து
பட்டோலைகள் தன்னைப் பரிந்துமிக வாசிக்க
அப்போது செட்டிச்சி அம்மைஒருசீமாட்டி
அமராவதிபெருமாள் அன்னைபோல் காத்துஅளிப்பாள்
தர்மராஜாவின்தேவி தான்செய்த புண்ணியங்கள்
அழகிய புத்தகத்தில் அகப்படவே அப்போது
எமனார் தன்னிடத்தில் இயல்பாக வாசித்தார்
இந்தவிபரம் இனிமேல் விளம்புகிறேன்
இக்கதையைக் கேட்டவர்கள் இராசர் பதம்பெறுவார்
நன்றிப்பெருங்கதையை நாள்தோறும்படிப்பவர்கள்
பாடிப்படித்திடவே பக்தியுடன்கேட்டவர்கள்
நாடிஎழுதினவர் நல்விரதம் தான்எடுத்தோர்
பலமாகப்பெருஞ்செல்வம் படைத்துமேவாழ்ந்துஇருப்பார்
ஆல்போல்தழைத்து அருகுபோல் வேர்ஊன்றி
மூங்கில்போல் சுற்றம் முசியாமல் வாழியவே.

(முற்றும்)

குறிப்பு : சித்திரபுத்திரர் கதை இத்துடன் நிறைவு பெறுகிறது. சித்திரபுத்திரர் நோன்பு செய்யாத அமராவதி கதை இதில் தனியாகக் கூறப்படுகிறது.

இரண்டாம் பகுதி

அமராவதி கதை

- உலகம் முழுவதிலும் உள்ள பாவ புண்ணிய பலன்களை தெரியவேண்டி இறைவன் சித்திரபுத்திரனை உருவாக்கினார்.
- அந்தச் சித்திரபுத்திரர் உலகத்தில் உள்ள அனைத்து மக்களின் நன்மை தீமைச் செயல்களைப் பதிவு செய்தார்.
- அந்தக் கணக்குப் பதிவை, எமதர்மனிடம் காண்பித்து, அவரவரின் செயலுக்கு ஏற்ப, தண்டனை வழங்கச் செய்தார்.
- இச் செயலுக்குப் பொறுப்பானவர் சித்திரபுத்திரர்.
- அமராவதி என்னும் செட்டியம்மை பகல் இரவு எந்நேரமும், எவருக்கும் பலவகையான உதவிகளையும் அளித்து, புகழ் பெற்றாள்.
- உலகப் பெரும் கணக்கராக விளங்கிய சித்திர புத்திரரின் செயல் திறமையைப் போற்றும் படியான சித்திரா பௌர்ணமி நாளில் நோன்பு இருந்து கொண்டாடாமல் இருந்து விட்டாள் அமராவதி.
- அதனால் அவள் பல சோதனைகளுக்கு ஆளானாள்.
- பிறகு, தன் தவறை உணர்ந்து, நற்கதி அடைந்தாள் அமராவதி.

அமராவதி கதை

செட்டியம்மை என்ற சீமாட்டி தன் கதையை
காரணத்தால் நான் பாடக் கணபதியே முன் அருள்வாய்

* * *

தர்ம ராசாவின் தயவான தேவி என்பாள்
அமராவதி என்ற அழகான நற்பெயராள்
பூதலத்தில் செல்வம் பொருந்த மிக உண்டாகி
மட்டில்லாச் செல்வம் வளர்ந்து மிக உண்டாகி
அன்னை சுற்றத்துடனே அருள்பெறவே தான்வாழ்ந்து
முத்தொட்டில் கட்டி முடிய வாழ்வு உண்டாகித்
தருமங்கள் தானே தவறாமல் செய்து வந்தாள்
பாவங்கள் என்று சற்றும் பக்கத்திலே கேட்டு அறியாள்
இந்தப்படியே இயல்புடனே தான்வாழ்ந்தாள்
நாயனார் தனிநோன்பு நாவின் எடுத்து அறியாள்
கணக்கர் என்றசெய்தி கனவிலும் கேட்டுஅறியாள்
முப்பாலும் காய்ச்சி முடியாமல் வாழுகின்றாள்
சிவஸ்தலம் விஷ்ணுஸ்தலம் தரிசனங்கள் செய்துஅறியாள்
சித்திரபுத்திரர் நோன்பு சிந்தனையிலே வைத்து அறியாள்
இவள் செய்தி தன்னை இயல்கணக்கர் தாம் அறிந்து
எமதரும ராஜனிடம் இன்பமாய்த் தான் உரைக்க
அவளுடைய நற்கணக்கை அணு அளவும் தப்பாமல்
கேட்டார் எமரும்தான் கிருபையுடனே இருந்து
அவள் செய்த புண்ணியங்கள் அடைவாகச் சொல்லுகிறார்
பட்டணம் எல்லாம் பறை தட்டி, ஆராய்ந்து
அன்னக் கொடிகட்டி அமுது படைத்திடுவாள்
அதிதிபரதேசியருக்கும் யாரும்அற்றார் தங்களுக்கும்
ஆராய்ந்து தேடி அமுது மிகக் கொடுப்பாள்
அத்தாளம் கேட்டால் அமுதமே தான்கொடுப்பாள்
மகேசுவர பூசைமுதல் மனமகிழ்ந்து செய்திடுவாள்
கோடைக்குத் தண்ணீர் குளிர்ச்சி மிக உண்டாகப்
பானகம் நீர்மோர் பதிவாகச் செய்து வைத்தாள்
சித்திரை மாதத்தில் செழிப்புடனே நற்குடையும்
விசிறியும் தான் கொடுத்து வெப்பங்கள் தணித்திடுவாள்
கன்னிகா தானம் கருதி முடித்து வைப்பாள்

வேதியர்க்கு உள்ள தெல்லாம் விரும்பியே கொடுத்திடுவாள்
ஆடை இல்லாப் பேர்களுக்கு ஆடைமிகக் கொடுத்திடுவாள்
சனிவாரம் எண்ணெய் தப்பாமல் கொடுத்திடுவாள்
நந்தவனம் உண்டாக்கி நற்பூக்கள் தான்பறித்து
ஆலயங்கள் தன்னில் அடைவாகச் சாத்திவைப்பாள்
தூரத்துக்குத் தூரம் சுமைதாங்கி கட்டி வைப்பாள்
காதத்துக்குக் காதம் கல்கிணறு கட்டி வைப்பாள்
பிள்ளைபால் தின்பண்டம் பெருக்கவே தான்கொடுப்பாள்
வெட்டும் தலையைப் பொருள் கொடுத்து மீட்டுஇடுவாள்
வட்டி இல்லாமல் கொடுத்து வாங்கிமிக வைத்திடுவாள்
வேந்தனுக்கு அஞ்சி விரும்பி வருவார்க்கு
தேறுதலை சொல்லி அடைக்கலங்கள் தான்கொடுப்பாள்
கன்னங்கள் குத்திக் களவு செய்ய வருபவர்க்கு
அஞ்சாதே போ என்று ஆதரவு சொல்லிடுவாள்
ஏழை பரதேசியர்க்கு இல்லிடமும் கட்டி வைப்பாள்
இடிந்த மடம் முதலாய் எடுத்துமே புதுப்பித்துப்
பூப்பந்தல் போட்டுப் புதுக்கனிகள் தான்கொடுப்பாள்
அனாதைப் பிணத்தை அடக்கிவைப்பாள் கண்டீரே
ஆயிரம் கோட்டை அரிசி அன்றைக்குஅன்று செலவிடுவாள்
அதற்கான காய்கறியும் அப்படியே தான்கொடுப்பாள்
சம்பாரம் சொல்லுவதைத் தடையறவே தான் கொடுப்பாள்
இந்தப்படி தருமம் எள்அளவும் தப்பாமல்
செய்துமே தானும் சிறப்பாகத் தான் இருக்க
விரதமும் நோன்பும் விரும்பாத பாவிஎன்று
கணக்கருக்கு அங்கே கடுங்கோபம் உண்டாகி
என்ன தானம் செய்தாலும் ஏந்திழையாள் தன்னைவிடோம்
பூமிதனில் இருந்து பொருந்தியே வாழாமல்
அதற்கான படி செய்ய அழைப்பிக்க வேணும்என்று
கணக்கருக்குக் கைக்கூலி கட்டுவார் உலகமதில்
இந்த வசனமதை எள்ளளவும் அறியாமல்
இருந்த அமராவதியை இங்கு அழைக்க வேணும்என்று
ஏவினார் தூதுவரை இன்னும் ஒரு வார்த்தை சொல்வார்
அவளுடைய வாசல் அடையாளம் கேட்டீரோ
தென்னை மரங்களும் சேரவே சூழ்ந்து நிற்கும்
கப்பல் படவு முதல் கரை அருகே வந்து நிற்கும்
தீவுகளில் உள்ளவைகள் சேகரமாய் வந்துநிற்கும்
பசுக்கள் ஒரு கோடி நிற்கும் பைங்கொடியாள் வாசலிலே
என்று சொல்லி நற்கணக்கர் ஏவினார் தூதுவரை
அந்நேரம் தூதுவர்க்கு அதிகோபம் உண்டாகி
இரும்புத் தடியுடனே ஏற்றதோர் ஆயுதமும்

பாசக் கயிறும் பெருவலையும் தான்எடுத்து
வந்துவளைந்தார்கள் மனையாட்டி வாசலிலே
வாசலிலே வந்து நின்று வலிமை எல்லாம் கண்டார்கள்
அதிதி பரதேசிகட்கு அன்னம் கொடுக்கிறதும்
கூனர் குருடர் குறைக்கால் முடவருக்கும்
ஆராய்ந்து பார்த்து அமுது கொடுக்கிறதும்
தருமங்கள் எல்லாம் தயவுடனே செய்கிறதும்
இத்தனையும் கண்டு இயல்பான தூதுவர்கள்
அமராவதியாளை அழைத்துச் சொன்னார்கள்
இவளை நாம் அழைத்துப் போனோமே யாம் ஆகில்
தருமங்கள் எல்லாம் தவிர்ந்து விடும் கண்டீரே
அன்னக் கொடிகள் எல்லாம் அலைந்துவிடும் கண்டீரே
என்று சொல்லித் தூதுவர்கள் ஏங்கி மனம் கலங்கி
கையில் தடியைக் கடக்கவே போட்டுவிட்டு
நின்று பெருமூச்சும் நெடுமூச்சும் தான்எறிந்தார்
அந்நேரம் ஓடிவந்தாள் அமராவதியாளும்
கண்டாரே தூதுவர்கள் கலங்கி இருக்கிறதை
அமராவதியாள் அவர் முகத்தைத் தான்பார்த்து
வாருங்கள் மக்களே மயங்கி இருப்பானேன்
இத்தனை நேரம்மட்டும் இளைப்பாய் இருந்தீரே
அடியாள் தன்பேரில் அபராதம் உண்டுகண்டீர்
என்று சொல்லி இங்கிருந்து இன்னமுது கொள்ளும்என
அப்போது தூதுவர்கள் அடுத்த மொழி உரைப்பார்கள்
இந்நேரம் நாங்கள் இன்னமுது கொள்வதுஇல்லை
என்று சொல்லி தூதுவர்கள் இருந்து விசாரமுற
வாருங்கள் மக்களே வருந்தி மெலிவானேன்
கன்னம் இட வந்தீரோ களவு செய்ய வந்தீரோ
தாய்க்குத் தாயாகி நான் இருக்க உங்களுக்கு
உண்டு இருக்க அன்னம் முதல் உடுமடியும் நான் தருவேன்
அஞ்சாமல் நீங்கள் இன்னமுதம் தான்புசிக்க
வாருங்கள் என்று வருந்தி மிக அழைக்க
இவ்விடத்தில் யாம் அமுது புசித்தோம் யாம்ஆகில்
எங்களின் நாயனார் எழுதுவார் பட்டோலை
ஆனதினால் நாங்கள் அமுது புசிப்பது இல்லை.
இருந்து அரசு ஆளும்என்று ஏகினார் தூதுவர்கள்
வந்து வணங்கி மலர் அடியைத் தண்டன்இட்டுச்
சித்திர புத்திரரே சீமானே கேளும் ஐயா
செட்டிச்சியால் எங்களைத் தீக்கழுவில் போட்டலும்
செட்டிச்சியை நாங்கள் தீண்டோம் ஒருநாளும்
என்று சொல்லக் கணக்கர் இரு கண்ணும் தான்சிவந்து

உங்களை உண்ண உபசாரம் சொன்னாளோ
மற்றும்ஒரு தூதுவரை வரவழைத்து ஏதுசொல்வார்
அமராவதி ஒருத்தி ஆனதருமம் செய்துகொண்டு
என் நோன்பு கொண்டு எந்தனையும் நினையாமல்
பூதலத்தில் செல்வம் புகழ் பெறவே தான்இருந்து
தனிக்குறும்பு செய்து கொண்டு தரணியில்இருப்பவனை
இந்நேரம் இங்கே அழைத்துவர என்று சொன்னார்
என்று சொல்லித் தூதுவரை இயல்பாகத் தான்அனுப்ப
அந்நேரம் தூதுவர்க்கு அதிக கோபம் உண்டாகி
இரும்புத் தடிஎடுத்தார் ஏற்றதொரு கிங்கிலியர்
வந்து வளைந்தார்கள் வாழ்வரசி வாசலிலே
நந்தவனம் வைத்து நறும்பூப் பறிக்கிறதும்
அன்னம் கொடுத்து ஆதரவு சொல்வதும்
சத்திரங்கள் வைத்துத் தயவாக நடக்கிறதும்
தருமங்கள் எல்லாம் தவறாமல் செய்கிறதும்
கண்டார்கள் கிங்கிலியர் கவலை மெத்தஉண்டாக்கி
கையில் தடியைக் கடக்கவே விட்டு எறிந்து
தலையில் கையை வைத்துச் சலிப்பாய் இருக்கையிலே
அந்நேரம் அங்குவந்தாள் அமராவதியாளும்
வாருங்கள் மக்களே வாடி இருப்பானேன்
அமுது கொள்ள வாரும் என்று அழைத்தாளே அப்போது
பானகம் வாங்கிப் பசியாரக் குடித்தார்கள்
இப்போது இவளை அழைத்துமே போனாக்கால்
தருமங்கள் எல்லாம் தவறிவிடும் என்றுசொல்லி
ஏதுகுறை என்று ஏகினார் கிங்கிலியர்
சித்திரபுத்திரரே சீமானே கேளும்ஐயா
எங்களையும் நீங்கள் என்னபழி செய்தாலும்
செட்டிச்சியைக் கூட்டி வர மாட்டோம் என்றுசொன்னார்
அந்நேரம் அக்கணக்கர்க்கு அதிக கோபம் உண்டாகி
உங்களுக்குக் கைக்கூலி காட்டினாள் ஊதாரி
பானகம் வாங்கிப் பதிவாய்க் குடித்தீர்கள்
இதற்கோ அனுப்பிவைத்தேன் என்றாரே உத்தமனார்
அதையும் கணக்கு எழுதிக் கொண்டாரே உத்தமனார்
சினந்து மிக உரைத்துச் சீறியே அப்போது
மற்றும் ஒரு தூதுவரை வரவழைத்தார் அந்நேரம்
பெற்ற தாயைக் கொன்ற பெரும்பாவி மொட்டையனைக்
கொண்ட கணவனைக் கொன்ற கொலைப் பிராமணியை
இவர்கள் தமைஅழைத்து ஏவினார் நற்கணக்கர்
அரை நாழி கைப்பொழுதில் அழைத்துஓடிவாரும்என்றார்
ஆயுதங்கள் தான்எடுத்து அடைந்தார் இருவரும்தான்

வந்துதலைப் பட்டார்கள் வாழ்வரசி வாசலிலே
மனையில் ஒருபுறத்தே மறைவாய் இருந்தார்கள்
தான தருமங்கள் தயவாய் நடக்கிறதே
இத்தனையும்கண்டு எடுத்துஉரைத்தான் மொட்டையனும்
இவள் எத்தனை தருமம் இனிதாகச் செய்தாலும்
நாயனார் உரைத்தபடி நான் விடுவது இல்லைஎன் றான்
என்று சொல்லி மொட்டையனும் இருகண்ணும் தான்சீற
அந்நேரமே தானும் அமராவதியாளும்
தீர்த்தமும் ஆடித்தெரு வழியே வருகையிலே
பூனையாய் வந்து குறுக்கிட்டான் மொட்டையனும்
அப்போது செட்டிச்சி அதிகக் கவலையுற்று
துக்கம் உண்டாகத் துடித்ததே வலது கண்ணும்
மயக்கம் பிறந்து மதி மறந்து அந்நேரம்
ஏதோ கொடுமை இனிக் கேட்க வேணும்என்று
பூனை குறுக்கிடுதல் போந்த கூற அல்லஎன்று
தருமங்கள் செய்வதிலே தப்பிதம் உண்டாச்சோ
என்று சொல்லி அம்மை ஏற்றதொரு பாத்திரத்தில்
அமுது கறிகளை அப்போது தான்எடுத்துச்
செய கண்டி அடித்துத் தெருவெல்லாம் தான் திரிந்து
ஆராய்ந்து தேடி அமுது கொடுத்திட வே
திட்ட சட்டமாகச் செய்தாளே அந்நேரம்
ஒன்றும் தவறாமல் உள்ளபடியே நடத்தி
வந்தாள் அரண்மனையில் வாழ்வரசி தானும்அப்போது
இருக்கும் பதியில் இயல்பாகத் தான்இருந்து
பேத்திமார் பாட்டிமார் பிரியமுடனே இருக்க
பாலோடும் நெய்யோடும் பதிவாய் அமுது அருந்தி
சாந்தும் புனுகும் சவ்வாதும் தான் அணிந்து
புஷ்பாதிகள் எல்லாம் போதவே தான்சூடிச்
சந்தோஷமாகவே தான்இருக்கும் வேளையிலே
கொல்ல வந்த கூற்றுவனும் கோலப் பிராமணியும்
அவ்வேளை தான்பார்த்து, அவள் நடையில் வந்தார்கள்
வாசல்படியில் வந்து நின்றாள் அந்நேரம்
கண்ட அமராவதியாளும் கர்மமோ என்று சொல்லி
இருபேரும் நீங்கள் இன்னமுது கொள்ளும்என்றாள்
சத்திரத்தில் வாரும் என்று தான்விரும்பிச் சொன்னாளே
அப்போது கூற்றுவனும் மானப் பிராமணியும்
இந்நேரம் நாங்கள் அமுது கொள்வது இல்லைஎனப்
பலகாரம் நான் தருவேன் பதிலாகக் கொள்ளும்என்றாள்
பலகாரம் நாங்கள் புசிப்பது இல்லை என்றார்கள்
என்னத்தில் இச்சைஎன்று ஏந்திழையாள் தான்கேட்கப்

பாலின் மேல் ஆசை என்றாள் பிராமணியும் அப்போது
பாலும் பழமும் பரிவாகக் கொண்டு வந்தாள்
காய்ச்சினபால் நாங்கள் கண்ணாரக் கொள்வது இல்லை
கண் காணப் பால் தான் கறந்து வர வேணும்என்றாள்
இதுவும் ஒரு சோதனையோ என்று மனதில்எண்ணி
ஆனால் கறந்து அடைவாய்த் தருவேன்என்றார்
அணை கயிறும் கடைகாலும் அன்பாகத் தான்எடுத்து
காராவின்அண்டையிலே காரிகையாள் தான்வரவே
கொல்லவந்த கூற்றுவனும் குடுகுடு என ஓடிவந்து
கொம்புதனில் ஏறிக் கொற்றவனும் தான்இருக்க
அணைவதற்கு என்று அமராவதி வரவே
அப்போது பசுவுக்கு அதிக கோபம்உண்டாக
காடிகழுநீர் கலந்துவைப்பது இல்லைஎன்று
வைக்கல் பிடுங்கி வாரியே வைக்கையிலே
குத்தி எடுக்கக் கூரிய கொம்பதனால்
இருந்தாள் அமராவதியும் மிகக் கலங்கிக்
கதறக் கொடுத்தாளே காரிகையாள் அந்நேரம்
ஏங்கி அழுதாள் எமலோகம் தான்அறிய
தருமங்கள் செய்ததிலே தான்கேடு வந்ததுஉண்டோ
பொல்லாத காலமாய்ப் பூனை குறுக்கிடவும்
துர்க்குறிகள் காட்டினதும் சோதனையும் உண்டாச்சு
ஏதுகுறைகள் உண்டோ என்னமோ என்றுசொல்லி
எண்ணாதது எண்ணி ஏங்கி உயிர் பிரிந்தாள்
கொல்லவந்த கூற்றுவனும் கோலப்பிராமணியும்
பாசக் கயிறும் பருவலையும் தானஎடுத்து
கட்டினார் அப்போது கண்மண்டை தான்பிதுங்க
இரும்புத் தடியால் இரக்கம் அற்றுத் தான் அடித்துப்
பாப்பாத்தி கள்ளியவள் பாசக் கயிறுபிடித்து
அடித்தானே கூற்றுவனும் அமராவதியைக்
காமவல்லி என்றும் ஒரு காற்று வந்து வீசிடவே
ஆகாயம் மின் ஒளியும் அதி கோபத்தோடுவர
இரும்புத் தடிமுறிந்து இரக்கமுற்றுத் தான்விழவே
பாசக்கயிறும் பருவலையும் தான்தெறிக்க
அப்போது கூற்றுவனும் ஆனபிராமணியும்
திடுக்கிட்டு நின்று தடுமாறிஅந்நேரம்
இத்தனைக்கும் தருமங்கள் இனிதாகச் செய்தாளே
இவளை நாம் விட்டு விட்டால் இயல் கணக்கர் ஏதுசொல்வார்
கோபித்துக் கண் சீறிக் கொலைக்கழுவில் போட்டிடுவார்
எப்படியும்தான் இவளைக் கொண்டு போவோம்என்று
இருபேருமாக நினைந்துமே தாம்உணர்ந்து

வலைக்கயிறு தான் எடுத்து வரியவே தான்பூட்டிக்
கட்டி இழுத்தார்கள் காரிகையைஅந்நேரம்
கண்கள் தெறிததுவிழக் கட்டி இழுத்தார்கள்
கொண்டுவந்து விட்டார்கள் கொற்றவர் முன்பாகச்
சித்திரபுத்திரரும் சீறியே ஏதுசொல்வார்
தருமத்தைத் தானே தயவாய் நினைத்தாயே
என்று சொல்லி நற்கணக்கர் இரு கண்ணும் தான்சிவக்க
காட்டிக் கொடுத்தாரே கடுந்தூதர் கிட்டவும்தான்
பின்கட்டாய்க் கட்டிப் பிடரியிலே குத்தும்என்று
செப்புத் தூணோடே சேரவே கட்டும்என்றார்
உச்சிதனில் ஆணி ஓங்கி அடியும்என்றார்
அமராவதிக்கு அதிக கோபம் உண்டாகி
தண்ணீர் தவிக்குது என்றாள் தாமக்குழலாளும்
சித்திரபுத்திரனார் சீமானார் தாம் கேட்டு
செம்பை உருக்கித் தெளிய வைத்துக் கொடுங்கள்என்றார்
அந்தப்படி அவர்கள் செய்ய அம்ராவதியாளும்
பானகம் என்று பதிவாகத் தான்குடித்தாள்
இதையும அறிந்தாரே இயல்பான நற்கணக்கர்
மழுவையும் காய்ச்சி வைக்கவே சொன்னார்காண்
சந்தனச் சேறாகத் தான்குளிர்ச்சி யானதுவே
அப்போது ஒருகாற்று அவனிதனில் வந்துஅடித்து
கயிறு தெறித்துக்கடும்தூரம் தான்விழவே
கணக்கருக்கு அப்போது கடுங்கோபம் உண்டாகி
முந்நூறு காதம் அகலம்உள்ள காட்டூடே
கல்லும் கறடும் கார்முள்ளும் தான்படவே
கட்டி இழுங்கள்என்றார் கண்விழிகள் தான்பிதுங்க
இந்தப்படி காடு எங்கும் இழுக்கின்றார் தூதுவர்கள்
அந்நேரம்காட்டில் அதிசயங்கள் உண்டாச்சு
பொல்லாத காடுஎல்லாம் பூங்காவனம் ஆச்சு
புஷ்பங்கள் தான்சொரியும் பூஞ்சோலையும் உண்டாச்சு
சர்ந்து புனுகு சவ்வாது மணம்தான் வீச
தாமரைத் தடாகங்கள் தானுமே உண்டாகி
இந்திரலோகம்போல் இருந்தாள் அப் பெண் கொடியும்
வாசம் பொருந்தியே மனமகிழ்ந்து தான்இருந்தாள்
தருமங்கள் ஆனது எல்லாம் நற்காத்து நின்றனவே
வந்த காற்றுகூடக் கயிறும் தெறித்ததுவே
ஓடிவந்த தூதர் உரைத்தார் கணக்கருடன்
பொல்லாத காடுஎல்லாம் பூங்காவனம் ஆச்சு
ஆனையைக்கட்டும் கயிறும் அறுந்ததுஎன்றார்
இத்தனையும் கேட்டு இயல்கணக்கர் அந்நேரம்

செப்புத் தூணோடே சேர்த்து இறுக்கும்என்றார்
கொல்லரைக் கூட்டிவந்து குறடுகள் தான்காய்ச்சி
காய்ச்சிப்பிடுங்கவுமே கம்மாளர் வந்துநிற்க
அமராவதியும் அபயமிடத் தொடுத்தாள்
கண்கள் தெறித்துவிழக் கன்னத்தில் போடும்என்றான்
தண்ணீர் தவிக்குது என்றாள் தாமக்குழலாளும்
ஈயத்தைக்காய்ச்சி இதம்பெறவே தான்கொடுத்தார்
பன்னீர் சலமாகப் பாங்குடனே தான்குடித்தாள்
அதையும் அறிந்தார்காண் ஆனதொரு நற்கணக்கர்
இருப்புஉலக்கையாலே அடிஎன்றார் உத்தமனார்
அந்நேரம் செட்டிச்சி யானைபோல் வீறிடவே
வீறிட்ட சத்தம் விமலனார் தாம்அறிந்து
சிருஷ்டித்தார் அந்நேரம் செட்டிச்சி நோகாமல்
மின்னும் மழையும் மிகவேதான் உண்டாகி
காற்றும் புயலும் கனமாகி வந்திடவே
செப்புத்தூண் எல்லாம் சேரத்தளிர்த்ததுவே
கொல்லர் முகமும் குளிர்ச்சி மிகஆனதுவே
தாமக் குழலாளும் தன்சொரூபமாய் இருந்தாள்
இன்னும் ஒருஉபாயம் எடுத்தாரே உத்தமனார்
அரைஅளவு குழிகள் ஆழமாய் வெட்டி அதில்
செட்டிச்சி அம்மைதன்னைச் சீராகத் தான்நிறுத்தி
கைகள் தனைப் பின்னங் கட்டாகத் தான்இறுக்கி
உச்சி மயிரை ஒருமிக்கத் தான் வகிர்ந்து
மூன்று திசை மரத்தில் மூன்று வகையால் முகந்து
ஆனைதனைக்கொண்டுஇடறஅவிழ்த்துவிடும்என்றுஉரைத்தார்
இந்த மொழி கேட்டு உடனே ஏங்கினாள் பைங்கொடியும்
அப்போது தூதுவர்கள் அதுசெய்ய வந்த உடன்
தருமங்கள் செய்ததெல்லாம் தழைத்துமிக ஓடிவந்து
காற்றும் புயலும் கடுகெனவே தான்அடித்து
எல்லோரையும் தூக்கி எறிந்ததே பூமியிலே
அதையும்அறிந்தார்கள் ஆனதொரு நற்கணக்கர்
அட்டைகுளத்தில்அழுந்தவே தள்ளும்என்றார்
தாமரைத் தடாகமாய்த் தானுமே உண்டாச்சு
அட்டை குளத்தில் அழுந்திநிற்கும் பாவிகளும்
செட்டிச்சியாலே சிவலோகம் சேர்ந்தார்கள்
வாசம் பொருந்தி மணந்ததே அக்குளமும்
செக்கிலேபோட்டுத் திருகும்என்றார் ஆயிழையை
வாணியரைக்கூட்டி வந்து வடங்களும் தான்முறுக்க
அந்தச்சமயத்தில் அங்கு ஒருவர் இல்லாமல்
தாய் இல்லாப் பிள்ளை நின்று தவிக்கிறதைக் கண்டாளே

பிள்ளையைஎடுத்துப் புழுதி எல்லாம்துடைத்துக்
கண்ணீர் துடைத்துக் கடுக அனுப்பினளே
ஆதரவு சொல்லி அனுப்பினாள் பிள்ளைதனை
உடனேவடம்முறுக்கி ஓடி வந்தார் வாணியரும்
செட்டிச்சிஅம்மைதனைச் செக்கிலே தான்போட்டு
ஆட்ட வேணும் என்று அங்கு வந்தார் அந்நேரம்
செட்டிச்சியும் அப்போதுசிவனை நினைந்துஅழுதாள்
அப்போது ஒருகாற்று அவனிதனில் உண்டாகி
செக்கும் தகர்ந்தவுடன் செக்குஉலக்கை தான்முறிந்து
ஓடியே தூதுவர்கள்ஒருவருமே காணாமல்
அந்நேரம் வாணியர்கள் அது செய்திகண்டவுடன்
வந்துமே சொல்லுகிறார் வாய்த்த கணக்கருடன்
ஆகாசக் காற்று அதி கோபமாகவந்து
செக்கும் தகர்ந்து செக்கு உலக்கை தான் முறிய
ஓடினார் தூதுவர்கள் ஒருவருமே தான்காணோம்
அமராவதியாளும் அன்னம்போலவே இருந்தாள்
கணக்கர் இதைக் கேட்டவுடன் கண்கள்இரண்டும் சிவந்து
அமராவதியாளை அழி நரகில் தள்ளும்என்றார்
நரகத்தைக் கண்டாளே நல்லதொருமாதும்
நரகத்தில் கிடந்த பாவியர்கள் எல்லோரும்
செட்டிச்சி பார்த்தஉடன் சிவலோகம்சேர்ந்தார்கள்
நரகக் குழிகள் எல்லாம் நல்ல குழி ஆயினவே
அதையும் அறிந்தாரே ஆனதொரு நற்கணக்கர்
எண்ணெயும் பிண்ணாக்கும் எடுக்கஎன்றார் அவள்தலையில்
விற்று வரச்சொல்லி விடைகொடுத்தார் அந்நேரம்
அந்நேரம் தூதுவர்கள் அவள்தலையில்தான்எடுத்து
ஏழு தெருவும் இயல்பாகக் கூறிடவே
கொள்வாரும்இல்லைக் கூப்பிடுவார் தானும்இல்லை
பட்டணத்து உள்ள பல பேர்கள் எல்லோரும்
புண்ணியரைச்சற்றும் புகழ்ந்துஅறியாப் பாவியிடம்
எண்ணெயும் புண்ணாக்கும் இனிவாங்கக் காலம்என்று
செட்டிச்சியைக்கண்டவுடன் தெருக்கதவைத் தான்அடைத்தார்
தெருக்கள் எல்லாம் சேரவே தான்சுமந்து
கழுத்துத்தெறிக்கக் கண்உண்டை தான்பிதுங்க
அமராவதியாளும் அநியாயம் என்றுஅழுதாள்
அய்யகோதெய்வமே அரும்பாவம் செய்தோமே
இந்தவிதிகள்எல்லாம் எனக்குஏன் வரவேணும்
விதியை நினைத்து அந்தணர் வீதியில் வந்தவுடன்
அதில்ஒரு பிராமணியும் அந்நேரம் ஓடிவந்து
எண்ணெயும் பிண்ணாக்கும் இறக்கும்என்றாள் அப்போது

அந்த க்ஷணமே இறக்கினாள் ஆயிழையாள்
தண்ணீர் தவிக்குது என்றாள் தாமக் குழலாளும்
நீர்மோர் பெருக்கி நிறையவே கொண்டு வந்தார்
கொண்டுவந்த மோரைக் குடித்தாள் வயிறுமுட்ட
தாகம் தெளிந்து களை தீர்ந்தாள் செட்டிச்சி
பிராமணியும் அப்போது பெருத்தமொழி உரைத்தாள்
அமராவதியாள் அருகிலிருந்துகேட்கல்உற்றாள்
அன்னமே தேனே அமராவதியாளே
நீ எத்தனை தருமம் நிலையாகச்செய்தாலும்
சித்திரபுத்திரரைச் சிந்தையில் வையாமல்
புண்ணியவான்என்று புத்திதனில் வையாமல்
எமதருமர் வாசலிலே இருந்து கணக்குஎழுதப்
பசுவின் வயிற்றில் பாலகனாய் வந்தவரை
அகத்தில் நினையாமல் அநியாயம் போனதுஎன்ன
தருமங்கள்எல்லாம் தவிடுபொடி ஆக்கிடுவோர்
அண்டபுவனம்எல்லாம் அறிந்து கணக்கு எழுதப்
புண்ணி"னார் வந்துபிறந்து அறியாளே
இத்தனை பாடுபட்டும் எள்அளவும் புத்திஇல்லை
அவரை நினையாமல் அவதி மிகப்பட்டாயே
அவர் நோன்பு இருக்க அறிவிக்க வேணும்என்று
உன்னாலே தானும் உலகுஎங்கும் தான்அறிய
கூட்டி வந்தே உந்தனைக் கோரணிகள் செய்கின்றார்
என்றே பிராமணியும் எடுத்து உரைத்தாள் அந்நேரம்
அமராவதியாளுக்கும் அறிவுமிக உண்டாகி
சித்திரபுத்திரராம் சிவனார் பெருங் கணக்கர்
பாவங்கள் புண்ணியங்கள் பகுத்துஎழுத வந்தாரோ
காணாதகாட்சி எல்லாம் காட்டிவைத்தார் சீமானும்
அவரை நினையாமல் அல்லல்எல்லாம் பட்டேனே
அறியாமல் நானும் அவதியுற்றேன் என்றுசொல்லி
மண்ணில்விழுந்து மலர்அடியைத் தெண்டன்இட்டு
அறிவுஎனக்கு வந்ததையா ஆனதொரு பாலகரே
செய் பிழை பொறுப்பீர்என்று சொல்லியே தெண்டன் இட்டார்
கணக்கருக்கு அப்போது கருணைமிக உண்டாகி
சித்தம் திரும்பித் திருவாய் மலர்ந்துஅருளி
மெத்த மனம்மகிழ்ந்து வேகம்எல்லாம் தான்தணிந்து
என்னை நினைந்ததினால் இனிவரும் எப்பிறப்பும்
இவளுக்கு நற்பலனும் இனிக்கொடுப்போம் என்றுசொல்லி
ஸ்நானங்கள் பண்ணிவரத் தாமேஅனுப்பினர்காண்
ஸ்நானங்கள்செய்து தவக்குறையும் தான்முடித்துச்
சிவனை நினைந்து திருநீறும் தான் அணிந்து

சித்திரபுத்திரரே சீமானே என்றுசொல்லி
கணக்கரிடத்திலே காரிக்கையாள் வந்துநின்றாள்
அந்நேரமும் கணக்கர் ஆனையை வரவழைத்து
திருமஞ்சனம் கொண்டுவந்து சிறக்கவே தான்சொரிந்து
பட்டுமுதல் உள்ளதுஎல்லாம் பண்பாகத் தான்கொடுத்தார்
ஆபரணம்எல்லாம் அழகாகத் தான்கொடுத்தார்
எல்லாப்பதமும் இனிமையாய்த் தான்கொடுத்தார்
அந்நேரமே தானும்அமராவதியாளும்
தருமத்தை எல்லாம்நான் தவறாமல்செய்திடவும்
என்னை இழுத்துவந்து இடர்கள் செய்வானேன்
வகை விவரமாக வசனிக்க வேணும்என்றாள்
அப்போது நற்கணக்கர் அறிவித்தார் உத்தமிக்கு
உன்னாலே என் பெயர்உலகம்எல்லாம் தான்அறிய
செய்து வைத்தேன் உத்தமியே செய்த பிழைபொறுப்பாய்
என்நோன்பு இருந்தவர்கள் இகபரங்கள் தான்அடைவார்
இந்த விரதம் எடுத்திலாப் பாவியர்க்கு
நீ பட்ட தண்டனைகள் நிலையாகத் தான்நடக்கும்
அப்படிக்கு வாராமல் உன்னை அழைத்துவந்தோம்
உன்னாலே மோட்சம் அடைய என்றே உன்னைநான்
கூட்டி வந்தது என்றவுடன் கொம்பனையாள் கேட்டிடுவாள்
அறிவித்தாள் நானும்அப்படியே நடப்பேன்என
சொல்லுகிறேன் கேளாய் சுகமான என்பிறப்பே
சித்திரை மாதம் பதினெட்டாம் தேதியிலே
சித்திரைக்குச் சித்திரையில் சீரார் பௌரணையில்
பூதலத்தில்உள்ள புகழ்ந்த மனுச்செந்துஎல்லாம்
ஆண் பெண்ணுடனே அடைவாக நோன்பிருந்து
ஆறுகுளத்திலே அன்பாகத் தான்முழுகி
திருநீறு அணிந்து சிவனை மிக வணங்கி
சூரிய நமஸ்காரம் தொழுது மிக வணங்கி
சாந்தால் தரைமெழுகிச் சந்தனத்தால்கோலம்இட்டு
வாழைக் கரும்பு வான்கமுகு வாழையுடன்
பழக் குலைகளாலே பந்தல்கால் தான்நிறுத்தி
மஞ்சள் குலையும் மாங்குலையும் தான்தூக்கி
பலகை தனைப்போட்டுப் பாவாடை மேல்விரித்து
வேழமுகத்து விநாயகனை முன்வைத்து
பூரணகும்பம் வைத்துப்பொன்னின் விளக்குஏற்றி
நிறைநாழி வைத்து நிறை மரக்கால் தானுமவைத்து
அடைக்காயும் வெள் இலையும் அன்புடனேதான் படைத்து
கடலை துவரை முதல் காராமணிப பயறுப

பயறு வகை உள்ளதுஎல்லாம் பாங்குடனே தான்படைத்து
பலகார வகைகள் பாங்காகச் செய்துவைத்து
பருப்புஅரிசி பானகம் பாங்குடனே தானும்வைத்து
பொன்னின் எழுத்தாணியுடன் புத்தகமும் கூட வைத்து
உப்பு முதல் கற்பூரம் உள்ளது எல்லாம் தான் படைத்து
எள்ளு பருத்தி ஏற்றதொரு முத்துகளும்
இத்தனையும் நன்றாய்இயல்பாக வைத்த பின்பு
புதுப்பானை தன்னிலே பொங்கலிட்டுக்கீழ்இறக்கித்
புத்துருக்கு நெய்யும் பொரிக்கறியும், பாற் குழம்பும்
கறிவகைகள் உள்ளதையும் கட்டாகத் தான் படைத்து
தயிரும் உறைத்து வைத்துச் சகலகறி வர்க்கமுடன்
நேம நிஷ்டையாக நைவேத்தியம் செய்து
அரகராஎன்று அடிபணிந்து தண்டன்இட்டு
தூபம் புகைகாட்டித் தோத்திரங்கள் செய்துநன்றாய்
சூடன் பணிமாறிச் சூழக்குரவையிட்டு
வாத்தியங்கள்எல்லாம் வகைவகையாய்த் தான்முழங்க
ஆண்டவரேஎன்று அடிபணிந்து தண்டன்இட்டு
ஆசாரியர் தன்னை அன்புடனே கூட்டிவந்து
கட்டாக நன்றாய்க் கதைகள் படிக்கவைத்து
இன்பமாய்த் தான்இருந்து இக்கதையைத் தான்கேட்டுக்
கேட்டு முடிந்த பின்பு கிருபை வரத் தெண்டன்இட்டு
இப்படியே நோன்பு இயல்பாய் இருந்தவர்க்கும்
இந்தக் கதையை எழுதிப் படித்தோர்க்கும்
எல்லாப் பதமும் கொடுப்போம் நாம் ஏந்திழையே
புத்திர சம்பத்தும் புண்ணியமும் உண்டாகும்
மங்கிலியம் வாழ்ந்து, மக்கள் தழைத்திருப்பார்
இந்தப்படி நோன் புஎல்லோரும் தான்இருக்க
பூலோகம் எல்லாம் புகழ்ந்துபறை சாற்றிடுஎன்று
இந்தப்படி கணக்கர் இயல்பாய் உரைத்திடவே
நாயனார் உரைத்தபடி நன்றாய்க் கருத்தில் வைத்து
தப்பாமல் நோன்புஇருந்து தவம்பெறுவோம் உத்தமரே
சித்திரபுத்திரரே சீமானே நீர் கேளீர்
உயிரோடே சொர்க்கம் வரவழைத்துக்கொண்டாக்கால்
இப்போதே என்னை இங்கே வரவழைத்தால்
என் கர்மம் எல்லாம் தவிர்ந்துவிடும் என்றுசொல்ல
சித்திர புத்திரருக்குச் சிந்தைமிகஉண்டாகி
பூலோகத்தில் போய்ப் பொருந்தவே தான்வாழ்ந்து
தருமங்கள் எல்லாம் தப்பாமல் செய்யவும்
போக விடை கொடுப்போம் பொற்கொடியே கேள்என்றாள்
நூறுவயது இருப்பாய் நூறுஆண்டு சென்ற பின்பு

உன்னையும் தானும்உடன் அழைத்துக்கொள்கிறேன்
ஆனதினால் நீயும் ஆக்கை அழியும்முன்னே
பூந்தேரில் ஏறிப்போய்வாரும் என்று சொல்ல
அப்படியே தேர்ஏறி அமராவதி வரும்முன்
அப்பால் நடக்கும் அதிசயத்தைக் கேளும் இனி
கூரிய கொம்பதனால் கொன்றபசுத்தானும்
இரையும் அருந்தாமல் இனத்தோடும்கூடாமல்
கண்ணீர் ஒழுக்கிக் கதறுதே நற்பசுவும்
அமராவதியாள் என்அன்னை இறந்தாள்என்று
ஊரார் உறவுள்ளார் உற்றார்கள் தான்கூடி
கூப்பிட்டு அழுது கோவிந்தா என்றிடவே
ஆண்டி பரதேசி அநியாயம் என்பதுவே
அமராவதி கூட்டை அன்பாகத் தான்எடுத்து
செய்யும் சடங்குகளைச் சீக்கிரமாய்த் தான்முடித்து
மஞ்சளையும் பூசி மலர்களும் தான்சூட்டி
பட்டும்உடுத்திப் பாவாடை மேல்போட்டு
மாலை கழுத்தில்இட்டு மருக்கொழுந்து தான்அணிந்தார்
பூந்தேரும் கட்டிப் புஷ்பம் அலங்கரித்து
வாத்தியங்கள் எல்லாம் வரிசையாய்த் தான்முழங்கி
குரவைதனை முழங்கிக் கோவிந்தா என்று சொல்லி
அமராவதி கூட்டை ஆனதொருபூந்தேரில்
வைத்துமே தான்எடுத்து வானம்எல்லாம் நான்முழங்கி
மயானக் கரையில் வகையாகப் பந்தலிட்டு
சந்தனக் கட்டை சதிராகத்தான் அடுக்கி
கருமங்கள் செய்தார்கள் காரிக்கைக்கும்அப்போது
கொள்ளிகள்வைத்துக் குடமும்உடைத்தார்கள்
இந்தப்படியாக இருக்கும் அந்தத்தறுவாயில்
வாய்க்குஅரிசி போட்டார்கள் வந்தவர்கள் எல்லோரும்
அமராவதியாளை அனுப்பினார் அந்நேரம்
மயானத் துறைக்கு வந்தாளே தேரோடும்
கட்டையிலே இட்ட கனத்த உடல்புகுந்தவுடன்
செட்டிச்சியார் தனக்குச் சீவன்பிறந்ததுவே
நித்திரை தெளிந்ததுபோல் நினைவுமிகஉண்டாகி
சிவசிவா என்று சிவனை மிகத்தொழுதாள்
திசைநோக்கித் தானும் தண்டன்இட்டாள்உத்தமியும்
நன்மையும் தின்மையும் நடுஎழுத வந்தவரே
காணாத காட்சிஎல்லாம் காட்டிவைத்தீர் சீமானே
படாதபாடுஎல்லாம் படுத்திவைத்தீர் சீமானே
இப்படி நினைந்து ஏங்கினாள் உத்தமியும்
அடுக்கின கட்டை எல்லாம் ஆல்போல் தழைத்திடவே

அமராவதியாள் அகத்திலே வந்தவுடன்
உற்றார் உறமுறையார் ஊராரைக்கூட்டி வந்து
போசனம் பண்ணுவித்துப் போகவிடை கொடுத்தாள்
தருமங்கள் எல்லாம் தப்பாமல்செய்திடுவாள்
நாயனார் தம்நோன்பு நன்றாகஇருக்கஎன்று
நாயனார் தம்மிடத்தில் நன்றாய்அறிவித்தாள்
தர்மராசாவும் அப்போது தானும் மிகப் பயந்து
ஸ்த்ரீ புருஷாள் தானும் சிறக்கவே நோன்புஇருந்தார்
சித்திரைமாதம் பதினெட்டாம்தேதியிலே
சித்திரைக்குச்சித்திரையில் சீரார்பெளரணையில்
பறை ஓசை கேட்டுப்பதம் பெற்றோம் என்றுசொல்லி
பூலோகத்தின்உள்ளே புகழ்ந்து மனுஷர்எல்லாம்
நாயனார் திருநோன்பு நன்றாகத்தான்இருங்கள்
என்றுசொல்லிவள்ளுவனும் எடுத்துப்பறை சாற்றிடவே
பலகைகளைப்போட்டுப்பாவாடை மேல்விரித்து
நிறைநாழிவைத்துநிறைமரக்கால் தானும்வைத்து
நேங்காய் பழங்கள் சிறக்கவே தானும்வைத்து
சர்க்கரைஎள்உருண்டை சகலபதார்த்தமுடன்
பருப்பரிசிபானகம்பாங்குடனே தான்படைத்துக்
கறிவகைகள் உள்ளதெல்லாம் கட்டாகத்தான்படைத்துப்
பொங்கலும் இட்டுப் போதம் மிகத் படைத்துத்
திருக்கண்அமுதம் சேகரமாய்த்தானும்வைத்துப்
புத்துருக்கு நெய்யும்போதவே தான்படைத்துத்
தூபதீபம்காட்டித் தோத்திரங்கள் தான்செய்ய
தண்டன் இட்டுத்தான் பணிந்து திருநீறும் தான்அணிந்து
ஏங்கிப்பரிதவித்து இருக்கும்தறுவாயில்
உத்தமனார்தாமும்உடனே அறிந்தார்காண்
இதற்குஎன்னசெய்வோம்என்று ஏற்றபடிநினைந்தார்
பார்வதியாளிடத்தில் பண்பாகச்சொல்லஎன்று
சித்திரபுத்திரரும் சிறப்பாகத் தான்பார்த்து
எந்தன்பிறப்புவளர்ப்பு எல்லோரும் தாம்அறிய
என்நோன்பு நல்விரதம் எல்லோரும் தாம்இருக்க
வேணும்என்று நினைந்து மேன்மைஉள்ளசெட்டிச்சி
அமராவதியாளை அன்புடையமாதரசை
வரவழைத்துநானும்வகைப்படி சொல்லிவிட்டேன்
சொன்னபடிஅவளும் தோத்திரங்கள்செய்து மிகப்
பூலோகத்துஉள்ளே புகழ்ந்துமனுஷர்க்குஉரைத்தாள்
விரதம்இருந்து விஸ்தாரம் செய்துவைத்தாள்
எந்தன்பிறப்பை எடுத்துஉரைக்க யாரும்இல்லை
சிவனாரும்அப்போது சிந்தையிலேமிகநினைத்துப்

பார்வதி அம்மாளைப்பக்கத்தில் தான்அழைத்து
புத்திர நற்பிறப்பைப் பூவைமிகநீயும்
பூலோகம்தான் அறியப்போய்ச்சொல்லும் என்றுஉரைத்தார்
பார்ப்பாத்திவேஷம் புகுந்தாளே பார்வதியும்
கையில்பிரம்பும் கனத்ததொருபுத்தகமும்
தான்எடுத்துக்கொண்டு சதிராகவந்திருந்து
ஏதுக்கு நீயும் இளைப்புடனே இருக்கின்றாய்
என்னுடனேநீயும் உரைத்திடுவாய்உத்தமியே
அமராவதியாள் அறிவு மிகஉண்டாகி
நாயனார் திருநோன்பு நாங்கள்இருக்கின்றோம்
அவருடையபிறப்பை அறிவிப்பார்இல்லாமல்
தயங்கிறோம்என்றாள் தாமக்குழலாளும்
அப்போது பிராமணியும்அவிழ்த்தாளே புத்தகத்தைக்
கேளுங்கள் இக்கதையைக் கிருபையுடன்சொல்லுகிறேன்
நாட்டுக்கணக்கர் நமனார்பெருங்கணக்கர்
பூலோகத்துள்ளே புகழார்ந்தமனுஷருக்கு
நன்மையும்தின்மையும் நடுஎழுதவேணும்என்று
எமதருமர்வாயிலிலே இருந்துகணக்குஎழுதுவதும்
பிறப்பும்வளர்ப்பும் பேரானநல்வளமும்
தவத்தாலே வந்தகதை தானேஉரைத்திடுவாள்
தவத்துஅருமை கண்டு சந்தியாய்வந்ததுவும்
பசுவின்வயிற்றில் பாலன்பிறந்ததும்
சம்புதலத்தில் தாமரையாய்இருந்ததும்
எல்லாக்கதையும் எடுத்துஉரைத்தாள் பிராமணியும்
புத்தகமும்தானும் பொன்னின்எழுத்தாணியுடன்
கேட்டோர்கள்எல்லோரும் கிருபையுடனேஇருந்து
தண்டன்இட்டுத் தான்பணிந்து திருநீறு வாங்கிஇட்டார்
சாந்து சவ்வாது சந்தனமும் தான்கொடுத்தார்
அடைக்காயும் வெள்இலையும் அன்புடனே தான்கொடுத்தார்
மாலைகழுத்தில்இட்டார் மண்டலம் எல்லாம்அறிய
ஆபரணபூஷணமும் அன்பாக தான்கொடுத்தார்
இப்படியேவரிசை பெற்று ஏகினாள்பார்வதியும்
புத்திரனாரிடத்திற்குப் போனதொரு சேதிஎல்லாம்
சிவனாரும்கேட்கச் சிந்தை களிகூர்ந்து
செப்பினாள்பார்வதியும் சேதிஒன்றுதப்பாமல்
பூலோகம்தோன்றப் போனதுஎல்லாம் சொன்னவுடன்
புத்திரரும்அப்படியே புகழ்ந்துமிகத்தொழுது
எமரிடம்வருவதற்கு ஏற்ற விடைவாங்கி
புத்திரரும்வந்து புகழ்ந்துமே தான்இருந்தார்
இந்தக்கதையை இன்பமாய்க் கேட்டவுடன்

அமராவதியாளுக்கு அறிவுமிகஉண்டாகிச்
செல்வங்கள் எல்லாம் சேரவேஉண்டாகி
நாளுக்குநாள்அதிகம் நன்றாய்த் தழைத்ததுகாண்
கேட்டபேர்எல்லோரும் கிளைகளுடன் வாழ்ந்திருந்தார்
நினைத்தபடிமுடித்து நீடூழிவாழ்ந்தார்கள்
அமராவதியாளுக்கு ஆண்டு பலசென்றதுவே
நோன்புகள் செய்யாருக்கு நூறு ஆண்டு சென்றஉடன்
சித்திரபுத்திரரும் சிந்தைதனிலேதெரிந்து
நோன்புமறவாமல் நூறுஆண்டும் தான்இருந்தாள்
அவளையும்இங்கே அழைக்க வேணும்என்று
கூட்டோடே சொர்க்கத்தில் கூட்டி வரவேணும்என்று
பூந்தேர்அனுப்பினார் புண்ணியனார் அன்புடனே
அந்நேரம்தானும் அமராவதியாளும்
நூறு வயதுஅளவு நோன்புவிடாது இருந்ததனால்
சிவலோகம்போகிறேன் சகத்துஉள்ளபுண்ணியரே
நோன்புவிரதத்தை நுணுக்கமாய்த் தான்அறிந்து
ஆண்டாண்டுகள் தோறும் அன்பாகத்தான்இருந்து
கிருபைபெறவே இருந்து கேளுங்கள்இக்கதையைப்
பயபக்தியாய்இருந்து பலன்பெறுங்கள் புண்ணியரே
என்றுமிகச்சொல்லி ஏற்றதொருஉத்தமியும்
அந்தியகாலம் அடுக்கவேவந்திடவே
தானதருமங்கள் தயவாகத் தான்கொடுத்தாள்
பிராமண போஜனங்கள் பிரியமாய் நடத்தி வைத்தாள்
சிவபூசை குருபூசை செய்துமே தான்முடித்துக்
கூட்டோடே சொர்க்கத்தில் கூடுகிறேன் எனஉரைத்தாள்
இந்தப் படிசொல்லி இருக்கும்தறுவாயில்
அந்நேரம் வந்ததுகாண் அழகான பூந்தேரும்
அமராவதியும் அவள் தர்மராஜாவும்
இருபேரும் ஒன்றாய்ஏறினார் தேர்மீதில்
சிவகணங்கள் வந்து தேர் கொண்டுபோனார்கள்
பூமாரியாகப் பொழிந்தார்கள் அந்நேரம்
பரமசிவனும் பார்வதியும் இது கண்டு
சொர்க்கத்துவாசலையும் திறக்கவே சொன்னார்காண்
சித்திரபுத்திரரைச் சென்றுமே தண்டன்இட்டு
சிவனோடுஉமையாளைச் சேரவே தண்டன்இட்டு
சிவனாரிடத்தில் செப்பினாள் உத்தமியாள்
தருமங்கள்செய்ய இன்னும் தரணிதனில்பிறக்க
புத்திரரும்அப்படியே பொருந்திப் பிறப்பதற்குப்
பிரமாவைப்பார்த்துப் பிறப்பிக்கச் சொல்லினர்காண்
அந்நேரம்பிரமாவும் அகமகிழ்ந்து கொண்டாடி

தலைமகளாகவே பிறப்பித்தார் அந்நேரம்
தருமராசாவையும் தலைமகனாய்ப் பிறப்பித்தார்
ஒருவர்க்குஒருவர் ஒப்புரவாய் வாழ்ந்திருந்தார்
அந்தப்பிறவியிலும் அப்படியே தானதருமம்
புண்ணியங்கள்எல்லாம் புகழ்ந்துநடத்தினர்காண்
அன்னக்கொடிகட்டி அடைவாகத் தான்வாழ்ந்து
தவறாமல்நோன்பு தான்இருந்தார் அது பார்த்து
ஆனபடிவாழ்ந்தே ஆண்டு நூறானபின்பு
சித்திரபுத்திரரும் தேரை அனுப்பினார் காண்
கூட்டி வந்து விட்டார்கள் குற்றம்இல்லை இருவரையும்
இன்னமும்தான் பிறக்கவேணுமோ ஏந்திழையே
என்று சித்திரபுத்திரர் இதமாகத்தான்கேட்க
இறப்பதும் பிறப்பதும் இனிஎனக்கு ஆகாது
கலியுகங்கள்வந்து கலந்ததே புண்ணியரே
நட்சத்திரபதவி நலமாக அருளும்எனச்
சிவனாரிடத்தில் அவர்செய்திகள் தான்உரைத்து
அந்நேரம்பிரமா அப்படியே செய்துவைக்க
நட்சத்திரப்பதத்தில் நன்றாக வாழ்ந்துஇருந்தார்
சிவனாரிடத்தில் அவர் செய்திகள் தான்உரைக்க
இந்தக்கதையை எடுத்து உரைக்கக் கேட்டவர்கள்
ஆல்போல்தழைத்து அறுகுபோல் வேர்ஊன்றி
மூங்கில்போல் அன்னைசுற்றம் முசியாமல்வாழியவே
பூலோகம் எல்லாம் பொருந்த மிக வாழியவே
எல்லோரும்நன்றாய் இனிதாகவாழியவே
சித்திரபுத்திரனார் சீமானும் வாழியவே
பொன்னின்எழுத்தாணியுடன் புத்தகமும் வாழியவே
நிலத்துஉள்ள மாந்தர் நெடுங்காலம்வாழியவே

(முற்றும்)